
# வாசகர்கள் விமர்சகர்கள்



சோலைக்கிளி

# வாசகர்கள் —— —— விமர்சகர்கள்

வல்லிக்கண்ணன்

- சோலைத் தேனீ -

பாரதி சோலை டிரஸ்ட்

காட்பாடி - 632 007

SOLAI THENI
SOLAI RESOURCE CENTRE
FOR
KNOWLEDGE TRANSFER IN PEOPLE'S LANGUAGE

Journalism Series : 2

# READERS & CRITICS

BY
VALLIKANNAN

First Edition 1987

விலை ரூ 15

Pages : 176

Cover design
**Nirmal Arts** - Katpadi

அனைத்து உரிமைகளும்
பாரதி சோலை டிரஸ்ட்
6, அண்ணா தெரு
செங்குட்டை — காட்பாடி 632 007

SCTP - PRESS . SOLAI . Christianpet.

# முன்னுரை

இது தமிழில் ஒரு வித்தியாசமான புத்தகம். தமிழ் நாட்டின் வாசகர்கள், அவர்களது இயல்புகள் பற்றிய கண்ணோட்டமாகவும், தமிழ் விமர்சகர்கள் பற்றிய விமர்சனமாகவும் இப்புத்தகத்தின் பகுதிகள் எழுதப்பட்டிருக்கின்றன.

'சோலைத் தேனீ' வெளியிட்டுள்ள எனது முந்தைய புத்தகத்தில் கூறியுள்ளபடி, முதலில் நான் ஒரு வாசகன். ஒரு இலக்கியவாதி. அத்தன்மையில் ஐம்பது வருடங்களுக்கும் மேலாகவே நான் கண்டு உணர்ந்த உண்மைகளையும் மனப்பதிவுகளையும் இங்கே தொகுத்துத் தந்திருக்கிறேன்.

'எழுத்தாளர்கள், பத்திரிகைகள் - அன்றும் இன்றும்' என்ற புத்தகத்துக்குப் பிறகு தமிழ் நாட்டின் வாசகர்கள், விமர்சகர்கள் குறித்தும் நான் ஒரு புத்தகம் எழுத வேண்டும் என்று திரு. தி. க. சிவசங்கரனும், திரு. ஆர். டி. ராஜனும் என்னை கேட்டுக் கொண்டார்கள். அவர்களுக்கு என் நன்றி.

தமிழில் வித்தியாசமான புத்தகங்களை - தனிமனிதப் பண்பாட்டு உயர்வுக்கும் சமூக மேம்பாட்டுக்கும் உதவக் கூடிய சிந்தனை நூல்களை - துணிந்து வெளியிடும் அமைப்பாக 'சோலைத்தேனீ' செயல்படுகிறது. அதன் ஆசை நிறைந்த திட்டங்கள் வெற்றி பெற வேண்டும். வெற்றி பெறுக என வாழ்த்துகிறேன்.

'இருட்டு. சூழ எங்கினும் இருட்டு' என்று புலம்பிக் கொண்டிருப்பதை விட, சிறிதளவு வெளிச்சமேனும் பரப்பக்கூடிய மெழுகுவர்த்தியை ஏற்றி வைப்பது நற்பணி ஆகும்.

அந்த எண்ணத்தோடு தான் இந்தப் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

வல்லிக்கண்ணன்

# அணிந்துரை

ஆர். டி. ராஜன்
இயக்குநர்
சோலை இயக்கம்

பொதுச்செயலாளர்
தமிழ்நாடு எழுத்தாளர் உறவு
காட்பாடி – 632 007

O

இந்திய சமூக வாழ்க்கை மேம்பாட்டை இலட்சிய மாகக் கொண்ட சோலை இயக்கத்தின் ஆதரவு அமைப்புகளுள் ஒன்றான பாரதி சோலை டிரஸ்ட் சோலைத் தேனீ வெளியீடுகளின் வழியாக ஆக்கம் மிகுந்த தமிழ்ப்பணி ஆற்றி வருகிறது. ''வாசகர்களும் விமர்சகர்களும்'' என்ற இந்நூல், இப்பணி வழியாக தமிழ் இதழியல் துறைக்கு கிடைத்த ஒரு பயனுள்ள படைப்பு.

எழுத்தாளர்கள் – பத்திரிகைகள் என்ற நூலைப் படைத்த பழம் பெரும் எழுத்தாளர் வல்லிக்கண்ணன் அவர்களே இந்நூலையும் ஆக்கியது தமிழுக்கு ஒரு சிறப்பு.

தரம் மிகுந்த வாசகர் சக்தியை தமிழகத்தில் வளர்ப்பது, மக்கள் முன்னேற்றப் பணியில் இன்று ஒரு முன்னுரிமைப் பணி ஆகிவிட்டது. சோலை இயக்கம் இதனை உணர்ந்து செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு எழுத்தாளர் உறவு (Movement of writers for people's development) என்ற முற்போக்கு எழுத்தாளர் அணியும் இதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளது.

வித்தியாசமான இப்படைப்பிற்கு உரிய ஆதரவு கிடைக்கும் என்று நம்புகிறோம்.

—ஆர். டி. ஆர்

இதழியல் வரிசையில் எங்கள் முதல் வெளியீடு

## எழுத்தாளர்கள் பத்திரிகைகள்
## — அன்றும் இன்றும்

ஆசிரியர்: வல்லிக்கண்ணன்

### அந்நூலைப் பற்றி
### எழுத்தாளர்கள் / பத்திரிகைகளின்
### கருத்துக்கள்

O சிறந்த புத்தகம்: 50 ஆண்டுகளின் எழுத்தாளர்கள் பத்திரிகைகளின் அகராதியாகும். இப்புத்தகம் அனைவரிடமும் இருக்க வேண்டும்.

முயற்சிக்குப் பாராட்டுக்கள் - வாழ்க அவரின் தொண்டு.

— சர்வோதயம்

O விடுதலைக்கு முன்னும் பின்னும் பத்திரிகைகளின் போக்குகள் பற்றியும், எழுத்தாளர்களைப் பற்றியும் பல செய்திகளைத் தருகின்றன. இலக்கியமே வாழ்வான — வல்லிக்கண்ணனின் அரை நூற்றாண்டு அனுபவம் தோய்ந்த விமர்சனம்.

— தாய்

O 'எழுத்தாளர்கள் பத்திரிகைகள்' எழுதிக் கொண்டிருப்பவர்களுக்கும் எழுத விரும்புகிறவர்களுக்கும் பயன்படக் கூடிய நல்ல புத்தகம்.

நீல. பத்மநாபன்
திருவனந்தபுரம்

O மிக அருமையான மிகப் பயனுள்ள நூல்: இதை வெளியிட்ட 'சோலைத்தேனீ' யைப் பெரிதும் பாராட்டுகிறேன். இது போன்ற படைப்புகள், பல இளம் எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் வழிகாட்டியாக அமையும் என்பது உறுதி.

தி.க.சி.
சோவியத்செய்தித் துறை — சென்னை

O பழம் பெரும் எழுத்தாளரும், தமிழ் எழுத்துலக ஜாம்பவானுமாகிய வல்லிக்கண்ணன் கருத்துரைகளை ஒட்டு மொத்தமான ஒரு நூல் வடிவில் தந்து என் போன்றவர்க்கு மனநிறைவை தந்த, உங்கள் வெளியீட்டுப் பணி சிறப்பானது.

ஆ. மாதவன்
திருவனந்தபுரம்

O பெருஞ்சீரகம், கசகசா, சோம்புப் பட்டை எல்லாம் அரைத்துக் கலக்கி மசாலா கமகமக்க வருகிற புத்தகங்களுக்கிடையே, சரித்திர அனுபவப் பூர்வமான உண்மைகளை பதிவு செய்கிற எழுத்தை வெளியிட முன் வருவது, லாப நஷ்டம் பாராத அக்கறையான காரியமல்லவா?

... வண்ணதாசன்

"......This interesting, though painful-reading, analogy brought in by **Valikkannan** perhaps correctly portrays the degeneration not only in the standards of Tamil magazines and publications but also in the taste of the Tamils and their cultural values.

As a keen observer of Tamil life for well over five decades and as one, for whom "writing reading and travelling are more a way of life", Vallikkannan is fit enough to comment on 'writers and magazines,' whose role in any society is crucial.

In this small volume, he makes a rapid survey of Tamil journalism since the days of the great pioneer Poet **Subramanya Bharathi** and records his considered views on its varied aspects, which stand testimony to his rich experience and probing mind.

Vallikkannan wants the well-meaning people among the writers, readers and the publishers to awaken, before commercialism and consumerism drive Tamil journalism to the point of no-return. Development of healthy criticism through a network of spirited readers forums and a resolve by at least a few of the successful commercial magazines and publishers to allot atleast a few pages for good, standard pieces of writing might help stem the rot, he feels.

As a veteran writer, he gives several useful hints to prospective writers........."

— **Indian Express**

# 1

வட்டமிட்டு அமர்ந்தார்கள் வாசகர்கள், இளைஞர்கள். ஒன்றிரண்டு வயது வித்தியாசமே பெற்றிருந்த சமதரத்து வாலிபர்கள்.

பள்ளியின் உயர் வகுப்புகளில் படிப்பவர்கள்; படித்து விட்டு வேலை இல்லாது 'சும்மா இருப்பவர்கள்'; முனிசிபல் ஆபீசில் வேலை தேடிக் கொண்ட ஒருவர்— இப்படியாக ஆறு பேர்கள்.

ஒருவர் கையில் பருமனான ஒரு புத்தகம் இருந்தது. அதை அன்றைக்கே படித்து முடித்து விட வேண்டும் என்ற பரபரப்பு அவர்கள் ஒவ்வொருவருக்கும் இருந்தது.

ஆனால், ஒரே புத்தகத்தை எத்தனை பேர் ஒரே சமயத்தில் படிக்க இயலும்?

அதற்கு அவர்கள் ஒரு வழி கண்டிருந்தார்கள்.

ஆறு பேரும் வட்டமாக உட்காருவது, ஒருவர் புத்தகத்தை உரக்க வாசிக்க வேண்டும். மற்றவர்கள் கேட்டு ரசிக்க முடியும் அல்லவா? 'கேள்வி ஞானம்' போதுமே நாவலை ரசிப்பதற்கு!

ஆமாம். அவர்கள் படிக்கத் துடித்தது விறுவிறுப்பான ஒரு நாவல் தான். வடுவூர் துரைசாமி அய்யங்கார் எழுதிய 'பூரண சந்திரோதயம்'.

அது மிகப் பெரிய நாவல். ஐந்து பாகங்கள் கொண்டது. சி. டபிள்யூ. எம். ரெய்னால்ட்ஸ் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய 'தி மிஸ்டரீஸ் இன் தி கோர்ட் ஆஃப் லண்டன்' என்ற நாவலைத் தழுவி, தமிழ் நாட்டுச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப எழுதப்பட்டிருந்தது.

அதைப் படித்திருந்த பெரியவர்கள், 'சின்னப் பையனாக — அதிலும் பள்ளிக்கூடத்திலே படிக்கிறவங்க— இது மாதிரி நாவல்கள் எல்லாம் படிக்கக் கூடாது' என்று கண்டிப்பான தடை உத்தரவு போடுவது வழக்கம்.

எந்தப் பையனாவது அது போன்ற நாவலை வீட்டில் வைத்துப் படித்தான் என்றால், அதை அப்பாவோ மாமாவோ அல்லது பொறுப்புள்ள பெரியவர் எவரோ கண்டு விட்டார் என்றால், ஆபத்துதான்.

படக்கென்று புத்தகத்தைப் பிடுங்கி வெளியே விட்டெறிவார். ஆத்திரத்தோடு கிழித்துப் போடவும் கூடும். பையனுக்கும் 'பூசைக் காப்பு' கிடைக்கும்.

இதனால் எல்லாம், அது போன்ற நாவல்களை அவசியம் படிக்க வேண்டும் என்ற ஆசைக்கனல் ஒவ்வொரு வாலிபனுள்ளும் உயிர்த்துக் கொண்டிருந்த காலம் அது.

ஆசையைத் தூண்டும் நாவல்கள் இல்லாமலா போயின? வடுவூர் துரைசாமி அய்யங்காரே டஜன் கணக்கில் எழுதி வெளியிட்டிருந்தாரே!

'வெண்கலச் சிலை அல்லது கன்னியின் முத்தம்' (ரெயினால்ட்ஸின் 'தி பிரான்ஸ் ஸ்டேச்சு ஆர் தி விர்ஜின் கிஸ்' தழுவல்), 'காளிங்கராயன் கோட்டை ரகசியங்கள், கும்பகோணம் வக்கீல் அல்லது திகம்பர சாமியாரின் துப்பறியும் லீலைகள்' –இப்படிப் பல,

அவை எல்லாம் அந்த நகரத்தின் முனிசிபல் வாசக சாலையில் இருந்தன. அவற்றை ஒவ்வொன்றாக எடுத்து வந்து படிக்கிற உரிமை கிளார்க்காக அங்கே சேர்ந்திருந்த இளைஞனுக்கு இருந்தது. அந்த உரிமையைப் பயன்படுத்த அவன் தயங்கவில்லை.

அவனுடைய நண்பர்கள் அனைவரும் அத்தனை புத்தகங்களையும் படிக்க ஆசைப்பட்டார்கள். அதற்கான சுலப வழி தான் அவர்கள் கையாண்டது.

நண்பர்களில் ஒருவன் வீட்டில் எந்தவிதமான கட்டுப்பாடும் இருந்ததில்லை. அப்படி கண்டிப்பதற்கு அப்பாவோ, விவரம் தெரிந்த கார்டியன் எவருமோ இல்லை. அம்மா இருந்தாள் - பையன்கள் மீது அவளுக்கு நம்பிக்கை. அவர்கள் நல்லவர்கள்; தப்பான காரியம் எதுவும் செய்ய மாட்டார்கள் என்று.

எனவே சுதந்திர மடம் போல் விளங்கியது அந்த வீடு. நண்பர்கள் பலரும் இஷ்டத்துக்கு வந்தார்கள், போனார்கள். லீவு நாட்களில் பொழுது போவதற்காக, சீட்டு விளையாடினார்கள். சிலசமயம் 'வனபோசனம்' (எக்ஸ்கர்ஷன்) என்று ஆற்றங்கரைக்குப் போய் விரும்பிய சிற்றுண்டி தயாரித்து சாப்பிட்டு மகிழ்ந்தார்கள். கிடைத்ததை எல்லாம் படித்தார்கள்.

படிப்பதற்கு நாவல்கள் நிறையவே கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டதும், குறுகிய காலத்தில், துரிதமாக, மிக அதிகமான நாவல்களைப் படித்து முடிக்க வேண்டும் என்று திட்டம் தீட்டினார்கள்.

வட்டமாக அமர்ந்து, ஆளுக்கு இத்தனை பக்கங்கள் வாசிப்பது என முறை வைத்துப் படிப்பது. இதன் மூலம், படிப்பவருக்கும் அலுப்புத் தட்டாது; ஒரே சமயத்தில் ஒரு புத்தகத்தைப் பல பேர் படித்து, கதையை தெரிந்து கொள்ளவும் முடியும்.

இந்த உத்தியை வெற்றிகரமாக அமுல் நடத்தினார்கள். வடுவூர் நாவல்கள் அனைத்தையும் படித்தார்கள். தொடர்ந்து, ஆரணி குப்புசாமி முதலியார், ஜே. ஆர். ரங்கராஜு, வை. மு. கோதைநாயகி அம்மாள் நாவல்கள் சுவாரஸ்யமாக வாசித்து முடிக்கப்பட்டன.

சில நாட்களில் ராத்திரி 12 மணி 1 மணி வரைகூட இந்தப் படிப்பு நடைபெறும். முறை வைத்து வாசித்து, கதை கேட்டதனால் ரசனைச் சுவை குறையுமா?

அதொன்றும் இல்லை. மறுநாள் நாவலின் கதாபாத்திரங்கள் குறித்து, கதைப்பின்னல்கள்- மர்மங்கள்- பாத்திரங்களின் சாகசங்கள் பற்றி எல்லாம் சுவையாகப் பேசி மகிழ்வார்கள்.

திகம்பர சாமியாரின் சாமர்த்திய வேலைகளும், வடுவூராரின் வர்ணனைத் திறமும், வை. மு. கோதை நாயகியின் பாலாமணி அல்லது பக்காத் திருட'னில் உள்ள திகில் கட்டங்களும், ஜே. ஆர், ரங்கராஜுவின் சந்திர காந்தா' நாவல் பண்டார சன்னிதிகளின் மோசவேலை களை அம்பலப் படுத்துவதையும், மற்றும் அவை போன்ற ரசமான விஷயங்களையும் நினைத்து நினைத்து ரசித்துப் பேசுவது அவர்களுக்கு இனிய பொழுது போக்காக அமைந்தது.

1930-களின் முதல் பாதியில் நிகழ்ந்த விஷயம் இது. அப்பொழுது -1920 களிலேயே — இந்த ரகமான நாவல்கள் வாசகர்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றிருந்தன.

சிறிதளவு படிக்கத் தெரிந்தவர்கள் கூட, கிராமங்களில் கூட, வடுவூர், ஆரணி, ரங்கராஜு, கோதைநாயகி நாவல்களை விரும்பிப் படித்திருந்தார்கள். 'தாம் பெற்ற இன்பம்' சின்னப் பையன்கள் பெற்று விடக் கூடாது என்று விழிப்பாகவும் இருந்தார்கள். 'நாவல்களைப் படிக்கக் கூடாது. அவை மனசை கெடுத்துவிடும்! என்று உபதேசிக்கவும் செய்தார்கள்.

ஆங்கிலக் கல்வி பெற்றிருந்தவர்களும், உயர் நிலைப் பள்ளியில் அறவொழுக்கம் கற்றுத் தந்த உபாத்திமார்களும், எச்சரிக்கத் தவறுவதில்லை.

இங்கிலீஷில் மலிவு விலை நாவல்கள் நிறைய இருக்கின்றன. ஸிக்ஸ் பென்னி நாவல்ஸ் என்று அவற்றை பென்னி ட்ரெட்ஃபுல்ஸ் (ஆறணா பயங்கரங்கள்) என்றும், ஷில்லிங் ஷாக்கர்ஸ் (அரைரூபாய், ஒரு ரூபாய் அதிர்ச்சிகள்) என்றும் குறிப்பிடுவார்கள். அந்த மலிவுரக நாவல்களை காப்பி அடித்து எழுதப்படுகிறவை இந்த தமிழ் நாவல்கள். இவை அறிவைக் கெடுக்கும். நல்லொழுக்கத்தை நாசப்படுத்தும். தீய சிந்தனை களை உண்டாக்கும். கெட்டுப் போகவும், கேடுகள் புரியவும் தூண்டும் என்ற ரீதியில் அச்சம் ஊட்டுவார்கள்.

என்றாலும், அது போன்ற நாவல்களை -மர்மம், காதல், காமலீலைகள், பலாத்காரம், வீரசாகசம், துப்பறி வேலைகள், விறுவிறுப்பான கதைப்போக்கு எல்லாம் நிறைந்த தமிழ் நாவல்களை,- படிக்கத் தெரிந்தவர்களும் படிக்கப் பொழுது இருந்தவர்களும் தேடி எடுத்து விரும்பிப் படிக்கத் தான் செய்தார்கள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்களது நாவல்கள் தவிர, வேறு சில தனி நபர்களின் ஒன்றிரண்டு படைப்புகளும் வாசகர்களை கவர்ந்திருந்தன. தனசிங் என்பவர் எழுதிய 'கருங்குயில் குன்றத்துக் கொலை' என்ற பரபரப்பு நாவல் அதிகம் படிக்கப் பட்ட புத்தகங்களில் ஒன்று.

தமிழ் நாட்டில் அந்த நாவல் பெற்றிருந்த வெற்றி, அதைப் போலவே மற்றும் பல கொலை

நாவல்கள் எழுதப்படுவதற்கு உந்துதலாக அமைந்து இருந்தது.

கிராமங்களிலும் நாவல் படிப்பவர்கள் மட்டுமல்ல, படிப்பவர்களை ரசித்துப் பேசி மகிழும்படி தூண்டுகிற நாவல்களை எழுதி வெளியிடக் கூடியவர்களும் 1920 களிலேயே இருந்திருக்கிறார்கள்.

குருமலை பொன்னுசாமி பிள்ளையும், அவர் எழுதிய 'பொற்றொடி' என்ற நாவலும் இதற்கு ஒரு உதாரணமாகக் கூறப்படலாம்.

இந்த விதமான நாவல்கள் எல்லாம் கதைச் சுவையையே முக்கிய ஜீவனாகக் கொண்டிருந்தன. மக்கள் விறுவிறுப்பான கதை ஓட்டத்தை, அப்புறம் என்ன நடந்தது — மேலே என்ன நடக்கும் என்று உளக்கிளர்ச்சியையும் அறியும் அவாவைத் தூண்டி விடுகிற சம்பவக் கோவையையே பெரிதும் விரும்பும் இயல்பினர் என்பதை இவை சுட்டிக்காட்டின.

ஒருவர் படிக்கப் பலர் கேட்டு ரசிப்பது என்பது புதிய உத்தி ஒன்றுமில்லை. இந்த நாட்டில் பெரிய புராணமும், ராமாயணமும், மகாபாரதமும், திருவிளையாடல் புராணமும், விக்கிரமாதித்தன் கதை, மதனகாமராஜன் கதை; மற்றும் அல்லி அரசாணி, பவளக்கொடி, புலந்திரன்களவு, நளதமயந்தி போன்ற பலப் பல கதைகளும் இந்த விதமாகத் தான் படித்து அறியப்பட்டிருந்தன.

படிக்கத் தெரிந்தவர்கள் குறைவாக இருந்தார்கள். புத்தகங்கள் அதிகம் அச்சிடப் பட்டதில்லை. அச்சான

நூல்கள் பரவலாக எங்கும் எட்டக்கூடிய வசதிகள் இருந்ததுமில்லை. எனவே, வாசிப்பவர் குறைவாகவும் கேட்பவர்கள் அதிகமாகவும் இருந்தார்கள்.

ஆயினும், சுவாரஸ்யமான கதைப்புத்தகங்கள் நாடு நெடுகிலும் பரவலாக அறிந்து கொள்ளப்பட்டிருந்த தாகவே தோன்றியது. 'ஆயிரம் தலை வாங்கிய அதிசய சிந்தாமணி' 'தமிழ் அறியும் பெருமாள்' போன்ற புத்தகங்கள் நகரங்களிலும் கிராமங்களிலும் அறிமுகமாகி யிருந்தன. அவற்றின் கதைகளை சுவைபடக் கூறக்கூடிய ரசிகர்களும் அங்கங்கே இருந்தார்கள்.

வேறு விதமான புத்தகங்கள் வாசகர்களிடம் செல்வாக்கு பெற்றிருந்ததில்லையா? இச்சந்தேகம் இயல்பாக யாருக்கும் எழக் கூடும்.

திரு. வி. கல்யாணசுந்தரனார், ரா. பி. சேதுப்பிள்ளை போன்ற தமிழ் அறிஞர்கள் எழுதிய நூல்கள் ஒரு சாராரிடையே நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தன. மறைமலை அடிகள் தனித்தமிழ் நடையில் எழுதி வழங்கிய நூல்களை விரும்பிப் படிக்கக் கூடிய வாசகர்களும் நாட்டில் இருந்தார்கள்.

இத்தகைய தமிழ் அறிஞர்களின் நூல்களே 'இலக்கியங்கள்' என்ற மதிப்பைப் பெற்றிருந்தன அந்தக் காலத்திலே.

பொதுவாக, கம்ப ராமாயணம், திருக்குறள், சங்க காலப் பாடல்கள், பழம் செய்யுள்கள் ஆகியவற்றை

விரித்துப் பொருள் உரைத்து விளக்கி எழுதப்பட்ட கட்டுரைகளும் நூல்களுமே வெகுகாலம் வரை இலக்கியம் என்ற சிறப்புப் பெயரையும் தகுதியையும் பெற்றிருந்தன.

நாவல்களும், சிறு கதைகளும், சிந்தனைக் கட்டுரைகளும் இலக்கியத் தகுதி பெற முடியும்-அவையும் இலக்கிய அந்தஸ்து பெறக் கூடியவை, பெற வேண்டியவை என்ற நிலை தமிழ் நாட்டில் வெகு காலத்துக்குப் பின்னரே ஏற்பட்டது.

1930 களின் ஆரம்பத்திலும், அதற்கு முன்னரும் 'இலக்கியப் பத்திரிகைகள்' என வெளிவந்தவை கூட இப்படிப்பட்ட விஷயங்களையே பிரசுரித்துக் கொண்டு இருந்தன. ஆனந்த போதினி, செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி ஆகிய பத்திரிகைகள் தமிழ் இலக்கியப் பிரியர் களிடமும், கவுரவமும் கல்வித்தரமும் உடைய வாசகர் களிடமும் ஆதரவு பெற்றிருந்தன.

நாவல்களை, பகுதி பகுதியாக, மாதப் பத்திரிகைகளில் தொடர்ந்து பிரசுரிக்கும் முயற்சிகளும் இருபதுகள்- முப்பதுகள் காலகட்டத்திலேயே நடை முறையில் காணப்பட்டன.

வடுவூர் துரைசாமி அய்யங்கார் நாவலின் பகுதிகளை வெளியிடுவதற்காகவே 'மனோரஞ்சிதம்' என்ற மாதப் பத்திரிகை நடத்தப்பட்டது.

'ஆனந்தபோதினி' இதர கட்டுரைகள், கதைகளுடன் ஆரணி குப்புசாமி முதலியாரின் நாவல்களை தொடர்ந்து வெளியிட்டு வந்தது.

வை. மு. கோதைநாயகி அம்மாள், தனது நாவல்களைப் பகுதி பகுதியாக எழுதித் தொடர்ந்து வெளியிடுவதற்காக, சொந்தப் பத்திரிகையாக, 'ஜகன் மோகினி' என்ற மாசிகையை நடத்தி வந்தார்.

இவை எல்லாம் பெரும்பாலும் சந்தாதார்களின் ஆதரவையே நம்பி வாழ்ந்தன.

இவற்றில், 'ஆனந்த போதினி' இலக்கியப் பத்திரிகை என்று பரவலாக அறியப்பட்டிருந்தது. வெகு காலம் வாழ்ந்திருந்தது. 'ஜகன் மோகனி' நாவல் பிரியர்களிடம் மட்டுமே செல்வாக்கு பெற்றிருந்தது. அவர்கள் ஆதரவினால் அது நீண்டகாலம் வாழ முடிந்தது. பிற்காலத்தில், அதுவும் வாசகர்களை திருப்திப்படுத்துவதற்காக, வேறு சிறுகதைகள், கட்டுரைகள் பொது விஷயங்கள் முதலிய அம்சங்களையும் நாவல் தொடருடன் இணைத்துத் தரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. கால ஓட்டம் அந்த வகையில் வாசகர்களின் ருசியை வளர்த்து வந்தது.

நாட்டு மக்கள் செய்திகளையும் பலவிதமான தகவல்களையும் தெரிந்து கொள்வதற்காகப் பத்திரிகைகளை நாடினார்கள்.

அவர்களின் தேவையை ஓரளவுக்குத் தீர்க்கும் பணியை தினசரிப் பத்திரிகைகள் நிறைவேற்றி வந்தன. அவையும் அதிகமாக இல்லை.

வரதராஜுலுநாயுடு என்ற தேசபக்தரை ஆசிரியராகக் கொண்டிருந்த 'தமிழ்நாடு' நாளிதழ் பரவலாக வரவேற்பு

பெற்றிருந்தது. 'சுதேசமித்திரன்' சில சில ஜில்லாக்களில் அதிகம் விற்பனையாகிக் கொண்டிருந்தது.

பாரதி பக்தரும், பாரதியாரால் 'தம்பி' என்று அழைக்கப்பட்ட பெருமையைப் பெற்றிருந்தவருமான பரலி சு. நெல்லையப்பர் 'லோகோபகாரி' வார இதழை நடத்தி வந்தார். செய்திகள், தகவல்களோடு கட்டுரை கருத்துரைகளையும் அது வழங்கி வந்தது.

அறிஞர் திரு. வி. க. வின் 'நவசக்தி' பத்திரிகையும், தமிழ் அன்பர் சொ. முருகப்பாவின் 'குமரன்', ராய. சொக்கலிங்கத்தின் 'ஊழியன்' ஆகிய வார இதழ்களும் வாசகர்களின் அறியும் அவா, தகவல் தினவு, அறிவுப்பசி, தமிழ் உணர்வு முதலியவற்றுக்கு அந்தக் காலத்திய நியதிகளின்படி, போதுமான தீனி அளித்து வந்தன.

இந்திய நாடு முழுவதுமே உணர்வு விழிப்பு ஏற்பட்டு வந்த காலம் அது. தேசீய விடுதலைப் போராட்ட உணர்ச்சி தீவிரம் பெற்றுக் கொண்டிருந்த நேரம்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்பு காந்திஜீயிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவர் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை சுற்றுப் பயணம் செய்து, தமது ஆத்மீக சக்தியால் மக்களை உணர்வு பெற்று விழித்தெழச் செய்து கொண்டிருந்தார். தமது பேச்சுக்கள் மூலமும் எழுத்துக்கள் மூலமும் நாட்டில் புத்துயிர்ப்பும் புதிய வேகமும் பரப்பினார் அவர். 'மண்ணாகக் கிடந்த மக்களுக்கு உணர்வூட்டி அவர்களை மனிதர்களாக மாற்றிய பெருமை மகாத்மா காந்திக்கு

உண்டு' என்று பிற்காலத்தில் வரலாற்றுச் சிறப்பு பெறும்படியான காரியங்களை அவர் 1930களில் செய்து கொண்டிருந்தார்.

காந்திஜீயின் வழிகாட்டுதலில் பொங்கி எழுந்த தேசிய எழுச்சி நாட்டின் ஒவ்வொரு மாகாணத்திலும், ஒவ்வொரு மொழியிலும், ஒரு மறுமலர்ச்சியைப் புகுத்தியது.

புதிது புதிதாகப் பத்திரிகைகள் தோன்றி வளர்ந்தன. மக்களுக்கு விஷயங்களை எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற ஆர்வமும் உற்சாகமும் படித்தவர்களிடமும் சிந்திக்கத் தெரிந்தவர்களிடமும் உண்டாயின. அறிவூக்கம் நாட்டிலே பரவியது. கல்வி கற்றோர் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

சிறிதளவு எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் கூடப் படித்துப் புரிந்து கொள்ளக் கூடிய விதத்தில், எளிய நடையில்- பழகு தமிழில்- எழுத வேண்டும் என்ற விழிப்பு உணர்வு எழுத்தைத் தொழிலாகக் கொண்டவர்களுக்கு ஏற்பட்டது.

சாதாரண வாசகர்களும் வாங்கிப் படிக்கக் கூடிய வகையில், மிகக் குறைத்த விலையில், பத்திரிகைகளையும் சிறு சிறு பிரசுரங்களையும் வெளியிட வேண்டும் எனும் எண்ணமும் உற்சாகமும் பலபேருக்கு வந்தது.

காலணா விலையில், 'சுதந்திரச்சங்கு' வெளிவந்தது. சங்கு சுப்பிரமணியன் அதன் ஆசிரியர். எழுதும்

ஆற்றலும், எழுத்தாளன் ஆக வளர வேண்டும், எனும் உத்வேகமும் பெற்றிருந்த இளைஞர்கள் தங்கள் எழுத்துக்களை, சங்கு வாரப் பத்திரிகைக்கு அனுப்பினார்கள்.

'சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே! அதைத் தரணிக்கெல்லாம் எடுத்து ஓதுவோமே!' என்று பாரதி வாக்கை முழக்கம் செய்து கொண்டு வளர்ந்த 'சுதந்திரச் சங்கு' வாசகர்களால் விரும்பிப் படிக்கப்பட்டது. வேகம் நிறைந்த தமிழ் நடையில், சின்னச் சின்னக் கட்டுரைகளாகவும் சிறு கதைகளாகவும். நாட்டு நடப்புகளும், விடுதலைப் போராட்ட விஷயங்களும், சுதந்திர உணர்வும், 'சுதந்திரச் சங்கு' இதழ்களில் வெளிவந்தன. கவி சுப்பிரமணிய பாரதியின் பெருமையை மக்களுக்கு உணர்த்துவதில் முன்னின்றது 'சங்கு'.

அந்நாட்களில் பாரதியின் பெருமை நாட்டு மக்களால் சரிவர உணரப்பட்டிருந்ததில்லை. பாரதியை நல்ல கவி என அங்கீகரிக்கவே மறுத்தார்கள் பண்டிதர்கள், வித்துவான்கள் புலவர்கள் வகையறா ஆங்கிலம்கற்றவர்கள் ஆங்கிலக் கவிதைகளைப் படித்து ரசித்து மகிழ்வதே கவுரவம் - பெருமை என்று கருதி வாழ்ந்தார்கள்.

சுதந்திரப் போராட்ட வேகம் பாரதி கவிதைகளை உயிர்ப்புடன் ஒலிக்க வைத்தது. விடுதலைப் போராட்ட வீரர்களும் தொண்டர்களும் ஊர்வலத்தின் போதும், சொற்பொழிவு நிகழும் இடங்களிலும், பாரதி பாடல்களை உணர்ச்சிகரமாகப் பாடினார்கள். பத்திரிகைகள் பாரதியின் தேசீயப் பாடல்களை எடுப்பாகப் பிரசுரித்தன.

போகப் போக, இதர கவிதைகளையும் சித்திர அலங்காரங்களுடன் வெளியிட்டன,

இதனால் பாரதியாரின் கவிதைத் திறமையும், அவரது கவிதைகளின் சிறப்பும் வாசகர்களுக்குத் தெரிய வந்தன.

அப்போது கூட, பாரதியார் ஒரு தேசீய கவி தான் என்று கட்சி கட்டுவதும்; இல்லை, அவர் மகாகவி என்று எதிர்வாதம் செய்வதும் தமிழ் பத்திரிகை உலகில் நிகழ்ந்தது.

'சுதந்திரச் சங்கு' வெளிவந்த காலத்திலேயே, 'காந்தி' என்ற காலணாப் பத்திரிகையும் வந்தது. இதன் ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம். அவர் வேகமும் விறுவிறுப்பும் நிறைந்த தமிழ்நடை எழுதும் ஆற்றல் உடையவர்.

'காந்தி' யைத் தொடர்ந்து 'ஜெயபாரதி' 'மணிக்கொடி' வாரப் பத்திரிகைகளும் வெளி வரலாயின.

'மணிக்கொடி' -கே. சீனிவாசன், வ. ரா; டி. எஸ். சொக்கலிங்கம் ஆகியோரால், தேசீய வார இதழாக நடத்தப் பெற்றது. காந்தீயத்தையும், பாரதி வழியையும் பின்பற்றி நாட்டின் விடுதலைக்கும் சமூக மேம்பாட்டுக்கும், தனிமனித உயர்வுக்கும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் தொண்டாற்றியது. 'மணிக்கொடி' யின் பிற்கால வளர்ச்சியும், வாழ்வும், சாதனைகளும் தனி வரலாறு ஆகி விட்டன. 'மணிக்கொடி காலம்' என்ற நூல்- பி.எஸ். ராமையா எழுதியது - அதன் சிறப்பை விளக்குகிறது.

வ. ரா. பாரதியின் சீடர். பாரதி கூடப் பழகியவர்- அவரோடு அநேக வருடங்கள் புதுச்சேரியில் வசித்தவர். பாரதியின் பெருமையை எடுத்துப் பேசுவதைத் தனது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டிருந்தவர். பாரதி மகாகவி தான் என்று முதன் முதலாக ஓங்கிக் கூறி வாதாடி அதை நிலைநிறுத்திய பெருமை வ. ரா. வுக்கே உரியது. வ. ரா. எழுதிய 'மகாகவி பாரதியார்' என்ற நூல் தான் பாரதி பற்றிய சிறந்த வரலாற்று நூலாக இப்பவும் திகழ்கிறது.

சங்கு சுப்பிரமணியன், வ. ரா. டி. எஸ். சொக்கலிங்கம் முதலியவர்களின் எழுத்துக்கள் வாசகர்களால் விரும்பிப்படிக்கப்பட்டன. எனினும் அவர்களது எழுத்துக்கள் பிரசுரமான பத்திரிகைகள் பலவும் ஆயிரம் பிரதிகளுக்கு உள்ளேயே அச்சாகின. அப்பத்திரிகைகள் தொடர்ந்து நீண்ட காலம் சேவை புரிய முடிந்ததுமில்லை.

செய்திப் பத்திரிகைகளின் தேவை அதிகரித்தது. விடுதலைப் போராட்ட நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளை மக்களுக்கு அறிவிப்பதற்கும், தலைவர்களின் கருத்துக் களைப் பரப்புவதற்கும், நாட்டு மக்களுக்கு தேசபக்தி ஊட்டுவதற்கும் தினப்பத்திரிகைகள் தேவைப்பட்டன.

இந்தியாவின் பல்வேறு மொழிகளிலும் புதிது புதிதாக நாளிதழ்களும், வாரப் பத்திரிகைளும் தோன்றுவது காலத்தின் கட்டாயம் ஆயிற்று. தமிழிலும் அவ்வாறே நிகழ்ந்தது.

1930 களின் முற்பாதியில் 'தினமணி' தோன்றி

வளர்ந்தது. டி. எஸ். சொக்கலிங்கம் அதன் ஆசிரியராகப் பணியாற்றினார்.

தினப்பத்திரிகை அளவில் பெரிதாக 'ஹனுமான்' என்ற வாரப் பத்திரிகை வந்தது. தேசீய உணர்வும், எழுத்தாற்றலும் அதிகம் கொண்டிருந்த எழுத்தாளர்கள் அதை வளர்த்தார்கள். இது 1930களின் பிற்பகுதியில்.

'சண்டே டைம்ஸ்' என்ற ஆங்கில வார இதழை நடத்திய நிறுவனம், 'ஹனுமான்' போல, 'ஹிந்துஸ்தான்' எனும் இதழைத் தமிழில் பிரசுரித்தது. சுவாரஸ்யமான தகவல்கள், செய்திகள், குறிப்புகள், துணுக்குகள், ஒரு கதை, ரசமான கட்டுரைகளுக்கு முக்கியத்துவம் அளித்த 'சண்டே டைம்ஸ்' பாணியிலேயே அது வெளிவந்தது. ஏராளமான போட்டோக்களும் அதில் இடம் பெற்றிருந்தன.

1930 களின் முற்பகுதியில் தோன்றி படிப்படியாக வளர்ந்து கொண்டிருந்த 'ஆனந்த விகடன்' அதிகமான வாசகர்களைப் பெறத் தொடங்கியது. முதலில் மாத இதழாகப் பிரசுரமான 'விகடன்' சிறிது காலத்தில் 'மாதம் இரு முறை' ஆகி, விரைவில் 'மாதம் மும்முறை' என வளர்ந்து, குறுகிய காலத்தில் வாரப் பத்திரிகையாக மலர்ச்சி பெற்றது.

'ஆனந்த விகடன்' நகைச்சுவையை ஆதாரமாகக் கொண்டு, ஜனரஞ்சகமான விஷயங்களை – கனமும் ஆழமும் இல்லாத பொழுது போக்குக் கதைகள், கட்டுரைகளை – தந்தது. அத்துடன் வாசகர்களின் கவனத்தை ஈர்த்து, அவர்களது ஆசையைத் தூண்டி,

ஆதரவைப் பெறுவதற்கு வேண்டிய உத்திகள் பலவற்றையும் அந்தப் பத்திரிகையின் அதிபரான எஸ். எஸ். வாசன் கையாண்டார். காலத்துக்குத் தக்கபடி இவ் உத்தி முறைகளை மாற்றி, வெற்றிகரமாகப் பத்திரிகையை வளரச் செய்தார்.

ஒவ்வொரு பிரதியிலும் தனித்தனி எண் அச்சிட்டு, அவற்றில் சில 'அதிர்ஷ்ட எண்கள்' எனத் தேர்வு செய்யப்பட்டு, குறிப்பிட்ட எண்கள் உள்ள பிரதிகளை அடைகிற வாசகர்களுக்குப் பரிசுகள் வழங்குவது; 'பகுத்தறிவுப் போட்டி' 'குறுக்கெழுத்துப் போட்டி' என்று விதம் விதமான போட்டிகள் வைத்து, பெரும் தொகை பரிசு அளிப்பது; முக்கிய நகரங்களில், ஏஜண்டுகளின் உதவியோடு, பத்திரிகைப் பிரதிகளை இலவசமாக வழங்கி வாசகர்களுக்கு அதன் மீது ஒரு ருசி ஏற்படுத்துவது ; இப்படிப் பல.

மேலும், பத்திரிகையின் தோற்றத்திலும், அட்டைப் படத்திலும் அழகும் வசீகரமும் சேர்க்கும் முயற்சியும் கால வேகத்தோடு சிரத்தையுடன் மேற்கொள்ளப்பட்டது.

'கல்கி' என்ற புனைபெயர் கொண்டிருந்த ரா. கிருஷ்ணமூர்த்தி 'ஆனந்த விகடன்' ஆசிரியராக அமைந்தது அந்தப் பத்திரிகைக்குக் கிடைத்த நல்வாய்ப்பு ஆகும். அதே போல, 'ஆனந்த விகடன்' பத்திரிகையும், அதன் அதிபர் எஸ். எஸ். வாசன் ஆதரவும் 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்திக்குக் கிட்டியது அவரது நற்பேறு ஆகும்.

'கல்கி' யால் 'ஆனந்த விகட'னும், 'விகட'னால் கல்கியும் பயனும் இலாபமும் பெற முடிந்தது. விகடனின் வளர்ச்சிக்கும், கல்கியின் எழுத்தாற்றல், புகழ் வளர்ச்சிக்கும் காலம் வெகுவாகத் துணைப் புரிந்தது.

தனது திறமையாலும் உழைப்பினாலும், தமிழ் நாட்டில் பத்திரிகை படிப்பவர்களின் எண்ணிக்கை பெரும் அளவில் அதிகரிப்பதற்கு, கல்கி உதவினார்.

கல்கியின் எழுத்தாற்றல் பாராட்டப்பட வேண்டிய ஒன்று. இயல்பான நகைச்சுவை அவருக்குக் கைவந்த கலையாக இருந்தது. எந்த விஷயத்தையும் -அரசியல், பொருளாதாரம், சங்கீத விஷயம், நாட்டு நடப்பு முதலிய சகல விஷயங்களையும் எளிய நடையில், நகைச் சுவையோடு, சுவாரஸ்யமாக எழுதும் திறமையை அவர் பெற்றிருந்தார். வாசகர்கள் விரும்பிப் படிக்கும் விதத்தில் சுவையான கதைகளை அவர் எழுதினார். அவர்களை வசீகரித்து, இழுத்துப் பிடித்து வைத்திருக்கும் வகையில் 'தொடர்கதை' எழுதும் சாமர்த்தியமும் அவரிடம் இருந்தது.

விளக்கக் கட்டுரைகள் போலவும், அரசியல் பிரச்னைகளுக்கு வழிகாட்டுவது போலவும் 'கல்கி' விகடனில் தலையங்கம் எழுதினார்.

'பத்திரிகையில் தலையங்கம் என்பது படிக்க வேண்டாத பகுதி. ஆனால் விகடனில் கல்கி எழுதுகிற தலையங்கம் படிக்காமல் தீராத பகுதி' என்று கல்கியின் எழுத்துத் திறமையைப் பாராட்டி, ரசிகமணி

டி. கே. சிதம்பரநாத முதலியார் எழுதியிருப்பது நினைவு கூரத்தக்கது.

'கல்கி' எழுதிய கதைகள் (பவானி பி. ஏ. பில்., திருவழுந்தூர் சிவக்கொழுந்து போன்றவை) விகடனில் நாலைந்து வாரங்கள் தொடர்ந்து வந்தன. ஒவ்வொரு வாரமும், கதையை ஆவலுடன் வாசித்த ரசிகர்கள், அடுத்த வாரம் கதை எப்படி அமையும் என்று அறியத் தவிக்கும் ஒரு துடிப்புடன் பத்திரிகையை எதிர்பார்த்-தார்கள்.

கல்கி தனது முதலாவது தொடர்கதையாக 'கள்வனின் காதலி'யை விகடனில் எழுதலானார். அதன் ஆரம்பமே வாசகர்களின் ஆவலைத் தூண்டுவதாக அமைந்திருந்தது. ஒவ்வொரு வாரமும் உரிய விறுவிறுப் போடும், 'சஸ்பென்சுடனும்' கதை வளர்ந்தது. அது வாசகர்களின் ஆர்வத்தையும் எண்ணிக்கையையும் அதிகரிக்க வைத்தது.

'ஆனந்த விகடன்' பத்திரிகைப் பார்சல் ரயில் மூலம் வந்து சேர்கிற கிழமையில், ரயில்வே ஸ்டேஷன்களில் வாசகர்கள் பரபரப்புடன் காத்திருப்பது பல ஊர்களிலும் வழக்கமாயிற்று. ரயில் வந்து, பார்சல் இறக்கப்பட்டு, ஏஜண்டு அதைப் பெற்று, பண்டிலைப், பிரித்து பிரதிகளை வெளியே எடுப்பதற்குள் வாசகர்கள் பொறுமையிழந்து தவிப்பதும் அவசரமாகப் பறப்பதும் சகஜ நிகழ்ச்சி ஆயிற்று.

ஸ்டேஷன் பிளாட்பாரத்திலேயே ஏஜன்டிடமிருந்து 'விகடன்' பிரதியை விலைக்கு வாங்கி, பரபரப்புடன்

பக்கங்களைப் புரட்டி, கல்கியின் கதையை அங்கேயே நின்று வாசகர்கள் படிக்கிற காட்சி அந்நாட்களில் வழக்கமாகி விட்ட ஒரு நிகழ்ச்சியாக இருந்தது.

இந்நாட்களைப் போல பஸ் போக்குவரத்து பரவலாக எங்கும் பெருகியிராத காலம் அது. பஸ் வசதி கொஞ்சம் கூடப் பெற்றிராத ஊர்களே மிகுதி. ரயில் தொடர்பும் குறைவு. அப்படிப்பட்ட சிறு கிராமங்களில் வசித்தவர்களில் படிக்கும் ஆர்வம் உடைய வாசகர்கள் ஆனந்த விகடனை வாரம் தோறும் தேடி வாங்கி படித்த வர்கள் பல மைல்களை நடந்துகடந்து, பக்கத்து நகருக்குப் போய் 'விகடன்' வாங்கிக் கொண்டு, திரும்பி வருகிற வழியில் ஒரு இடத்தில் அமர்ந்து கல்கியின் கதைகளைப் படித்து மகிழ்ந்தார்கள்.

இதெல்லாம் 1930களின் பிற்பாதியில் நடந்தவை. சுலபமாக விளங்கிக் கொள்ளக்கூடிய - சிரிப்பு உண்டாக்குகிற- இனி என்ன நடக்கும் என்று ஆவலைத் தூண்டக் கூடிய விதத்திலே அமைந்த, - விறுவிறுப்பான, இனிமையான, மனசுக்குப் பிடித்த, கதைச்சுவை நிறைந்த எழுத்துக்களை விரும்பி வரவேற்பதில் வாசகர்கள் என்றுமே நாட்டம் உடையவர்கள் தான்.

வாழ்க்கையின் மேலோட்டமான விஷயங்களைக் கொண்டு கதை பண்ணுகிற முயற்சிகளை— 'முடிவிலே எப்போதும் இன்பம்' என்ற தத்துவத்தை வலியுறுத்துகிற கதைகளை ஆதரிக்காத போக்கு ஒன்று உண்டு. வாழ்க் கையைக் கூர்ந்து கவனித்து, தனிமனித உணர்வுகளையும்

மனப்போராட்டங்களையும் இதர சிக்கல்களையும் மற்றும் சமூகப் பிரச்சினைகளையும் ஆழமாகவும் கவனமாகவும் எழுத்தில் சித்தரிக்கிற இலக்கியப் போக்கு அது.

இந்தப் போக்கைப் பின்பற்றும் மனம் கொண்ட சில எழுத்தாளர்களின் படைப்பு முயற்சிகளுக்கு 'மணிக்கொடி' அரங்கம் அமைத்துக் கொடுத்தது. வாரப் பத்திரிகையாக நடைபெற்று, வியாபார வெற்றிஅடையாமல் போன 'மணிக்கொடி' சிறுகதைப் பத்திரிகையாக புத்தக வடிவத்தில் மறுமலர்ச்சி பெற்று வெளிவந்தது. பி. எஸ். ராமையா அதன் ஆசிரியர்.

தமிழ் சிறுகதையை உலக இலக்கியத்தின் தரத்துக்கு உயர்த்தி, நம் மொழியை வளம் உள்ளதாக்க வேண்டும் என்ற இலட்சிய வேகத்தோடு சிறுகதைகள் எழுதிய புதுமைப்பித்தன், கு. ப. ராஜகோபாலன், ந. பிச்ச மூர்த்தி, சி. சு. செல்லப்பா ,சிட்டி' பெ.கோ சுந்தரராஜன் மௌனி முதலியவர்கள் படைப்புகள் அந்த 'மாதம் இரு முறை' வெளியீட்டில் வந்தன. புதுமையான எழுத்து முயற்சிகள் அதிகம் இடம் பெற்றன.

அந்தப் பத்திரிகையைத் தேடி வாங்கிப் படித்து ரசித்து; இதழ்களைப் பாதுகாத்து வைக்கிற வாசகர்கள் தமிழ் நாட்டில் அங்கும் இங்குமாகச் சிலர் இருந்தார்கள். எனினும், 'மணிக்கொடி' யை எதிர்பார்த்து வாங்கி விரும்பிப் படித்த வாசகர்கள் சில நூறு பேர்களேயாவர். அந்த இலக்கியப் பத்திரிகை ஆயிரம் பிரதிகளுக்கு அதிகமான விற்பனையை எட்டிப்பிடிக்க முடிந்ததில்லை.

'அவ்வ்வ்வ்வ்வளவும் கதைகள்' என்று அழுத்தமாகக் கூறிக் கொண்டு வெளிவந்த பி. எஸ். ராமையா காலத்து 'மணிக்கொடி' யும் சரி; அவர் விலகிவிட்ட பிறகு கதைகளோடு அரசியல் கட்டுரை களையும் சினிமா விஷயங்கள் மற்றும் படங்களையும் தாங்கி வந்த 'மணிக்கொடி' யும் (ப. ரா. என்ற ப. ராமஸ்வாமியை ஆசிரியராகக் கொண்டது.) சரி; வாசகர்களிடையே பெரும் அளவில் வரவேற்பு பெற முடிந்ததில்லை.

'மணிக்கொடி'யில் எழுதிய எழுத்தாளர்களின் கதைகளைப் படித்து வியந்து, 'அருமையான சிருஷ்டிகள்' என்று ரசித்து மகிழக் கூடிய வாசகர்கள் குறைவான எண்ணிக்கையிலேயே இருந்தார்கள். 'ஜனரஞ்சகமான எழுத்துக்களை' விரும்பிப் படித்த பல்லாயிரக்கணக்கான வாசகர்களுக்கு மறுமலர்ச்சி ரீதியான - இலக்கியத் தரமான – கதைகள் 'புரியாத விஷயங்களாக'த் தான் தென்பட்டன.

மேலோட்டமான தன்மை கொண்ட கதைகளையும், ஆழ்ந்த நோக்குடன் எழுதப்பட்ட கதைகளையும் வெளியிட்டு வந்தது 'கலைமகள்'. அந்த இலக்கிய மாசிகையும் 1930 களில் தான் பிறந்திருந்தது. அது, கதைகளோடு பலவகைக் கட்டுரைகளையும், சமூகத்தில் உயர் அந்தஸ்து வகித்த பெரிய மனிதர்கள் பலரது எழுத்துக்களையும் பிரசுரித்துக் கொண்டிருந்தது. வாசகர்கள் மத்தியில் அது நிதானமாக இடம் பெற்று வளர்ந்தது.

மக்களிடையே அரசியல் உணர்வு அதிகரித்து வந்ததால் அவ்வுணர்வைத் தூண்டி வளர்க்கும் விதத்திலேயே பத்திரிகைகள் விஷயங்களைத் தந்து கொண்டிருந்தன. அதற்கேற்ற வகையில் சிறு சிறு பிரசுரங்களும் வெளிவந்து வாசகர்களிடையே நல்ல செல்வாக்கைப் பெற்றன.

முக்கிய நிகழ்ச்சிகள் பற்றிய விவரிப்பு, விளக்கங்கள், தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகள் போன்றவை காலணா, அரையணா விலையில் சிறு பிரசுரங்களாக வந்து விற்பனை ஆயின.

ஓரணா விலையில், பெரிய மனிதர்கள், அறிஞர்கள், சான்றோர்களின் வரலாறுகள் எளிய நடையில் எழுதப்பட்டு பிரசுரமாயின. அவை எல்லா இடங்களிலும் விற்பனை ஆகிக் கொண்டிருந்தன.

பலரகமான விஷயங்களையும் — பயனுள்ளவை, பயனில்லாதவை அனைத்தையும்- தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அவா மனிதர்களுக்கு இருக்கிறது. மனிதர்களின் இத்தகைய உணர்வுகளுக்குத் தீனி போடுவதன் மூலம் தங்களை வளர்த்துக் கொள்வதில் கருத்தாக இருக்கிறார்கள் பலர்.

இந்த ரகத்தினர், வாசகர்களின் மனஅரிப்புக்குச் சொறிதல் சுகம் தருகிற கிளுகிளுப்பு விஷயங்களைக் கொடுத்து அவர்களைக் கிறங்க வைக்கிறார்கள். மீண்டும் மீண்டும் அந்த சுகத்தை நாட வைக்கும் போதைத் தன்மையை உண்டாக்கி விடுகிறார்கள்.

இந்தப் போக்கைக் கையாண்டு தங்களை வளர்த்துக் கொள்ளத் திட்டமிட்டு வேலை செய்தவர்கள் பத்திரிகைகள், புத்தகங்கள் பிரசுரிக்கும் துறையில் அந்நாட்களில் ஈடுபட்டிருக்கவில்லை.

வாசக மனசின் பலவீனங்களைப் புரிந்து கொண்டு, சூதாட்ட ரீதியில் போட்டிப் பரிசுத் திட்டங்களைப் பரப்பி, பத்திரிகையின் விற்பனையை அதிகரிக்கும் முயற்சிகளில் 'விகடன்' ஈடுபட்டு வெற்றியும் கண்டது என்பது ஒரு உண்மை. அதே சமயத்தில், வாசகர்களின் அறிவையும் ரசனைத் திறனையும் வளர்க்கக் கூடிய விதத்தில் உள்ளடக்கத்தை அது அமைத்து வந்தது என்பது மற்றொரு உண்மை ஆகும்.

விகட மனோபாவத்துக்கும் நோக்கிற்கும் உரிய முறையில் கதைகள் கட்டுரைகளை 'ஆனந்த விகடன்' பிரசுரித்த சமயத்திலேயே, அவை தரம் உடையனவாக, வாசகர்களின் பண்பையும் ரசனையையும் வளர்க்கக் கூடிய தரத்தில் இருக்கும்படி கவனித்துக் கொண்டது. இலக்கிய உணர்வையும் ஓரளவுக்கு அது வளர்த்து வந்தது.

'கம்ப சித்திரங்கள்' என்ற தலைப்பில் கம்ப ராமாயணத்தின் அற்புதக் காட்சிகளை பி. ஸ்ரீ. சுவையாக வர்ணித்து எழுதினார், இக்கட்டுரைகள் வாசகர்களால் பெரிதும் ரசிக்கப்பட்டன.

சங்கப் பாடல்கள், பழம் தமிழ் செய்யுள்களிலிருந்து தேர்ந்து எடுத்த பாடல்களுக்கு, அட்டையில் ஓவியம் வெளியிட்டு, உள்ளே அழகான விளக்கக் கட்டுரைகளை

விகடன் பல வருடங்கள் பிரசுரித்து வந்தது. இவற்றையும் வாசகர்கள் ரசிக்கத் தவறவில்லை.

ஆர். கே. நாராயண் ஆங்கிலத்தில் எழுதிய, பிரசித்தி பெற்ற புத்தகமான 'ஸ்வாமி அண்ட் ஹிஸ் ஃபிரண்ட்ஸ்' என்பதை 'சுவாமியும் சிநேகிதர்களும்' என்று தமிழில் விகடன் தொடர்ந்து வெளியிட்டது.

இப்படி நல்ல விஷயங்களும் கொடுக்கப்பட்டன. அவற்றை வாசகர்கள் ரசித்துப் படித்தார்கள், அவை பற்றிப் பேசியும் மகிழ்ந்தார்கள்.

அந்நாட்களில், தமிழ் நாட்டினர் இந்தி மொழி கற்றுக் கொள்ள வேண்டும் என்ற பிரசுரம் தீவிரமாக நடைபெற்றது. வாசகர்களில் இந்தி கற்கும் ஆவல் உடையவர்கள் கற்றுப் பயன் பெற வேண்டும் என்ற நோக்குடன் 'விகடன்' இதழ்தோறும் இந்திப் பாடங்களை வெளியிட்டு வந்தது. இந்தி படிக்க விரும்புவோர் ஆர்வத்துடனும் உற்சாகத்தோடும் படிக்கக் கூடிய விதத்தில் பாடங்கள் எளிய முறையில், நகைச்சுவை கலந்த கதைகளாகவும் ரசமான கட்டுரை களாகவும் தயாரித்து வெளியிடப்பட்டு வந்தன. அவற்றைப் படித்துப் பயனடைந்த வாசகர்கள் பலர் ஆவர்.

அதே போல, யோகாசனப் பயிற்சியையும் 'விகடன்' மேற்கொண்டது. ஆங்கிலப் பத்திரிகைகள் சில, வாசகர்கள் யோகாசனங்களைப் பயின்று வலிவும் வனப்பும் ஆரோக்கியமும் பெற வேண்டும் எனும்

நோக்குடன் ஆசனப் பயிற்சி முறைகளை வெளியிட்டு வந்தன. தமிழில் 'ஆனந்த விகடன்' அதை முதன் முதலாக செயல்படுத்தியது.

பெங்களூர் சுந்தரம் என்பவர் 'ஆனந்த ரகஸ்யம்' 'வலிவும் வனப்பும்' 'ஆரோக்கிய ரகஸ்யம்' என்ற தலைப்புகளில், வருடக் கணக்கில், யோகாசனப் பயிற்சிகள் மற்றும் உடல்பயிற்சி முறைகள் பற்றிதொடர்ந்து எழுதிக் கொண்டிருந்தார். படிப்பதற்குச் சுவையான விதத்தில் எழுதப்பட்ட அக்கட்டுரைகள், வாசகர்களில் மிகப் பலரை ஆசனங்களையும் இதர உடல் பயிற்சிகளையும் கற்றுக் கொள்ளும்படி தூண்டின.

வாசகர்கள் அயல்மொழிக் கதைகளின் தமிழாக்கங்களையும் ரசித்துப் படிக்கத்தான் செய்தார்கள். பத்திரிகைகள் பிறமொழிக் கதைகளின் மொழி பெயர்ப்பு-களை அவ்வப்போது தந்து கொண்டிருந்தன.

'மணிக்கொடி' இந்திக் கதைகளையும், உலகத்துச் சிறுகதைகளையும் மொழி பெயர்த்துக் கொடுத்தது. புதுமையும் நடை நயமும், அழுத்தமும் ஆழமும், சோதனைத்தன்மையும் கொண்ட விதம் விதமான கதைகள் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

'ஆனந்த விகடன்' ரவீந்திரநாத தாகூரின் 'குமுதினி' நாவலை மொழி பெயர்த்துத் தொடர் கதையாக பிரசுரித்தது. பிறகு, பிரேம்சந்த்தின் 'சேவாசதனம்' நாவலை தொடர்கதை ஆக்கியது. பெண்களும் அவற்றை ரசித்துப் படிக்கத் தவறவில்லை,

சினிமா, நாட்டிலே அப்போது தான் அடிவைத்து மெதுமெதுவாக முன்னேறிக் கொண்டிருந்தது. திரையில் பொம்மைகள் ஓடி ஆடி சாகசங்கள் பலவும் நிகழ்த்துகின்றன; அது பெரும் அதிசயம் என்ற தன்மையில் தான் சலனப்படம் மக்களை வசீகரித்தது முதலில்.

மேல் நாட்டுப் படங்களைப் பின்பற்றிய வட இந்தியப் படங்கள் தோன்றின பேசும் படம் வந்தது. தமிழ் நாட்டினரும், வடஇந்தியப் படங்களைக் 'காப்பி அடித்து' தமிழ் படங்கள் தயாரித்தனர். படங்கள் நடப்பதும், ஆடுவதும், ஓடுவதும் பெரும் ஆச்சர்யமாக இருந்ததோடு, அவை தங்களைப் போலவே பேசுகின்றன, பாடுகின்றன என்பது மிகப் பெரும் அதிசயமாகப் பட்டது மக்களுக்கு.

ஆங்கில, அமெரிக்க சினிமாப் பத்திரிகைகள் இந்தியாவில் இறக்குமதி ஆயின. அவற்றைப் பார்த்து வடஇந்தியாவில் அநேகம் ஆங்கில சினிமாப் பத்திரிகைகள் பிறந்தன. அவற்றின் தாக்கத்தால் தமிழ் நாட்டிலும் சிலர் ஆங்கிலத்தில் சினிமா சஞ்சிகைகள் பிரசுரிக்கத் துணிந்தார்கள்.

அவர்களது முயற்சிகளின் பாதிப்பினாலும், மக்களிடையே சினிமா பெற்றுக் கொண்டிருந்த ஆதரவும் ஆர்வமும் — அவற்றின் விளைவாக எழுந்த அறிந்து கொள்ளும் ஆசையும் ஏற்படுத்திய ஊக்கம் காரணமாகவும், தமிழிலும் சினிமாப் பத்திரிகைகள் தோன்றின.

படங்கள் பற்றிய செய்திகள், படவிமர்சனம், படப்பிடிப்பு சம்பந்தமான தகவல்கள் மற்றும் சுவாரஸ்யமான கதை கட்டுரைகளே சினிமாப் பத்திரிகை களில் அப்போது இருந்தன.

'முதல் தமிழ் சினிமாப் பத்திரிகை' என்று விளம்பரப் படுத்திக் கொண்ட 'சினிமா உலகம்' வெகு காலம் வரை அரையணா விலையில் விற்பனையாயிற்று. சாதாரண ரோஸ் கலர் தாளை அட்டையாகக் கொண்டு, 'நியூஸ் பிரிண்ட்' தாளில் அச்சாகி வந்தது. இங்கிலீஷ் படங்கள், இந்திப் படங்கள் பற்றிய தகவல்களுடன், தமிழ் படங்கள் பற்றிய விஷயங்களும் அதில் இடம் பெற்றன.

பம்பாயிலிருந்து பிரசுரமான ஆங்கில சினிமாப் பத்திரிகை 'பில்மிந்தியா'வில் கேள்வி-பதில் பகுதி வாசகர்களால் பெரிதும் ரசிக்கப்பட்ட அம்சமாகும். அதன் ஆசிரியர் பாபுராவ் பட்டேல் திறமையாகவும் சாதுர்ய மாகவும் அறிவுக் கூர்மையுடனும் பதில்களை எழுதிக் கொண்டிருந்தார்.

இந்தியாவில் பல பத்திரிகைகள் 'கேள்வி – பதில்' பகுதி தொடங்கி வெளியிடுவதற்கு 'பில்மிந்தியா' வின் ஆசிரியர் பாபுராவ் பட்டேல் தான் முன்னோடியாவார்.

'சினிமா உலகம்' பத்திரிகையும் கேள்வி - பதில் பகுதி வெளியிட்டு வந்தது.

தினப்பத்திரிகைகளும் சினிமாபற்றிய தகவல்களைப் பிரசுரிக்க முன் வந்தன. வாரப்பத்திரிகைகளிலும் சினிமாப் பகுதி தவிர்க்க முடியாத அம்சமாகி விட்டது.

'ஹனுமான்' வாரப் பத்திரிகை சினிமாவுக்கென்று அதிக இடம் ஒதுக்கியது, 'குண்டூசி' என்ற பெயரில் எழுதிய பி.ஆர். எஸ். கோபால் அந்தப் பகுதியைக் கவனித்துக் கொண்டார். 'குண்டூசி பதில்கள்' விறுவிறுப்பாகவும் குத்தலாகவும் சுவாரஸ்யமாகவும் வெளிப்பட்டன.

ஒரு சந்தர்ப்பத்தில் குண்டூசி எழுதிய பதில்களால் பாதிக்கப்பட்ட, யாரோ சிலர், அவர் தியாகராயநகர் பாண்டி பஜாரில் ரிக்ஷாவில் போய்க் கொண்டிருந்த சமயம், அவரை வழிமறித்து, கத்தியால் குத்தி விட்டு ஓடிப் போனார்கள். நல்ல வேளையாக, கத்திக் குத்து குண்டூசியின் முகத்தில் பட்டு காயம் ஏற்படுத்தியதே தவிர, அவருடைய உயிருக்கு ஆபத்து உண்டாக்கவில்லை.

சினிமா உலகத் தகவல்களை விறுவிறுப்பாக எழுதி, கத்திக் குத்து வாங்கிய முதல் தமிழ் பத்திரிகை எழுத்தாளர் 'குண்டூசி' கோபால் தான்.

சினிமா உலக விஷயங்களை பரபரப்புச் செய்திகளாக அம்பலப்படுத்தியதால் தமிழ்பத்திரிகையாளர் ஒருவர் கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி 1940களில் நடைபெற்றது. அதை உரிய இடத்தில் கவனிக்கலாம்.

வாசகர்கள் புதுமைகளை வரவேற்றார்கள். முக்கியமான, பேச்சுக்கும் கவனிப்புக்கும் இலக்கான விஷயங்களை தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உடையவர்கள் கணிசமாகவே இருந்தார்கள். ஆனால்,

தரப்படுகிறவை தங்களுக்கு லாபம் பயக்கக் கூடிய விதத்தில் மலிவாகக் கிடைக்க வேண்டும் என்று எதிர் பார்ப்பவர்களே மிகுதியாக இருந்தார்கள் என்று தோன்றியது.

1930 களின் முற்பகுதியில், காலணா - அரையணா ஒரு அணா விலையில் பிரசுரிக்கப்பட்ட அரசியல் பிரச்னை வெளியீடுகள், தலைவர்களின் வரலாறுகள் முதலியன தமிழ் நாட்டில் நன்கு விற்பனையாகிக் கொண்டிருந்தன.

அந்தக் காலகட்டத்தில் தான்-சற்று முன் பின்னாக இருக்கலாம் - புரட்சி வீரர் பகத்சிங் தூக்கிலிடப்பட்டது; இளைஞர் தலைவர் சுபாஷ் சந்திரபோஸ் அகில இந்திய காங்கிரசிலிருந்து விலக்கப்பட்டது போன்ற முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்தன.

பகத் சிங், சுபாஷ் சந்திர போஸ் பற்றிய சிறு சிறு புத்தகங்கள் பலப் பல வெளிவந்து நன்கு விற்பனையாயின.

அன்றைய பிரிட்டிஷ் அரசாங்கம், பூரண சுதந்திரம் கோரிய தேசியவாதிகளுக்கு ஒரு கண் துடைப்பு முயற்சியாக, 'மாகாண சுயாட்சி' வழங்க முன் வந்தது.

பத்திரிகைகளில் எல்லாம் மாகாண சுயாட்சி பற்றிய பிரஸ்தாபம் அதிகமாக அடிபட்டது. விளக்கக் கட்டுரைகள் வெளியாயின.

அந்த சந்தர்ப்பத்தில், சிறுகதை இலக்கியப் பத்திரிகையான 'மணிக்கொடி' யை நடத்திக் கொண்டிருந்தவர்கள், பொருளாதார பலம் தேடுவதற்காக, புதிதாகப் புத்தகப் பிரசுர முயற்சியில் ஈடுபடத்

திட்டமிட்டார்கள். குறைந்த விலையில், அதிகப் பக்கங்களுடன், நல்ல விஷயங்களை, புத்தகமாக வெளியிட முனைந்தார்கள்.

'நவயுகப் பிரசுராலயம்' என்ற பெயரில் செயல்படத் துவங்கிய அந்த நிறுவனம், தனது முதலாவது வெளியீடு ஆக, ஏ.என். சிவராமன் எழுதிய ,மாகாண சுயாட்சி' என்ற புத்தகத்தைப் பிரசுரித்தது. அப்போது அவர், 'தினமணி' உதவி ஆசிரியராகப் பணி புரிந்து கொண்டிருந்தார்.

எட்டணா விலையில், அதிகமான பக்கங்களுடன், ,மாகாண சுயாட்சி' வெளிவந்தது. விளக்கமாக, வெகு தெளிவாக விஷயங்களை எடுத்துக் கூறியிருந்தார் ஏ.என் சிவராமன்.

வாசகர்கள் ஆர்வத்தோடு அதை வாங்கிப் படித்தார்கள், வெளிவந்ததுமே நல்ல வரவேற்பைப் பெற்ற அந்தப் புத்தகம் வெகு விரைவிலேயே ஆயிரக் கணக்கான பிரதிகள் விலைபோயிற்று.

அடுத்து அடுத்து, நவயுகப் பிரசுராலயம் எட்டணா விலையில், வாசகர்களுக்கு லாபகரமானது எனத் தோன்றிய நல்ல புத்தகங்கள் வெளியிட்டது.

சார்லஸ் டிக்கன்சின், இரு நகரங்களின் கதை, (எ டேல் ஆஃப்டுஸிட்டீஸ்) என்ற நாவலை, கி. ரா. வின் மொழி பெயர்ப்பில் 'தேய்ந்த கனவு' என்று பிரசுரித்தார்கள்,

'டாக்டர் ஜெகில் அண்ட் மிஸ்டர் ஹைட்' என்ற சுவாரஸ்யமான நாவல் கு. ப. ராஜகோபாலன் தமிழாக்கமாக 'இரட்டை மனிதன்' என்ற பெயரில் வெளி வந்தது.

அயர்லாந்து சுதந்திரத்துக்காகப் போராடிய டிவேலராவின் முயற்சிகளுக்குத் துணை நின்ற 'மைக்கேல் காலின்ஸ்' வரலாறு அடுத்த புத்தகமாகப் பிரசுரமாயிற்று.

இவற்றை எல்லாம் வாசகர்கள் வாங்கிப் படிக்கத் தான் செய்தார்கள்.

இரண்டாவது மகாயுத்தம் நீடித்து வளர்ந்த காலம் அது. பொருள்களின் தட்டுப்பாடும், விலைவாசி உயர்வும் தொடர்ந்து வளர்ந்தன. விலை ஏற்றம் என்பது சகல துறைகளிலும் அழுத்தமாகக் கால் பதித்து அமுக்கியது.

புத்தகங்களின் விலையும் உயர்ந்தே ஆக வேண்டிய நிலைமை உண்டாயிற்று. நவயுக பிரசுராலயம் குறைந்த விலைப் புத்தக வெளியீட்டு முயற்சியை நிறுத்திக் கொண்டது. விலை உயர்ந்த, பெரிய புத்த கங்களைப் பிரசுரிப்பதில் கவனம் செலுத்தலாயிற்று.

முப்பதுகள் காலகட்டத்தில், நியாயமான விலையில் பிரசுரிக்கப்பட்டிருந்த, கவி சுப்பிரமணிய பாரதியின் நூல்கள்-கட்டுரைகள்: 1. சமூகம் 2. மாதர் 3. கலைகள் 4. தத்துவம்; ஞானரதம்; 'தாரசு மற்றும் ஸ்ட்ரே தாட்ஸ்' போன்றவை— வாங்குவாரின்றிக் கடைகளில் பழுப்பேறிக் கொண்டிருந்தன என்பதையும் குறிப்பிடத் தான் வேண்டும்.

---

ஆயினும், அரசியல் உலகில் வளர்ந்து செல்வாக்குப் பெற்றுக் கொண்டிருந்த இளைய தலைவர்களின் நூல்கள் இளைஞர்கள் வட்டாரத்தில் நல்ல கவனிப்பையும் ஆதரவையும் பெற முடிந்தது.

ஜவஹர்லால் நேருவின் சுயசரிதம்; ஜெயப்பிரகாஷ் நாராயணனின் 'அபேதவாதம் என்றால் என்ன?' போன்ற நூல்கள்; சுபாஷ் சந்திரபோஸின் 'இளைஞன் கனவு' முதலிய புத்தகங்களை அன்றைய இளைய தலைமுறையினர் உற்சாகத்தோடு படித்தார்கள்.

தமிழ் நாட்டில், சமூக சீர்திருத்தம் – மூட நம்பிக்கைகளின் ஒழிப்பு - மனித மேம்பாடு பற்றிய புரட்சிகரமான கருத்துக்களை துணிச்சலாக ஒலி பரப்பிக் கொண்டிருந்த பெரியார் ஈ.வெ. ராமசாமியின் எழுத்துக்கள் ஒரு சாராரைக் கவரும் வல்லமை பெற்றிருந்தன.

பெரியாரின் கருத்துக்களை வலியுறுத்தும் விதத்தில், விறுவிறுப்பும் வேகமும் கொண்ட நடையில் எழுதப்பட்ட கட்டுரைகள், கதைகளைத் தாங்கி வந்த 'பகுத்தறிவு' 'குடியரசு' ஆகிய சஞ்சிகைகளும், தின இதழான 'விடுதலை' யும் நல்ல வரவேற்பை பெற்றுக் கொண்டு இருந்தன.

1930 - களின் பிற்பகுதியில் 'விடுதலை' யில் சி. என். அண்ணாதுரையின் தனித்தன்மையும் வேகமும் கொண்ட நடையில், மக்களை எண்ணத் தூண்டிய சிந்தனைக் கட்டுரைகளும், உணர்ச்சி செறிந்த தலையங்கங்களும் தொடர்ந்து பிரசுரமாயின. அவற்றால் வசீகரிக்கப்பட்ட வாசகர்களின் தொகையும் வளர்ந்து கொண்டே போயிற்று.

# 2

சிறுகதைகள் தமிழ் வாசகர்களின் கவனத்தைப் பத்திரிகைகளின் வாயிலாகக் கவரத் தொடங்கியது 1930 களில் தான்.

தமிழ் சிறுகதை 1920 களிலேயே இலக்கியத்தரம் பெறத் தொடங்கியிருந்தது. வ. வெ. சு. ஐயர், மங்கையர்க்கரசியின் காதல், குளத்தங்கரை அரசமரம் அனார்க்கலி முதலிய கதைகளின் மூலம் புதுமையான சிறுகதைக் கலையின் வளர்ச்சிக்கு அடிகோலியிருந்தார்.

'பத்மாவதி சரித்திரம்' என்ற இலக்கியத் தரமான நாவலை எழுதிய பெருங்குளம் அ. மாதவய்யா, சமூக சீர்திருத்த நோக்குடன், 'குசிகர் குட்டிக் கதைகள்' எழுதினார்.

கவி பாரதியாரும், தமது கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்காகக் கதைக் கலையைப் பயன்படுத்தினார்

கவி ரவீந்திரநாத தாகூரின் கதைகள் பலவற்றை சுப்பிரமணிய பாரதியும் வ.வெ.சு. ஐயரும் தமிழாக்கி இந்நாட்டின் வாசகர்களுக்கு அறிமுகம் செய்திருந்தனர்.

இவை எல்லாம் புத்தகங்களாகவும் வந்திருந்தன. அவை பரவலான கவனிப்பைப் பெற்றிருந்தன என்று சொல்வதற்கில்லை.

1930 – களில் பத்திரிகைகள் பல்வேறு விதமான கதைகளையும் பிரசுரித்து, வாசகர்களுக்குப் புதுவிதமான சிறுகதைகள் மீது ஒரு ருசி ஏற்படுத்தின.

'கல்கி'யின் கதைகளுக்கு மிகப் பரவலான பாராட்டும் வரவேற்பும் கிடைத்துக் கொண்டிருந்தன. கல்கி பாணியில் கதை எழுதுவோர் பலராயினர்.

ஆழ்ந்த, கனமான, சோதனை ரீதியில் அமைந்த— விதம் விதமான நடைகளைக் கையாண்டு எழுதப்பட்ட— சிறுகதைகளை மணிக்கொடி எழுத்தாளர்கள் படைத்து வந்தனர்.

இவர்களது முயற்சிகளை விரும்பி வரவேற்றுப் படித்து மகிழ்ந்து, அவை பற்றிப் பேசி இன்புறும் ரசிகர்கள் வாசக உலகத்தில் குறைவாகத் தான் காணப் பட்டார்கள்.

பத்திரிகைகளில் வெளிவந்த கதைகளைப் புத்தகமாகப் பிரசுரித்தால் வாசகர்களின் ஆதரவு இருக்கும் என்ற நம்பிக்கை சிலரை அம்முயற்சியில் ஈடுபடத் தூண்டியது.

அந்நாட்களில் புத்தகங்கள் கவர்ச்சியும்' கண்ணைக் கவரும் அட்டைபடமும் கொண்டு தயாரிக்கப்பட்டதில்லை. ஆரம்பகாலச் சிறுகதைத் தொகுதிகள் - வ. வெ சு. ஐயரின் 'மங்கையர்க்கரசியின் காதல்' தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட தாகூர் கதைகள், 'கல்கியின் சாரதையின் தந்திரம்' எல்லாம், ரொம்ப சாதாரணமாக, எளிய தோற்றத்தில், மலிவான பாடப் புத்தகங்கள் போலவே அமைந்திருந்தன.

1938 வாக்கில் வெளிவந்த கல்கியின் 'கணையாழியின் கவை' முதலிய கதைகளைக் கொண்டிருந்த தொகுப்பு தான் பல'வர்ணங்களில் அச்சிடப்பட்ட அழகான அட்டைச் சித்திரத்தையும் நேர்த்தியான கட்டமைப்பையும் பெற்றிருந்தது. ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் எழுதிய நீண்ட முன்னுரை அதற்கு அணி செய்தது. இவையும் வாசகர்களுக்கு பிடித்தமான அம்சங்களாயின.

நாற்பதுகளின் ஆரம்பம் முதல் சிறுகதைத் தொகுதிகள் நிறையவே வரலாயின.

'புதுமைப் பித்தன் கதைகள்' என்ற 29 கதைகள் கொண்ட தொகுப்பு - நவயுகப் பிரசுராலய வெளியீடாக வந்தது. இத்தொகுப்புக்கு ரா. ஸ்ரீ. தேசிகன், ரசனா பூர்வமான, அழகிய நீண்ட முன்னுரை ஒன்று எழுதி இருந்தார்.

தொகுதியில் சேராத புதுமைப் பித்தன் கதைகள் 'நாசகாரக்கும்பல்' 'ஆறுகதைகள்' என்று சிறு சிறு புத்தகங்களாக வெளியிடப்பட்டன. புதுமை பித்தன் மொழி பெயர்த்த உலக மொழிக் கதைகள் 'உலகத்துச் சிறு

கதைகள்' என்ற அருமையான பெரிய தொகுப்பாகப் பிரசுரம் பெற்றன.

பலரகமான புத்தகங்களையும், 'விஷவிருட்சம்' 'துர்கேசநந்தினி' போன்ற வங்க மொழி நாவல்களின் தமிழாக்கங்களையும் வெளியிட்டு தமிழ்ப்பணி புரிந்து கொண்டிருந்த அல்லயன்ஸ்' கம்பெனி 'தமிழ் நாட்டுச் சிறுகதைகள்' என்ற வரிசையில் தொடர்ச்சியாகச் சிறுகதைத் தொகுதிகளை வெளியிடத் திட்டமிட்டுச் செயலாற்றியது.

'ராஜாஜி குட்டிக்கதைகள்' 'வ வெ. சு. ஐயர் கதைகள்', த. நா. குமாரசுவாமியின் 'கன்னியாகுமரி முதலிய கதைகள்', தி. ஜ. ரங்கநாதனின் 'சந்தனக் காவடி' கு.ப. ராஜகோபாலனின் 'கனகாம்பரம்', ந.சிதம்பரசுப்ரமண்யன் எழுதிய 'சக்கரவாகம்' ஆகிய தொகுதிகள் வெளிவந்தன. பின்னர், கால இடைவெளி விட்டு விட்டு, அநேகரது சிறுகதைகள் தொகுப்புகளாக அல்லயன்ஸ் கம்பெனியால் பிரசுரிக்கப்பட்டன.

சரத் சந்திரர் நாவல்கள் பலவும் மொழிபெயர்க்கப் பட்டுப் புத்தகங்களாக வெளி வந்ததும் இக்காலகட்டத்தில் தான்.அவை தமிழ் வாசகர்களால் பெரிதும் விரும்பி வாசிக்கப்பட்டன.

சரத் சந்திர சாட்டர்ஜி, பங்கிம் சந்திர சட்டோபாத்யாயர், பிரேம் சந்த் ஆகியோரது நாவல்கள், பத்திரிகைத் தொடர் கதைகளாகவும் புத்தகப்

பிரசுரங்களாகவும், அடுக்கடுக்காக வந்து வாசகர்கள் உள்ளத்தில் இடம் பெற்றன.

இதன் பாதிப்பாக, தமிழிலும் சொந்தமாக சமூக நாவல்கள் தோன்ற வேண்டும் என்ற உணர்வு தமிழ் பத்திரிகை ஆசிரியர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் உண்டாயிற்று. அதனால் புதிது புதிதாக சமூக நாவல்கள் தோன்றலாயின.

இதற்கு முன்னதாகவே, 1930களிலேயே, நாரண துரைக்கண்ணன், அவர் ஆசிரியராகப் பணியாற்றிய 'பிரசண்ட விகடன்' மாதம் இருமுறைப் பத்திரிகையில் தொடர்ச்சியாக நாவல்கள் எழுதி, வாசகர்களிடம் செல்வாக்கு பெற்று இருந்தது குறிப்பிட வேண்டியது ஆகும் ஆரம்பத்தில் ஆங்கில நாவல்களைத் தழுவிய தொடர் கதைகளையே அவர் எழுதினார். அவை வாசகர்களுக்கு மிகுதியும் பிடித்திருந்தன.

'நான் ஏன் பெண்ணாய் பிறந்தேன்?' 'இவ்வுலகைத் திரும்பிப் பாரேன்' 'சீமாட்டி கார்த்தியாயினி'. போன்ற தழுவல் நாவல்களுக்குப் பிறகு, சமூகம், காதல் மற்றும் பெண் உள்ளத்தின் பிரச்சனைகள் முதலியவற்றை அடிப்படையாக்கி அவர் 'உயிரோவியம்' 'தாசி ரமணி' போன்ற நாவல்களை உருவாக்கினார். நாரணதுரைக் கண்ணனின் படைப்புகள் கிராமங்களில் இருந்த சாதாரண வாசகர்களையும் கவர்ந்திருந்தன, அந்நாட்களில்.

'கல்கி' ஆனந்த விகடனில் 'கள்வனின் காதலி' என்ற விறுவிறுப்பான சம்பவங்கள் நிறைந்த சமூக

நாவலை எழுதி முடித்த பிறகு, 'தியாக பூமி' என்ற தேசீய, சமூக சீர்திருத்த மற்றும் பெண்ணுரிமைப் போராட்டங்கள் கலந்த நாவலைத் தொடர்கதையாக வெளியிட்டார்.

அதே சமயத்தில், அந்த நாவல் திரைப்படமாகவும் தயாரிக்கப்பட்டது. அக்காலத்திய புகழ் வாய்ந்த நடிகை எஸ். டி. சுப்புலட்சுமி, பாபநாசம் சிவன் முதலியோர் நடித்து, கீர்த்தி பெற்ற டைரக்டர் கே. சுப்பிரமணியம் இயக்கிய படம் அது. அந்தப் படத்தில் வரும் காட்சிகள் விகடன் தொடர்கதையில் வாரம் தோறும் எடுப்பாக அச்சிடப்பட்டன. ஆகவே, 'தியாகபூமி' படத்தையும், தொடர்கதையையும் ஆவலுடன் எதிர்பார்த்த ரசிகர்கள் தொகை அதிகமாகவே இருந்தது.

இந்நிலையில், நாவல் உலகில், ஒரு புதிய அலை தலையெடுத்தது. வி. ஸ. காண்டேகர் என்ற மராத்தி எழுத்தாளரின் 'கருகிய மொட்டு' நாவல், கா. ஸ்ரீ. ஸ்ரீ. மொழி பெயர்ப்பில் புத்தகமாகப் பிரசுரம் பெற்றது. அதற்கு முன்னதாக, காண்டேகரின் நாவல் 'வெறும் கோயில்' கலைமகள் வெளியீடாகப் புத்தக உருவில் வந்திருந்தது.

காண்டேகர் திறமை வாய்ந்த எழுத்தாளர். யதார்த்த சமூக நிலைமைகளை, கற்பனை அழகோடு, கவிதை நடையில் நயமான சிந்தனைகளும் புதுமையான உருவகக் கதைகளும் நெடுகிலும் மிளிர, அவர் நாவல்களில் சித்திரித்தார். பெண்கள் மீது அனுதாபம்

கொண்டு, சமூகத்தில் பெண்ணின் நிலைமையை உருக்கமாகச் சித்திரிக்கும் நாவல் 'வெறும் கோயில்'.

'கருகிய மொட்டு' தனிரகமான படைப்பு. திருமணம் மூலம் இல்லற வாழ்வில் ஈடுபடுகிற ஆண்கள் பெண்கள் எல்லோருமே பொருத்தமான ஜோடிகளாக இணை சேர்வதில்லை. அவர்களுடைய தாம்பத்திய வாழ்வு சந்தோஷமாக அமைந்திருப்பதில்லை. காம உணர்வில் ஒருவருக்கு ஒருவர் மாறுபட்ட தரங்களில் இருப்பது தான் குடும்ப வாழ்வு அமைதியும் ஆனந்தமும் அற்றுப்போவதற்கான அடிப்படைக் காரணம் ஆகும் என்று காண்டேகர் 'கருகிய மொட்டு' நாவலில் வலியுறுத்துகிறார்.

அந்நாட்களில், தமிழுக்குப் புதுமையாகத் தோன்றிய ஒரு உத்தியில், எழுதப்பட்ட நாவல் 'கருகிய மொட்டு' வாழ்க்கையில், தாம்பத்திய இன்பத்தில் வேறு வேறு உணர்ச்சித் தரங்களில் இருந்த சில ஆண்களும் பெண்களும், ஆசிரியரை சந்தித்து அவரவர் கதைளைச் சொல்கிறார்கள். கணவன் காமஉணர்வு மிகுதி உடையவனாக இருப்பான்; மனைவி அவ்உணர்வு போதுமான அளவு பெற்றிராதவளாக இருப்பாள். இன்னொரு ஜோடியில், பெண் காமஉணர்வு மிகையாகவும் ஆண் அவ்உணர்வு குறைவாகவும் கொண்டிருப்பர். சம அளவுஉணர்வு கொண்ட ஆணும் பெண்ணும் இணைந்த குடும்பமும் உண்டு. இப்படிப்பட்ட ஆண்களும் பெண்களும் தனித்தனியே சொன்ன அந்தரங்க விஷயங்களை—

அவரவரே சொல்கிற பாணியில் – சுவையான கதை அம்சமாக்கி நாவலாக எழுதியிருந்தார் காண்டேகர்.

வி. ஸ. காண்டேகரின் நாவல்களைத் தமிழாக்கித் தந்த கா. ஸ்ரீ. ஸ்ரீ., அவை மொழி பெயர்ப்புகள் என்று தோன்றாத விதத்தில், சுவையாக, நயமாக, திறமையாக உருவாக்கியிருந்தார். தமிழ் வாசகர்கள் மத்தியில் காண்டேகர் நாவல்கள் அபரிமிதமான செல்வாக்கு பெற்றதற்கு, அவ்ஆசிரியரின் திறமை, எழுத்தாற்றல், நாவல்களுக்கு அவர் எடுத்துக் கொண்ட விஷயங்கள் அவற்றை அவர் கதையாக்கியிருந்த உத்திகள் இவை எல்லாவற்றுடனும், கா. ஸ்ரீ, ஸ்ரீ.யின் திறமையான தமிழாக்கமும் முக்கியமான காரணம் ஆகும்,

ஒரு 'பத்துவருடகாலம்' - அதற்கும் அதிகமாகவே என்று சொன்னாலும் தவறு ஆகாது- தமிழ் நாவல் துறையில் 'காண்டேகர் சீசன்' ஆட்சி செலுத்தியது. வாசகர்கள் காண்டேகர் நாவல்கள் மீது மோகம் கொண்டிருந்தனர். அவற்றை ஆவலோடு படித்தனர். திரும்பத் திரும்ப வாசித்து மகிழ்ந்தனர்.

காண்டேகர் நாவல்களில் தாராளமாகச் சிதறிக் கிடந்த சிந்தனைகளை பொன்மொழிகளாகப் பிரசுரித்தன பத்திரிகைகள். அவரது சிந்தனைகளை, உவமைகளை, உருவகக் கதைகளைக் குறிப்பேடுகளில் தொகுத்து எழுதிக் கொண்டு, தாங்களும் படித்து, மற்றவர்களுக்கும் வாசித்துக் காட்டி மகிழ்ந்து போன ரசிகர்களும் அதிகமாகவே இருந்தார்கள்.

வறண்ட, சோகமான, இருண்ட வாழ்வு நிலைமைகளைக் கூட அழகான முறையில்— கவிதைத் தன்மையோடு— எழுதினார் காண்டேகர். நாவல்களின் பெயர்கள் கூட கவிதைநயம் கொண்டிருந்தன. வெறும் கோயில், சுகம் எங்கே?, கருகிய மொட்டு, எரிநட்சத்திரம், கிரவுஞ்சவதம், வெண்முகில்— இவை சில.

வறுமையால் தவித்தவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், வஞ்சிக்கப்பட்டோர், விதவைகள், அடிமை நிலையில் உள்ள பெண்கள் முதலியவர்களின் வாழ்க்கைப் பிரச்னைகளை காண்டேகர் நாவலில் தொட்டுக் காட்டினார். அவற்றை மினுமினு மூலாம் பூசிய சுகமான நடையிலே எழுதினார். காதல் உறவுகளையும் செக்ஸ் உணர்வுகளையும் முதன்மைபடுத்தி ஜிலுஜிலுப்பாகச் சித்திரித்தார். இந்தப் போக்கு வாசகர்களுக்குப் பிடித்திருந்தது. எனவே, காண்டேகர் நாவல்கள் பெரும்பலரால் விரும்பிப் படிக்கப்பட்டன.

காண்டேகர் பாணியில் தமிழில் பல நாவல்கள் தோன்றலாயின. உருவம், உத்தி, உள்ளடக்கம் ஆகியவற்றில் காண்டேகரைப் பின்பற்றி தமிழில் எழுதப்பட்ட நாவல்களில் ஒரு சில நல்ல வரவேற்பைப் பெற்றன. பேரும் அளவில் கவனிப்பைப் பெற்ற நாவல் தொ. மு. சி. ரகுநாதன் எழுதிய 'முதல் இரவு' ஆகும்,

'முதல் இரவு' நாவல் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டது என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய தகவல் தான்.

காண்டேகரின் தாக்கமும் பாதிப்பும் பெற்று நாவல்கள் எழுதத் தொடங்கி நல்ல வெற்றி கண்டவர் பேராசிரியர் மு. வரதராசன் ஆவார்.

மு. வ. முதலில் பேரறிஞர் பெர்னாட்ஷா நூல்களின் தாக்கத்தினால் கி. பி. 2000 என்ற நாவலை எழுதினார். அவருக்கு காண்டேகா பாணி, தாம் சொல்ல வேண்டிய கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்கு நல்ல உத்தி என்று தோன்றியிருக்க வேண்டும். எனவே, காண்டேகரின் வழிமுறைகளை அவரும் கையாண்டார் எனக் கூறலாம்.

கதை மாந்தரே அவரவர் கதையைச் சொல்வது; ஆண் பெண் இல்லற வாழ்க்கையில் ஏற்படும் பிணக்குகள், உணர்ச்சிக் குழப்பங்கள்; வறுமைப்பட்டவர்கள் மற்றும் சமூகத்தின் கீழ்மட்டத்தில் உள்ளவர்கள் வாழ்க்கைப் பிரச்னைகள், சீர்திருத்தக் கருத்துக்கள் முதலியவற்றைக் கொண்ட சிந்தனை நாவல்களை மு. வ. எழுதினார்.

மு. வரதராசனாரின் எழுத்துக்களும் ஒரு பதினைந்து அல்லது இருபது ஆண்டு காலம் தமிழ் வாசக உலகில் பேராதரவைப் பெற்றிருந்தன. முக்கியமாக, மாணவர்களும் இளைஞர்களும், தமிழ் ஆசிரியர்களும் மு. வ. வின் எழுத்துக்களை விரும்பிப் படித்தார்கள்.

மு. வ. வின் புத்தகங்கள் வசீகரமான வர்ணங்களையும் கவர்ச்சிப் படங்களையும் கொண்ட அட்டைகளோடு தயாரிக்கப்படவில்லை. வெறும் எழுத்துக்களாலான

புத்தகத் தலைப்பும் சாதாரண (சித்திரம் எதுவும் இல்லாத) அட்டையுமே மு. வ. வின் நாவல் களும், கட்டுரைகளும் பெற்றிருந்தன. அவருடைய எழுத்துக்கும் எண்ணங்களுக்குமாகவே வாசகர்கள் மு. வ. வின் புத்தகங்களை வாங்கினார்கள். தமிழ் புத்தக உலகில் இது ஒரு சாதனையேயாகும்.

மு. வ. வின் புத்தகங்கள் பெரும் அளவில் விற்பனையானதற்கு மற்றுமொரு காரணமும் உண்டு.

பெரியார் ஈ. வெ. ராமசாமியின் இயக்கம் வேக வளர்ச்சி பெற்று வந்தது. அதன் உந்து சக்தியாக சி. என். அண்ணாதுரை விளங்கினார். அவருடைய செல்வாக்கும் தாக்கமும் மக்களிடையே வலுப்பெற்று வளர்ந்து கொண்டிருந்தன. அவர் சகல துறைகளிலும் நிலவிய 'பார்ப்பன ஆதிக்க'த்தை எதிர்த்தும் 'தமிழருக்கு ஆதரவு' பற்றியும் பிரசாரம் செய்து வந்தார். அந்த ரீதியில் மு. வ. எழுத்துக்களுக்கும் அண்ணாதுரை பெரும் அதரவு அளிக்க முன்வந்தார். தமிழர் ஒருவர் தலைசிறந்த நாவல்களையும், சீரிய சிந்தனைக் கருத்துக் களைக் கூறும் கட்டுரைகளையும் எழுதிக் கொண்டிருப்பதை அவர் பாராட்டிப் பேசியதோடு, மு . வ . வின் புத்தகங்களை வாங்கிப் படிக்க வேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும் என்றும் பிரசாரம் செய்தார். மு. வ. வின் நூல்களை தமிழர்கள் வாங்கிப் படிப்பதோடு நின்று விடக் கூடாது; அப்புத்தகங்களை வாங்கி மற்றவர்களுக்கு பரிசாக வழங்க வேண்டும்; எவர் வீட்டில் எந்த விசேடம்

ஆனாலும் சரி- திருமணம், ஆண்டு நிறைவு, புதுமனை புகுவிழா போன்ற அனைத்து விசேடங்களுக்கும் - பணம் அன்பளிப்பாகத் தருவதற்குப் பதிலாக, மு.வ. புத்தகங்களையும் இதர பகுத்தறிவுப் பிரசுரங்களையும் அன்பளிப்பாக வழங்க வேண்டும் என்று அண்ணாதுரை மேடைதோறும் அறிவுறுத்தினார்.

அண்ணாதுரையைப் பின்பற்றி, மற்றுமுள்ள தலைவர்களும், அக்கருத்தை எடுத்துக் கூறினார்கள். அதற்கெல்லாம் நல்ல பலன் இருந்தது.

அண்ணாதுரையின் கட்சியைச் சேர்ந்தவர்களும், அவருடைய வாக்கு வன்மையினால் வசீகரிக்கப்-பட்டவர்களும், அவரது அறிவுரையை ஏற்றுக் கொண்டு அவ்விதமே செயலாற்றினார்கள்.

இதனால் புத்தகங்கள் – முக்கியமாக, மு. வ. வின் நூல்கள் – அதிகம் விலை போவது சாத்தியமாயிற்று.

1940 களில் – இரண்டாவது உலக மகாயுத்தம் நிகழ்ந்த காலத்திலும், யுத்தத்துக்குப் பிந்திய சில வருடங்களிலும், – நாட்டு மக்கள் பலவிதமான சிரமங்களையும், பொருள் தட்டுப்பாடுகளையும் அவை சம்பந்தமான கட்டுப்பாடுகளையும் அனுபவித்து அல்லல் உற்றார்கள். எனினும், நாட்டில் பணப்புழக்கம் அதிகம் இருந்தது. அதனால் சாதாரண ஜனங்கள் கூட பத்திரிகைகள், புத்தகங்கள் வாங்குவதில் உற்சாகம் காட்டினார்கள். தனிநபர்கள் புத்தகங்கள் வாங்கிப் படிக்கிற பழக்கம் நெடுகிலும் காணப்பட்டது.

அக்காலத்தில் புத்தக வெளியீட்டகங்கள் வாசகர்களை நம்பித்தான் புத்தகங்களைத் தயாரித்து வெளியிட்டன. மொத்தமாக - பல நூற்றுக்கணக்கில் புத்தகங்களுக்கு ஆர்டர் பண்ணுகிற நூலக ஆணைக்குழு அப்போது ஏற்பட்டிருக்கவில்லை.

புத்தகங்களைத் தேடி வாங்கிப் படிக்கக் கூடிய தனிநபர்களின் எண்ணிக்கை கணிசமாகவே இருந்தது. பத்திரிகைகளில் வருகிற 'மதிப்புரை' களைப் பார்த்தும், படித்த நண்பர்கள் மூலம் அறிய நேர்ந்தும், பலப்பல ஊர்களிலும் இருந்த புத்தகப்பிரியர்கள் நூல்களை வாங்கிப் படித்தார்கள்.

1940 களில் பெயர்பெற்று விளங்கிய பிரசுராலயங்களில் 'சக்தி காரியாலயம்' என்பதும் ஒன்று. அதன் அதிபர் வை. கோவிந்தன், பின்வந்த புத்தக வெளியீட்டாளர்கள் அநேகருக்கு முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர். இலக்கியத்தரமான நூல்கள், அறிவு புகட்டும் சிந்தனை வெளியீடுகள், நல்ல மொழிபெயர்ப்புப் புத்தகங்கள் முதலியவற்றை நியாயமான விலையில் வெளியிட வேண்டும், வாசகர்கள் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர் பிரசுரத் துறையில் ஈடுபட்டார்.

அந்நாட்களில், 'பெங்குவின் புக்ஸ்' 'பெலிக்கன் வெளியீடுகள்' என்று பிரிட்டனிலிருந்து வெகு தரமான புத்தகங்கள், மிகக் குறைந்த விலையில் (அக்கால நாணய முறையில் ஆறு அணா) வந்துகொண்டிருந்தன.

கதைகள், கவிதைகள், நாவல்கள் போன்ற ('ஃபிக்ஷன்') படைப்பிலக்கியங்கள் பெங்குவின் புக்ஸ் என்றும், அறிவியல் நூல்கள் 'பெலிக்கன் வெளியீடுகள்' என்றும் வந்தன. மிகவும் பயனுள்ள புத்தகங்கள். வாசகர்கள் விரும்பி வாங்கிப் படித்த வெளியீடுகள் அவை. (கால ஓட்டத்தில் அவற்றின் விலையும் உயர்ந்து போயிற்று.

அவை போன்ற தரமான, நல்ல புத்தகங்களைப் பிரசுரித்து, குறைந்த விலையில் தமிழ் வாசகர் களுக்கு அளிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு இருந்தார் வை. கோ.

ஆரம்ப காலத்தில் 'சக்தி வெளியீடுகள்' பெங்குவின் புத்தகங்கள் மாதிரியான அட்டை அமைப்புடனேயே பிரசுரிக்கப்பட்டன. டால்ஸ்டாய் கதைகள், கட்டுரைகள்; மற்றும் ஏ, கே. செட்டியாரின் பயணக் கட்டுரைகள் விக்டர் ஹ்யூகோவின் புகழ் பெற்ற நாவலான 'லே மிஸ்ரபிள்ஸ்' தமிழாக்கமான 'ஏழை படும் பாடு', மற்றொரு பிரெஞ்சு நாவல் 'இளிச்சவாயன்' - இப்படி எத்தனையோ புத்தகங்கள் ஆரம்பத்திலேயே வெளியிடப்பட்டன.

'ஏழை படும் பாடு' சுத்தானந்த பாரதியால் எழுதப்பட்டது. நேரான மொழி பெயர்ப்பு அல்ல. 'லே மிஸ்ரபிள்ஸ்' கதையை இவர் தனது போக்கில் சுவாரஸ்யமாக எழுதியிருந்தார். அது மிகுதியான ரசிகர்களை ஈர்த்தது.

'சக்தி காரியாலயம்' வெ. சாமிநாத சர்மாவின் அரசியல் தத்துவ நூல்களையும் உயர்ந்த முறையில் பிரசுரித்தது. பிளாட்டோவின் 'அரசியல்', ரூஸோவின் 'சமுதாய ஒப்பந்தம்', 'கார்ல் மார்க்ஸ்' முதலிய புத்தகங்கள் குறிப்பிடத் தக்கவையாக விளங்கின. அரசியல் ஆர்வம் மிகப் பெற்றிருந்த — ஆங்கிலப் பயிற்சி பெற்றிராத – பலப்பலர் அரசியல் தத்துவங்கள் பற்றித் தெரிந்து கொள்வதற்கு இத்தகைய 'சக்தி வெளியீடுகள்' பெரிதும் உதவின.

வை. கோ. 'சக்தி' என்ற நல்ல பத்திரிகையையும் வெளியிட்டு வந்தார். இந்த மாத இதழ் 'டைஜஸ்ட்' பாணியில், உலகத்து விஷயங்கள் பலவற்றையும் பற்றிய கட்டுரைகளையும், மொழி பெயர்ப்புகளையும், ஒன்றிரு கதைகளையும், பல துணுக்குகளையும் கொண்டு, வாசகர்களின் அபிமானத்தைப் பெற்றிருந்தது. 'சக்தி' அழகிய முறையில் அச்சிடப்பட்டு ரசிகர்களை மகிழ்வித்தது.

சக்தி காரியாலய அதிபர் வை. கோவிந்தன், தனி நபர்கள் புத்தகங்கள் வாங்குவது பற்றிப் பெருமையோடு குறிப்பிடுவது வழக்கம். புதிய புத்தகங்கள் பற்றி விரிவான மதிப்புரைகள் வர வேண்டும் என்று கூட எதிர்பார்க்கப்படுவதில்லை. 'ஹிண்டு' நாளிதழில் 'வரப்பெற்றோம்' ('புக்ஸ் ரிஸீவ்ட்') என்ற பகுதியில் இரண்டு வரிகள் வெளிவருவதைப் பார்த்து விட்டு புத்தகங்களுக்கு ஏகப்பட்ட ஆர்டர்கள் வருகின்றன; வி. பி. தபால் மூலம் புத்தகங்களை வரவழைப்பவர்கள்

எங்கெங்கிருந்தெல்லாமோ கடிதங்கள் எழுதுகிறார்கள் என்று அவர் சொல்வார்.

நாட்டு மக்களிடையே இது ஒரு நல்ல பண்பாக இருந்தது. அந்நாட்களில்.

அரசியல், சமூக சீர்திருத்தக் கட்சிகளும் இந்தப் போக்கை ஊக்குவித்தன.

சாதாரண மக்கள் கூட நாட்டு நடப்புகளையும் அரசியல் விஷயங்களையும் அறிந்து கொள்ள ஆசைப் படுவது இயல்பு. கட்சித் தலைவர்களின் சொற்பொழிவு களைக் கேட்பதில் அநேகர் திருப்தி அடைந்து விடுகிறார்கள். கட்சியைச் சேர்ந்தவர்களின் பேச்சுக்களை வெளியிடும் பத்திரிகைகளைப் படிப்பதன் மூலம் தங்களது அறியும் அவாவைத் தணித்துக் கொள்கிறவர்கள் மிகப் பலராவர்.

தேசீய விடுதலைப் போராட்டம் வெகுஜன இயக்கமாக உருப்பெற்று வளர்ந்த 1930 களில், நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளையும், தலைவர்களின் கருத்துரைகளையும், மற்றும் எழுச்சியூட்டும் எண்ணங் களையும் மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்காகப் பலபல பத்திரிகைகளும், சிந்தனைப் பிரசுரங்களும் வேகமாக வந்தன. அவற்றை வாங்கிப் படிப்பதிலும், உற்சாகத் தோடும் உணர்ச்சி வேகத்துடனும் உரக்க வாசித்துக் காட்டுவதிலும் பலர் மகிழ்ச்சியும் கிளர்ச்சியும் அடைவது வழக்கமாக இருந்தது.

1940 களில் தேசீயக் கட்சியின் பத்திரிகைகளும் பிரசுரங்களும் மட்டுமே மக்களிடம் செல்வாக்கு பெற்றிருக்கவில்லை. தேசீயக் கட்சியினரின் கொள்கை களுக்கும் நோக்குகளுக்கும் மாறுபட்ட – எதிர்ப்பான – போக்குகளைக் கொண்ட கட்சிகளின் தாக்கமும் ஆதிக்கமும் நாட்டில் வலுப்பெற்று வந்தன.

தமிழ்நாட்டில் கம்யூனிஸ்டுக் கட்சியும் திராவிடர் கழகமும் வீறுடன் வளர்ந்து கொண்டிருந்தன.

கம்யூனிஸ்டுக் கட்சி சர்வதேசப் பார்வை உடையது; உலகப் பேரியக்கமாக வளர்ச்சி பெற்ற அதன் அங்கமாகத் தான் இந்தியாவிலும் - தமிழ் நாட்டிலும் அது செழித்துத் தழைத்தது.

கம்யூனிஸ்டுகள், மார்க்சிய தத்துவ நூல்களைப் படித்து அரசியல் அறிவு பெற வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தப்பட்டது. அதற்காக 'வகுப்புகள்' நடத்தப்பட்டன.

கம்யூனிசக் கொள்கையால் ஈர்க்கப்பட்டவர்கள் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் நூல்களைப் படிப்பதில் ஆர்வம் கொண்டார்கள். இவற்றில் அநேகம் தமிழில் வெளி வந்தன. அவற்றையும் கட்சிப் பத்திரிகை களையும் விரும்பிப் படிக்கும் வாசகர்கள் பெருகினார்கள்.

அரசியல் தத்துவ நூல்களோடு, முற்போக்குச் சிந்தனைகளை எடுத்துக் கூறும் அறிவியல் நூல்களும், இலக்கியங்களும் (நாவல்கள், கதைகள், கவிதைகள்,

கட்டுரைகள்) தமிழில் வெளியிடப்பட்டன. அவற்றுக்கும் வாசகர்கள் அதிகமாகவே கிடைத்தார்கள்.

ரஷ்ய நாவல்களும் சிறுகதைகளும் கவிதை நூல்களும் - ஆங்கிலத்திலும் தமிழிலும் - வாசகர்களுக்குப் பரவலாக அறிமுகமாயின.

மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும், தொழிலாளர்களும் ஆர்வத்தோடு படிக்கும் வாசகர்கள் ஆயினர்.

அதே காலத்தில் பகுத்தறிவுக் கருத்துக்களைப் பிரசாரம் செய்யும் திராவிடர் கழக வெளியீடுகளுக்கும் வாசகர்கள் பெருகி வளர்ந்தார்கள். பெரும்பாலும், சமுதாயத்தின் அடி நிலையில் உள்ளவர்கள்-தாழ்த்தப்பட்டு, வாழ்க்கை வசதிகள் வஞ்சிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்ட நிலையிலே இருந்த இனங்களைச் சேர்ந்தவர்கள்- பெரியாரின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டார்கள். 'விடுதலை' பத்திரிகையை விரும்பிப் படித்தார்கள். பெரியார் ராமசாமி, அண்ணாதுரை மற்றும் இவர்கள் வழி வந்தவர்களது எழுத்துக்களுக்கு வாசகர்கள் பெருகினார்கள்.

இக்கட்சியினரின் ஆதரவுப் பிரசாரத்தின் பயனாக பாரதிதாசன் கவிதைகளை ரசித்துப் படிப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது.

கவி பாரதிக்கு அவரது வாழ்நாளில் போதுமான கவனிப்பு கிட்டியது இல்லை; அவர் இறந்ததுக்குப் பின்

பல வருடங்கள் வரையில் கூட பாரதியார் கவிதைகள் நாட்டு மக்களிடையே நல்ல வரவேற்பையும் கவனிப்பையும் பெற முடிந்ததில்லை என்பது ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால், பாரதி வழி வந்த கவிஞர் பாரதிதாசன், வளர்ந்து கொண்டிருந்த சமூக சீர்திருத்தக் கட்சியைச் சார்ந்திருந்ததால், குறுகிய காலத்தில் வெகு வேகமான கவனிப்பையும், போற்றுதலையும் பெறுவது சாத்தியமாக இருந்தது.

'பாரதிதாசன் கவிதைகள்' என்ற முதல் தொகுதி, பகுத்தறிவுக் கட்சியைச் சேர்ந்த தனிநபர் ஒருவரால் வெளியிடப்பட்டது. அது மெதுமெதுவாக விற்பனை ஆயிற்று. இரண்டாவது பதிப்பு, கட்சி நூல்களை வெளியிட்ட பதிப்பகத்தின் பிரசுரமாக வந்து நல்ல வரவேற்பைப் பெற்றது.

பின்னர் பாரதிதாசன் நூல்களை வெளியிடுவதற்கென்றே தனிப் பதிப்பகம் ஒன்று தோன்றியது. அதன் வாயிலாக பாரதிதாசன் எழுத்துக்கள் பலவும் அழகான புத்தகங்களாகப் பிரசுரம் பெற்றன. அவை எல்லாம் வாசகர்களின் ஆதரவை எளிதில் பெற்றன,

தமிழில் முதன் முதலாக, ஒரு கவிதைத் தொகுப்பு பல பதிப்புகளைப் பெற முடிந்தது என்ற பெருமை 'பாரதிதாசன் கவிதைகள்' தொகுப்புக்கே உரியது.

இந்த சாதனை 1940களில் நிகழ்ந்தது. பாரதிதாசன் கவிதைகளுக்கு ரசிகர்கள் அதிகரித்தது

போலவே, அவரைப் பின்பற்றிக் கவிதை எழுதத் தொடங்கியவர்களின் எண்ணிக்கையும் வளர்ந்தது. 'பாரதிதாசன் பரம்பரை' என்று சொல்லி, பாரதிதாசனை போலவே கவிதைகள் எழுதிப் பெருமைப்பட்டுக் கொண்டனர் பலர். இவர்களில் திறமை உடைய ஒரு சிலர் தனித்தன்மை காட்டிப் பெயர் பெற்றார்கள்.

ஈ. வெ. ரா. பெரியாரின் 'திராவிடக் கழகம்' தனி அமைப்பாகவும், அதிலிருந்து பிரிந்து சென்ற சி. என். அண்ணாதுரையும் அவரைச் சேர்ந்தவர்களும் அமைத்துக் கொண்ட 'திராவிட முன்னேற்றக் கழகம்' தனி இயக்கமாகவும் வளரத் தொடங்கவும், இவ் அமைப்புகளைச் சார்ந்த பத்திரிகைகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது.

இக்கழகங்களின் பெயர் பெற்ற பிரசாரகர் மேடைப்பிரசங்கி - ஒவ்வொருவரும் தத்தமக்கென்று தனித் தனிப் பத்திரிகைகள் நடத்தினார்கள். சிறிது காலத்துக்கு அவை வாசகர்களின் ஆதரவைப் பெறவும் செய்தன.

எனினும், பல வருடங்களாகவே அண்ணாதுரை வெளியிட்டு வந்த 'திராவிட நாடு' பத்திரிகை பெற்றிருந்த செல்வாக்கையும் சர்குலேஷனையும் இதர இதழ்கள் பெற முடிந்ததில்லை.

மோனை நயம் நிறைந்த அடுக்கு மொழி நடையை அண்ணாதுரை அழகுறக் கையாண்டார். அவர் வலியுறுத்த விரும்பிய சிந்தனைகளை தெளிவாகவும்

அழுத்தமாகவும் எடுப்பாகவும் வெளியிட்டார். அவருடைய எண்ணங்களும் எழுத்துக்களும் முன்னேறத் துடித்த இளைஞர்களுக்கு எழுச்சி ஊட்டின. அவரைப் போலவே சிந்திக்கவும் எழுதவும் பல பேரைத் தூண்டின.

எனவே, மதப் புரட்டுகள் பற்றியும், புராண அளப்புகள் குறித்தும், கடவுளர் லீலைகள் சம்பந்தமாகவும், ஆரிய] சூழ்ச்சி பற்றியும் பெரும் அளவில் கட்டுரைகளும் சிறு சிறு புத்தகங்களும் வெளி வந்தன. அவை அனைத்தையும் விருந்து எனச் சுவைத்து மகிழ்ந்தார்கள் ஆயிரக் கணக்கான வாசகர்கள்.

கடவுளர் எதிர்ப்பு, பார்ப்பனர் எதிர்ப்பு, வடவர் ஆதிக்க எதிர்ப்பு, மூட நம்பிக்கைகள் எதிர்ப்புகள், புராணங்கள் எதிர்ப்பு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்து வளர்ந்த திராவிட இயக்கங்கள் தீண்டாமை ஒழிப்பு, விதவைகள் துயர் ஒழிப்பு, அறியாமை ஒழிப்பு ஆகியவற்றை வலியுறுத்தின. காதல் மணம், கலப்புத் திருமணம், பகுத்தறிவு வளர்ச்சி முதலியவற்றை ஆதரித்தன.

இவற்றை மையமாக்கி எழுதப் பெற்ற கதைகள், கட்டுரைகள், நாவல்கள் எல்லாம் அவ்இயக்கப் பேச்சாளர்களின் சொற்பொழிவுகளினால் வசீகரிக்கப் பட்டிருந்த எண்ணற்ற மக்களுக்குப் பிடித்துப் போயின.

கசப்பான மாத்திரைகளுக்கு இனிப்பு பூசிக் கொடுப்பது போல, அண்ணாதுரை சாதாரண வாசகர்களை

அதிகம் கவர வேண்டும் என்பதற்காக, தனது சிந்தனைகளை எழுத்தாக்கும் பணியில் கவர்ச்சிகரமான ஒரு உத்தியைப் பெரிதும் கையாண்டார். காமரசத்தை தாராளமாகக் கலந்து கொடுக்கும் முறை தான் அது.

தேவலீலைகளை விவரிக்கின்ற வகையிலும், திமிர்பிடித்த பூசாரிகள், குருக்கள், மதவாதிகளின் போலித்தனங்களை அம்பலப்படுத்துகிற சாக்கிலும், மன்னர்களின் அந்தப்புரக் களியாட்டங்களை சுட்டிக் காட்டுகிற விதத்திலும், ஆண் பெண் காம உறவுகள் பற்றி அவர் அதிகமாகவே எழுதினார். தேவலீலைகள், ரோமாபுரி ராணிகள் போன்ற கட்டுரைகள் இதற்கு நல்ல சான்றுகள் ஆகும்.

கம்ப ராமாயணத்தின் சிறப்புகளை, அதன் பாத்திரப் படைப்புகளை, கவிதை நயங்களை எல்லாம் ஆய்வதை ஒதுக்கி விட்டு, காம விவரிப்புப் பாடல்களைப் பொறுக்கி எடுத்து, 'கம்பரசம்' – டோஸ் ஒன்று, டோஸ் இரண்டு என்று சுவையாக வர்ணித்து எழுதினார்.

இவற்றாலும் 'திராவிட நாடு' வாசகர்களின் எண்ணிக்கை கூடியது. பின்னர் அவை எல்லாம் தனித்தனிப் புத்தகங்களாக வெளிவந்ததும் நல்ல விற்பனையைப் பெற்றன.

சமுதாயச் சிற்பிகளையும், மனிதகுல முன்னேற்றத்துக்காகப் பாடுபட்ட அறிஞர்களையும், அவர்கள் தம் வாழ்நாளில் அனுபவிக்க நேர்ந்த இன்னல்களையும் விவரித்து விறுவிறுப்பான நடையில்

கட்டுரைகள் எழுதினார். அவற்றின் மூலம் வாசகர்களின் அறிவுத் தாகத்தை வளர்த்து, புதிய புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற அவாவைப் பல பேரிடம் உண்டாக்கினார்.

எமிலி ஸோலா, ரூஸோ, வால்டேர், அமெரிக்கக் கவி வால்ட் விட்மன், நாத்திகச் சிந்தனையாளர் இங்கர்சால் போன்றவர்களைப் பற்றிய கட்டுரைகள் அண்ணாதுரையால் எழுதப்பட்டன. அவற்றில் அவர் கையாண்ட வசீகர நடை வாசகர்களை வெகுவாகக் கவர்ச்சித்தது.

உணர்ச்சி வேகமும், சிந்தனை கனமும், விறுவிறுப்பான நடையும் கொண்ட புத்தகங்கள் வாசகர்களை எளிதில் ஈர்த்தன என்பதற்கு அக்கால கட்டத்தில் வெளிவந்து எளிதில் விற்பனையான சிறு சிறு பிரசுரங்களின் பெருக்கம் ஒரு அளவாக அமையும்.

கோரநாதன் என்ற புனை பெயரில் வல்லிக் கண்ணன் எழுதிய சிறு புத்தகங்களில் 'கோயில்களை மூடுங்கள்!' என்பதும் ஒன்று. அது வெளிவந்த பதினைந்து இருபது நாட்களிலேயே ஆயிரம் பிரதிகளும் விற்பனையாகி விட்டன. இரண்டாம் பதிப்பாக அச்சிடப்பட்ட ஆயிரம் புத்தகங்கள் இரண்டு மாதங்களில் தீர்ந்து போயின. மூன்றாவது பதிப்பாக, உடனடியாக, மேலும் ஆயிரம் பிரதிகள்

அச்சிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவையும் வேகமாகவே விலை போயின.

புதுமைக் கருத்துக்களை, உரிய முறையில் எழுதிப் புத்தகமாக்கி, நியாயமான விலையில் விற்றால், அவற்றை வாங்கிப் படிக்க ஆர்வமுள்ள வாசகர்கள் தயாராக இருந்தார்கள்.

ஆனால், நடைமுறை உண்மையின் ஒரு பக்கப் பசுமைத் தோற்றம் தான் இது. அந்த உண்மையின் இருண்ட பகுதி உணர்த்துவது உற்சாகம் தரக்கூடிய தகவலாக இராது.

புதுமையான விஷயங்கள், சோதனை ரீதியான எழுத்துக்கள், உள இயல் உணர்வியல் உண்மைகளை எடுத்துக் கூறும் கற்பனைப் படைப்புகள், ரகம் ரகமான எழுத்து நடைகள் இவற்றைக் கொண்ட ஆழ்ந்த இலக்கிய முயற்சிகள் ('ஸீரியஸ் லிட்டரேச்சர்') பலவும் வாசகர்கள் மத்தியில் போதிய கவனிப்பைப் பெற முடியாமல் தான் இருந்தன.

1930 களில் 'மணிக்கொடி' என்ற சிறுகதை இலக்கியப் பத்திரிகை வாசகர்கள் மத்தியில் போதுமான ஆதரவைப் பெற முடியாமல் போனது போலவே, 'சூறாவளி' என்ற புதுமை இதழும் வாசகர் ஆதரவை அடைந்து வளர இயலாமல் மறைந்து போக நேர்ந்தது.

'மணிக்கொடி' பத்திரிகையின் தாக்கத்தினாலும் மணிக்கொடி எழுத்தாளர்களின் பாதிப்பாலும் உத்வேகம்

பெற்ற இளைஞர்கள், 1940 களில் ஆசையோடு தொடங்கிய ஆர்வ முயற்சிகள் பலவும் அதே கதியைத் தான் அடைந்தன.

திருச்சியிலிருந்து வெளிவந்த 'கலாமோகினி' திருச்சி அருகில் உள்ள துறையூரிலிருந்து பிரசுரமான 'கிராம ஊழியன்', கும்பகோணத்திலிருந்து வந்த 'தேனீ' ஆகிய மறுமலர்ச்சி இலக்கிய இதழ்கள், புதுமையான, ஆழ்ந்த, சோதனை ரீதியில் அமைந்த சிறுகதைகளையும் கட்டுரைகளையும் கொண்டிருந்தன. அவை ஆயிரம் பிரதிகள் விற்பனையாவது கூட சிரமமாக இருந்தது.

சென்னையில் பிரசுரமான 'சந்திரோதயம்' மாதமிரு முறைப் பத்திரிகையும் மறுமலர்ச்சி இலக்கிய ஏடு ஆகவே விளங்கியது. அதுவும் அதிகமான வாசகர்களை எட்ட இயலவில்லை.

எனினும், இப்பத்திரிகைகளுக்கு அங்கங்கே தரமான வாசகர்கள் இருக்கத்தான் செய்தார்கள். அவர்கள் எண்ணிக்கை இருநூறு அல்லது முந்நூறு தான் இருக்கும்.

பேராசிரியர் அ. சீனிவாசராகவன் ஆசிரியராக இருந்து நடத்திய 'சிந்தனை' மாத இதழும் வை. கோவிந்தன் பிரசுரித்த 'சக்தி' மாசிகையும், தரமான விஷயங்களைத் தாங்கி வந்த நல்ல பத்திரிகைகள் தான். அவையும் பல்லாயிரக்கணக்கான வாசகர்களைப் பெற்றிருக்கவில்லை.

'கலைமகள்' ஓரளவுக்குப் பரவலான வாசகர் வட்டத்தைக் கொண்டிருந்தது.

ஆர்வத்தினாலும் ஆசையோடும், வெவ்வேறு இடங்களில், சில தனி நபர்கள் சிறு அளவில் பத்திரிகை நடத்துவதும் சகஜமாக இருந்தது. குடிசைத் தொழில் போல் நடந்த இச்சிறு பத்திரிகைகளுக்கு, அவற்றுக்கெனத் தனித்தனிக் குழுக்கள் போல, குறைந்த அளவு வாசகர்கள் இருந்தார்கள்.

அவர்களில் பலர் எழுத்துலகில் அடி எடுத்து வைத்து முன்னேறத் துடித்த இளைஞர்களாவர். இத்தகைய பத்திரிகைகள் அவர்களுடைய எழுத்துக்களை மகிழ்ச்சியோடு வெளியிட்டதால், அவை இளம் எழுத்தாளர்களுக்கு உதவுகிற பயிற்சித்தளம் போல் விளங்கின.

நாரண துரைக்கண்ணனை ஆசிரியராகக் கொண்டிருந்த 'பிரசண்ட விகடன்' என்ற மாதமிரு முறைப் பத்திரிகையும் இப்படிப்பட்ட இதழாக இருந்தது. புதிதாக எழுதத் தொடங்கிய இளையவர்களுக்கு அவர் ஊக்கம் கொடுத்தார். சுமாரான கதைகளாக இருப்பினும் அவற்றை அவர் வெளியிட்டு இளம் எழுத்தாளர்களுக்கு உற்சாகம் தந்தார்.

'பிரசண்ட விகடன்' சில ஆயிரம் வாசகர்களைப் பெற்றிருந்தது. அது பரவலான கவனிப்பையும், வாசகர்களது உற்சாகமான பாராட்டுதலையும் குறை கூறல்களையும் பெறுகிற விதத்தில், சினிமா பற்றி 'நேயர்கள் விமர்சனம்' வெளியிடத் துணிந்தது.

வெவ்வேறு ஊர்களிலிருந்த வாசக நேயர்கள், அவ்வப்போது திரையிடப்பட்ட புதிய படங்கள் பற்றி

விரிவான விமர்சனங்கள் எழுதினார்கள். சுவையாகவும், காரமாகவும், கிண்டலாகவும், கடுமையாக விமர்சித்தும் எழுதினார்கள். அவை வாசகர்களுக்குப் பிடித்திருந்தன.

சகலவிதமானவர்களும் சினிமாவினால் வசீகரிக்கப் பட்டார்கள். சினிமா பற்றிய தகவல்கள், பலரக விஷயங்கள், படவிமர்சனங்கள் முதலியவற்றில் அதிகமான ஆர்வமும் அக்கறையும் காட்டுகிற போக்கு வருடத்துக்கு வருடம் வளர்ந்து வந்தது.

ஜனங்களின் இந்த இயல்பைப் புரிந்து கொண்ட பத்திரிகைக்காரர்கள் மக்களின் மனத்தினவுக்குத் தீனி-போடுகிற வகையில் செய்திகளையும், சுவையான தகவல்களையும், நடிகர்கள் நடிகையரது வரலாறுகளையும் பேட்டிகளையும் தாராளமாகவே தரலானார்கள்.

வாரப் பத்திரிகைகள் சினிமா அனுபந்தங்களை இணைத்து வெளியிட்டன. சினிமா விளம்பரங்கள் மூலம் பத்திரிகைகளின் வருமானம் பெருகியது. அதனாலும், படத்தயாரிப்பாளர்களை திருப்திப்படுத்துவதற்காகவும், அவர்களது தயவை எதிர்பார்த்தும் அனைத்துப் பத்திரிகைகளும் சினிமாச் செய்திகளையும், பட விமர்சனங்களையும் விரும்பிப் பிரசுரித்துக் கொண்டு இருந்தன.

சினிமாப் பத்திரிகைகளும் புதுசு புதுசாகத் தோன்றின. அவை அழகான வர்ண அட்டைகளையும், உள்ளே வழவழப்பான ஆர்ட்பேப்பரில் நடிகைகள்

நடிகர்களது கலர் படங்களையும் வெளியிடுவதில் ஆர்வம் காட்டின.

வாசகர்கள் அத்தகைய பத்திரிகைகளையே விரும்பி வாங்கினார்கள்.

'இலக்கியப் பத்திரிகைகள்' கூட, பத்திரிகைச் சந்தையில் இடம் பிடிப்பதற்காகவும், வாசகர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் முயற்சியாகவும், இதழ் தோறும் சினிமாவுக்கென்று சில பக்கங்களை ஒதுக்கின. திரைப்படக் காட்சிகளைச் சித்திரிக்கும் 'ஸ்டில்போட்டோ'க் களை பிளாக் செய்து அச்சிட்டன. பட விமர்சனங்களை வெளியிட்டன,

புகழ் வெளிச்சம் பெற்று விடுகிற பிரபலஸ்தர்களின் அந்தரங்க வாழ்க்கை பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதில் ஜனங்களுக்கு இயல்பாகவே ஒரு அவா உண்டு. அத்தகைய செய்திகளைப் பேசி மகிழ்வதில் அவர்கள் தனி இன்பம் காண்கிறார்கள்.

ஜனங்களின் இந்த இயல்பைப் புரிந்து கொண்ட சிலர், பெரிய மனிதர்களைப் பற்றிய வம்புகள், வதந்திகள் கிளுகிளுப்புச் செய்திகள், கிசுகிசுத் தகவல்கள் முதலியவற்றை அச்சிட்டு, சுலபத்தில் பணம் பண்ண ஆசைப் படுகிறார்கள். துணிச்சலாக எழுதி, பரபரப்பு உண்டு பண்ணுகிறார்கள்,

இந்த விதமான அக்கப்போர் பத்திரிகைகள்' மஞ்சள் பத்திரிகை' என்று குறிப்பிடப்படுகின்றன.

1943-44ல் தமிழில் 'மஞ்சள் பத்திரிகை' மூலம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார் லட்சுமிகாந்தன் என்பவர்.

முதலில் 'சினிமா தூது' என்ற பத்திரிகை மூலம் சினிமா உலகப் பிரபலஸ்தர்கள் பற்றிய வம்புகளை அவர்களுடைய அந்தரங்க லீலைகள் பற்றிய செய்திகளை, வெளிப்படையாக எழுதிப் பரப்பினார்.

பிறகு, உயிர் வாழ்வதற்குப் போராடிக் கொண்டு இருந்த 'இந்து நேசன்' என்ற பத்திரிகையை சொந்தமாக்கிக் கொண்டு அவர் தன் இஷ்டம் போல் சினிமா வட்டார வம்புகளை தனி பாஷையில் வெளி இட்டார். நட்சத்திரப் புகழ் பெற்ற நடிகைகள் நடிகர்கள், வெற்றி பெற்ற பட அதிபர்கள் பற்றி எல்லாம் 'கண்டபடி' எழுதினார். பத்திரிகை மூலம் எச்சரிக்கைகள் விடுத்தார். 'பிளாக் மெயில் பண்ணி' பணம் சம்பாதிப்பதும் அவருடைய நோக்கமாக இருந்து இருக்கலாம்.

'ஓட்டல் ஜல்ஸா' க்கள் பற்றியும், இரவுக் கேளிக்கைகள் பற்றியும் சுவையாகச் செய்திகளைத் தரத் தொடங்கிய 'இந்து நேசன்' சுடச் சுட விற்பனை ஆகும் சுவையான பண்டங்கள் போல் சூடாக விலை போனது. வேறு எந்தப் பத்திரிகையும் கண்டிராத அளவு வரவேற்பை அது வாசகர்களிடம் பெற்றது.

இரண்டணா விலை உள்ள அந்தத் தாளை ஒரு ரூபாய் கொடுத்து வாங்கிப் படிக்கக் காத்துக் கிடந்தார்கள் வாசகப் பெருமக்கள்.

---

பத்திரிகைப் பார்சல் வந்த சிறிது நேரத்திலேயே பிரதிகள் 'பிய்த்துக் கொண்டு' போயின! எண்ணற்ற வாசகர்கள் ஏமாற்றம் அடைய நேரிட்டது.

அதனால் கடைக்காரரிடம் முன்கூட்டியே ஒரு ரூபாய் கொடுத்து விட்டு, பத்திரிகைக் கட்டின் வரவை எதிர்நோக்கிக் காத்து நின்றார்கள் பல பேர்.

ஏமாற நேர்ந்தவர்களுக்கு அமைதி அளிப்பதற்காக ஏஜன்டே ஒரு உத்தியைக் கையாண்டார். ஒன்றிரண்டு இதழ்களை 'வாடகைக்கு' விட்டுப் பணம் பண்ணினார் அவர்.

அரைமணி நேரத்துக்கு இரண்டணா வாடகை. ஒருவர் படித்து முடித்ததும், அடுத்தபடியாக இன்னொருவர் படிக்கலாம். இப்படி நாள் பூராவும் ஒரே இதழ் (இரண்டணா பெறுமானம் உள்ளது) பலப் பல இரண்டணாக்களைப் பெற்றுத் தந்தது விற்பனையாளருக்கு.

ஒரு இதழை விலைக்கு வாங்கிய அதிர்ஷ்டசாலி (ஒரு ரூபாய் கொடுத்தவர்) தெரிந்தவர்களுக்கு 'வாடகைக்குத் தந்து' ஒரு ரூபாய்க்கும் அதிகமாகவே சம்பாதிக்க முடிந்தது.

திருச்சி போன்ற நகரங்களில், பார்க்குகளிலும் பத்திரிகைக்கடை முன்னும் இப்படி 'வாடகை கொடுத்து' இந்து நேசன் படித்து மகிழ்ந்த வாசகர்கள் அந்நாட்களில் நிறையப் பேர் இருந்தார்கள்.

பத்திரிகை விற்பனை வரலாற்றில் இது ஒரு 'ரிக்கார்ட்' என்றே சொல்லப்பட வேண்டும்.

எல்லாம் சிறிது காலத்துக்குத் தான்.

லட்சுமிகாந்தனின் நச்சு எழுத்துக்களால் வெகுவாக பாதிக்கப்பட்டிருந்த பட உலகப் பிரபலஸ்தர்கள் சிலர் சேர்ந்து திட்டமிட்டு, ஆள் வைத்து லட்சுமிகாந்தனைக் கொலை பண்ணி விட்டார்கள்.

'லட்சுமிகாந்தன் கொலை வழக்கு' பிரசித்தி பெற்றது. அதனால் செய்திப் பததிரிகைகளுக்கு பரபரப்பான விற்பனை ஏற்பட்டது.

காமலீலைகள், அந்தரங்கங்களின் அம்பலங்கள், மர்ம விஸ்தரிப்புகள், கொலை - கொள்ளை - திகில் விஷயங்கள் எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும், வாசகர்களை அதிகமாக ஈர்க்கும் சக்தி பெற்றிருக்கின்றன.

லட்சுமிகாந்தன் வேலைகளும், அவரது கொலைச் செய்தியும், அது சம்பந்தமான வழக்கும் இந்த உண்மையைத் தான் அழுத்தமாக மேலும் வலியுறுத்தின.

# 3

வாசகர்களில் மிகப்பலரை தொடர்கதைகள் ஈர்க்கின்றன.

பெண்கள் தான் தொடர்கதைகளை அதிகம் விரும்பிப் படிப்பவர்கள் என்று பொதுவாகச் சொல்லப் படுவது உண்டு. இது மிகைப்படுத்திச் சொல்வதாகும்.

ஆண்களிலும் பெரும்பலர் பத்திரிகைகளில் வருகிற தொடர்கதைகளை ஆர்வத்தோடு படிக்கிறார்கள். ஆவலோடு அடுத்த பகுதியை எதிர்பார்க்கிறார்கள். ஒரு கதை முடிவுற்றதும், ஆசையோடு கதை முழுவதையும் சேகரித்து புத்தகம் போல் பைண்டு செய்து வைத்துக் கொள்கிறார்கள். மீண்டும் வசதிப்படுகிற போது மொத்தமாகப் படித்து மகிழ்வதற்காகவும், படிக்க விரும்புகிறவர்களுக்கு இரவல் கொடுப்பதற்காகவும் தான்.

பத்திரிகைகளில் தொடர்கதை பிரசுரிக்கும் வழக்கம் எப்போது நடைமுறைக்கு வந்தது?

இது ஒரு சுவாரஸ்யமான ஆராய்ச்சியாக அமையலாம். ஆனாலும், சரியான விடையைக் கண்டு பிடிப்பது சிரமமான காரியமாகவே இருக்கும்.

பத்திரிகைகளில் தொடர்கதை வெளியிடும் போக்கு வெகு காலமாகவே, உலகம் முழுவதும் இருந்து வருகிறது. அனைத்து மொழிகளிலும், சகல விதமான பத்திரிகைகளும், தொடர்கதைகளைப் பிரசுரிக்கின்றன.

பிரபல நாவலாசிரியர்களின் பல படைப்புகள் பத்திரிகைகளில் தொடர்களாக வந்து, பின்னர் தான் புத்தகங்களாகப் பிரசுரம் பெற்றுள்ளன.

சார்லஸ் டிக்கன்ஸ் நாவல்கள் அநேகம் அவரது காலத்தில் பத்திரிகைகளில் தொடர்கதையாக வெளி-வந்தவை தான்.

உலக இலக்கியத்தில் கீர்த்தி பெற்றவர்களாக விளங்கும் ரஷ்ய எழுத்தாளர்களான டாஸ்டாவ்ஸ்கி, டால்ஸ்டாய் போன்றவர்களது படைப்புகள் கூட அவர்கள் வாழ்நாளில் பத்திரிகைத் தொடர்கதைகளாகப் பிரசுரம் பெற்றதை வரலாறு கூறுகிறது.

இது ஒரு உதாரணம் தான். பத்திரிகைகள், எல்லா நாடுகளிலும், அனைத்து மொழிகளிலும், தொடர்கதை பிரசுரிப்பதை ஒரு மரபு ஆக்கிவிட்டன.

அதைப் பின்பற்றி தமிழ் பத்திரிகைகளும் தொடர் கதை வெளியிடுவதில், ஆதிநாள் முதலே ஆர்வம் காட்டி வருகின்றன.

பத்திரிகைகள் எதற்காகத் தொடர்கதைகளை வெளியிடுகின்றன?

வாசகர்களைக் கவர்ச்சிப்பதற்காக. கிடைத்த வாசகர்கள் தொடர்ந்து அந்தப் பத்திரிகையை வாங்கி வாசிக்க வேண்டும் என்பதற்காக. வாசகர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்காக. இப்படிப் பல நோக்கங்கள் உண்டு, தொடர்கதை பிரசுரிக்கப் படுவதற்கு.

இதற்காகத் தொடர்கதை உத்திகள் என்றே அநேக விஷயங்கள் கையாளப்படுகின்றன.

தொடர்கதையாக வெளியிடப்படுகிற நெடுங்கதை அல்லது நாவல் வாசகர்களை வசீகரிக்கக் கூடிய விதத்தில் எழுதப்பட வேண்டும். வாசகர்களின் கவனத்தைப் பிடித்து இழுக்கும் தன்மையில் கதை சுவாரஸ்யமாக அமைய வேண்டும். உளப்போராட்டங்களை, உணர்ச்சிகளை, மனித இயல்புகளை சித்திரிப்பதாகச் சொல்லி எழுதப்படுகிற புதுமை எழுத்துக்கள் – மறுமலர்ச்சிப் படைப்புகள் – 'போர் அடிக்கக்' கூடியனவாகவே இருக்கும், பெரும்பான்மை வாசகர்களுக்கு.

தொடர்கதைகள் படிப்பதற்கு அலுப்புத் தராத விதத்தில், இலகுவாக வாசிக்கக் கூடிய தன்மையில், கதை ஓட்டமும், அடுக்கு அடுக்காகச் சம்பவங்களும், அடுத்து என்ன நடக்குமோ என்ற ஆவலைத் தூண்டும் வகையில் கதைப் பின்னலும் சிக்கல்களும் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு அத்தியாயமும் 'இனி என்ன?'

என்று வாசகரை எதிர்பார்க்க வைக்கிற 'சஸ்பென்ஸ்' கொண்டு முடிய வேண்டும். அப்போது தான் திடுமெனத் 'தொடரும்' என அச்சிட்டு, வாசகருக்குக் கிளர்ச்சி தர முடியும். அப்படியிருந்தால் தான் வாசகர் அடுத்த இதழை ஆவலோடு எதிர்பார்த்து, ஆசையோடு வாங்குவார். தொடர்ந்து அந்தப் பத்திரிகையை வாங்கிக் கொண்டிருப்பார்.

தமிழில் முதன் முதலாகத் தொடர்கதை எழுதிப் பிரசுரித்த பெருமை பெருங்குளம் அ. மாதவய்யா என்ற படைப்பாளிக்கே உரியது. சென்னையிலிருந்து வெளி வந்த 'விவேக சிந்தாமணி' என்ற பத்திரிகையில் அவருடைய நாவல் 'சாவித்திரி சரித்திரம்' தொடர்கதை யாக அச்சிடப்பட்டது.

அ. மாதவய்யா தமிழ் நாவல் இலக்கிய முன்னோடி களான மூவரில் ஒருவர் ஆவார். (மற்றவர்கள்: மாயூரம் வேதநாயகம் பிள்ளை, வத்தலக்குண்டு ராஜமய்யர்.) அவர் எழுதிய 'பத்மாவதி சரித்திரம்' பிரசித்தி பெற்றது. சமூக சீர்திருத்தம், மகளிர் விடுதலை, தனி மனித மேம்பாடு முதலிய குறிக்கோள்களுடன் படைப்பிலக்-கியத்தில் ஈடுபட்ட அவர் 'குசிகர் குட்டிக் கதைகள்' என்ற தலைப்பில் பல கதைகளும் எழுதியிருக்கிறார்.

மாதவய்யா எழுதிய தொடர்கதை பத்திரிகையில் முழுமையாகப் பிரசுரம் பெறவில்லை. அரைகுறையாக நின்று போயிற்று. பின்னர் அவர் அந்த 'சாவித்திரி

சரித்திரம்' நாவலை முடித்து 'முத்து மீனாட்சி' என்ற பெயரில் புத்தகமாக வெளியிட்டார்.

அதன் பிறகு, கால ஓட்டத்தில் பத்திரிகைகளில் தொடர்கதை என்பது சர்வ சகஜ விஷயமாக - கட்டாயம் இருந்தே தீர வேண்டிய ஒரு அம்சமாக - ஆகிவிட்டது.

தொடர்கதையை, பத்திரிகையின் விற்பனை அதிகரிப்பதற்கு ஏற்ற ஒரு சாதனமாக - வலிய சக்தியாக - கையாண்டு வெற்றி கண்டவர் 'கல்கி' என்ற புனை பெயரில் எழுதிய ரா. கிருஷ்ணமூர்த்தியே ஆவார்.

1930 களில் கல்கி முதன்முதலாக எழுதிய சமூக நாவல் ஆனந்த விகடனில் தொடர்கதையாக வந்த போது, வாசகர்கள் அடைந்த பரபரப்பையும், அதற்கு அவர்கள் அளித்த வரவேற்பையும் பற்றி நான் முன் பகுதியில் குறிப்பிட்டிருக்கிறேன். அடுத்து விகடன் பத்திரிகையில் வெளி வந்த கல்கியின் தொடர்கதை 'தியாக பூமி' வாசகர்களைக் கவர்ந்த தன்மை குறித்தும் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

பின்னர், தொடர்கதை வரலாற்றில் அடுத்த சாதனையாக கல்கி கையாண்டது 'சரித்திர நாவல்' ஆகும்.

காலம் ஆனந்த விகடனையும் கல்கியையும் பிரித்து விட்டது. விகடனைத் துறந்து வெளி வந்த ரா. கிருஷ்ணமூர்த்தி 'கல்கி' என்ற பத்திரிகையை

1942 – ல் தொடங்கினார். அதில் 'பார்த்திபன் கனவு' என்ற சரித்திர நாவலைத் தொடர்கதையாக எழுதினார்.

அது அவருடைய நோக்கத்தை நிறைவேற்றியது. எனினும், கல்கியின் இரண்டாவது சரித்திர நாவலான 'சிவகாமியின் சபதம்' தான் பெரும் வெற்றியாகத் திகழ்ந்தது. மிக அதிகமான வாசகர்களை சொக்க வைத்தது அது.

நம் நாட்டு மக்களுக்கு 'ராஜா ராணி கதை' என்றாலே ஒரு தனி மோகம். எந்தக் காலத்திலும், எந்த வயதினரும், ராஜா ராணிகள் சம்பந்தமான கதையை, ஆடம்பரமான அரண்மனை நடவடிக்கை-களை, அழகுமயமான நந்தவனத்தில் அவர்கள் நடந்து கொள்கிற கோலாகலங்களை எல்லாம் அறிந்து கொள்வதில் அவர்களுக்கு விசேஷமான ஆர்வம் உண்டு. இந்த ரீதியில், தமிழின் முதலாவது நாவல் என்று சொல்லப்படுகிற 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்பதை எழுதிய மாயூரம் வேதநாயகம் பிள்ளை, அந்த நாவலின் முன்னுரையில் கூறியிருக்கிறார்.

அது சரிதான். மக்களின் இந்த ருசியை நன்கு புரிந்து வைத்திருந்த ஆசிரியர் கல்கி, அதற்கு ஏற்ற தீனி கொடுத்து, தனது பத்திரிகையின் வளர்ச்சிக்கு வழி செய்து கொண்டார். கல்கியின் சரித்திர நாவல்கள் பல்லாயிரக்கணக்கான வாசகர்களை வசீகரிக்கும் சாதனமாக அமைந்தன. தொடர்கதையாகப் பிரசுரமான அவற்றை சேர்த்து, பைண்டு செய்து வைத்துக்

கொண்டு, திரும்பத் திரும்பப் படித்து மகிழ்வதில் வாசகர்கள் விருப்பம் உடையவர்களானார்கள்.

கல்கியைப் பின்பற்றி 'சரித்திர நாவல்' கள் எழுதுகிற எழுத்தாளர்களும் அதிகரித்தார்கள். ஒரு பத்திரிகையின் வளர்ச்சிக்கு – அதன் வாசகர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு – சரித்திர நாவலைத் தொடர்கதையாக வெளியிட வேண்டியதும் அவசியமாகும் என்ற நம்பிக்கையும் பத்திரிகை வட்ட ர தில் வேரூன்றி விட்டது.

வார இதழ்களும், மாதப் பத்திரிகைகளும் மட்டுமல்லாது, நாளிதழ்கள் கூட தொடர்கதை பிரசுரிக்க வேண்டியதன் அவசியத்தைப் புரிந்து கொண்டு, அதை நடைமுறைக்கும் கொண்டு வந்தன.

ஒரே பத்திரிகை இரண்டு மூன்று தொடர்கதைகளை வெளியிடுவதும் வழக்கத்துக்கு வந்தது.

ஒரு தொடர்கதை முடியப் போகிற கட்டத்தில், புதிதாக இன்னொரு கதைத் தொடரை ஆரம்பிப்பது. இதன் மூலம் வாசகர்கள் தொடர்ந்து அந்தப் பத்திரிகையை வாங்கிப் படிக்க வேண்டிய ஒரு கட்டாயத்தை உண்டாக்குவது. இது பத்திரிகைகள் கையாள்கிற ஒரு நியதி ஆகிவிட்டது.

வாசகர்கள் பத்திரிகைக்காரர்களுக்கு ஏமாற்றம் அளிக்கவில்லை. ஒரே இதழில் எத்தனை தொடர்கதைகள் வெளி வந்தாலும், அவற்றை விடாது படித்து மகிழக் கூடிய வாசகர்கள் ரொம்பப் பேர் இருக்கிறார்கள்.

வாசகர்களுக்குப் பிரயாணக் கட்டுரைகள் மீது ஒரு ரசனையையும் ஈடுபாட்டையும் உண்டாக்கியவர் 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி என்று தான் சொல்ல வேண்டும்.

1930 களிலேயே கல்கி, ஆனந்த விகடனில் பயணக்கட்டுரைகளை ரசமாக எழுதினார். அநேக வாரங்கள் தொடர்ந்து வரும்படி அவர் கல்கத்தா பிரயாணம் பற்றியும், இந்தியாவில் முக்கியமான சில இடங்களுக்குப் போய்வந்தது பற்றியும் நகைச்சுவையோடு சுவாரஸ்யமாக அவ்வப்போது எழுதினார். பிறகு, அவரும் ஓவியர் மாலியும் இலங்கைக்குப் போய் வந்தது குறித்து விரிவாக எழுதினார். தொடர்கட்டுரையாகப் பிரசுரம் பெற்ற அவற்றை வாசகர்கள் வெகுவாக ரசித்தார்கள்.

அதன் பிறகு பயணக் கட்டுரைகளைத் தொடர்ந்து பிரசுரிக்கிற வழக்கத்தையும் வாரப் பத்திரிகைகள் மேற் கொண்டு விட்டன.

1930 களுக்கு முன்னரும் முப்பதுகளிலும் வாசகர் களை வெகுவாக வசீகரித்த நாவல்களை எழுதிக் கொண்டிருந்த வடுவூர் துரைசாமி ஐயங்காரின் நாவல் களை தொடர்கதை ரீதியில் பிரசுரிப்பதற்காகவே 'மனோரஞ்சிதம்' என்றொரு மாதப் பத்திரிகை வெளியிடப்பட்டு வந்தது. வடுவூர் நாவல்களைப் புத்தகங்களாக வெளியிட்டு வந்த பிரசுர நிறுவனம் தான் அந்த இதழையும் நடத்தியது. அது சிறிது காலமே நடந்தது.

வடுவூராரைப் பின்பற்றி நாவல்கள் எழுதுவதில் ஈடுபட்ட வை. மு. கோதை நாயகி, தனது நாவல்களைத் தொடர்கதை ரீதியில் வெளிடுவதற்காக 'ஜகன்மோகினி' என்ற மாதப் பத்திரிகையை சொந்தமாக ஆரம்பித்து நடத்தினார். இந்தப் பத்திரிகை நீண்ட காலம் வாழ்ந்தது. 1950 களிலும், காலத்துக்கேற்ற மாறுதல்களுடன், ஜகன்மோகினி வெளிவந்தது. நூற்று இருபத்தைந்துக்கும் மேற்பட்ட நாவல்களை எழுதிப் பெயர் பெற்ற வை. மு. கோதை நாயகியின் பெரும்பாலான நாவல்கள் இப்பத்திரிகையில் தொடர்கதையாகப் பிரசுரிக்கப் பட்டு, பின்னர் புத்தகங்களாகத் தயாரிக்கப்பட்டவை தான்.

ஆரம்பத்திலும், 1940 களிலும் 'ஜகன்மோகினி' பெற்றிருந்த வாசகர்களை இறுதி வரை அதனால் 'தக்க வைத்துக் கொள்ள' இயலாது போயிற்று.

'ஜகன் மோகினி' நடந்து கொண்டிருந்த காலத்திலோ, அது நிறுத்தப்பட்ட பின்னரோ, அந்தப் பத்திரிகை பாணியில், வேறு எவரும் தமது நாவல்களைத் தொடர்கதையாக வெளியிடுவதற்கென்றே ஒரு தனிப் பத்திரிகை நடத்தத் துணியவில்லை, கால வேகத்தில் 'ஜகன் மோகினி' க்கு வாசகர்கள் மத்தியில் ஆதரவும் வரவேற்பும் இல்லாமல் போனதால், அப்படிப்பட்ட பத்திரிகையைத் தொடங்க வேண்டும் என்ற ஆசை மற்றவர்களுக்கு ஏற்படாது போயிருக்க வேண்டும்.

வாரப் பத்திரிகைகளிலும், மாத சஞ்சிகைகளிலும், நாளிதழ்களிலும் சுவை நிறைந்த தொடர்கதைகள்

அதிகம் அதிகமாக வரத் தொடங்கி விட்டதால், ஒரு எழுத்தாளரின் தொடர்கதைக்காகவே நடத்தப்படும் மாதப் பத்திரிகை மீது இயல்பாகவே வாசகர்களுக்கு ஆர்வம் இல்லாது போயிற்று என்று சொல்லலாம்.

பத்திரிகை உலகில் 1940 களில் ஒரு புதிய பிறப்பு தலைகாட்டுவது காலத்தின் கட்டாயமாயிற்று.

'மாதம் ஒரு புத்தகம்' என்பது தான் அது.

இரண்டாவது உலக மகாயுத்தம் நடைபெற்ற காலம். 'காகிதக் கட்டுப்பாடு' அமுலில் இருந்தது. புதிதாகப் பத்திரிகைகள் ஆரம்பிப்பதற்குத் தடை இருந்தது.

'சட்டத்தில் ஓட்டை' கண்டு, தங்கள் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரக்கூடிய சாமர்த்தியசாலிகள் எப்போதும் இருப்பார்கள்.

அப்படிப்பட்டவர்கள், காகிதக் கட்டுப்பாடு – பத்திரிகைத் தடை இவைகளுக்கு உட்படாத விதத்தில் செயல் புரிவதற்கு ஒரு வழி கண்டுபிடித்தார்கள். பத்திரிகை என்று இல்லாமல், புத்தகம் போலவும் இல்லாது, 'மலர்' என்று தொகுப்பு வெளியீடு தயாரிக்கலாம்; அதை மாதம் ஒரு புத்தகமாக வெளியிடலாம் என்று கண்டார்கள்.

இப்படி வெளியிடப்படுகிற புத்தகம் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், துணுக்குகள் எல்லாவற்றையும் கொண்டிருக்கும். பத்திரிகை போல் குறிப்பிட்ட கால இடைவெளிவிட்டு ஒழுங்காகப் பிரசுரமாகும். ஆயினும்,

பத்திரிகை மாதிரி தலையங்கம், செய்தி விமர்சனம், செய்திகள் முதலியனவற்றைக் கொண்டிராது.

இத்தன்மையில் தமிழில் முதன் முதலாகத் தோன்றியது 'குமரி மலர்' என்ற மாதம் ஒரு வெளியீடு. அதை ஆரம்பித்து, வெற்றிகரமாக நடத்தியவர் ஏ. கே. செட்டியார்.

அவர் 'உலகம் சுற்றும் தமிழன்' என்று பெயர் பெற்றிருந்தார். தனித்தனிப் பயணக் கட்டுரைகள் எழுதி வாசகர்களைக் கவர்ந்திருந்தார். அவர் எழுதிய பயணக் கட்டுரைகள் 'உலகம் சுற்றும் தமிழன்' என்ற பெயரில் 'சக்தி வெளியீடு' ஆக வந்து நல்ல கவனிப்பை அடைந்திருந்தது. அடுத்ததாக அவர் எழுதிய 'ஜப்பான்' என்ற புத்தகம், சக்தி வெளியீடாக வந்து, அன்றைய ஆட்சியினரால் (பிரிட்டிஷ் சர்க்கார்) தடை செய்யப் பட்டிருந்தது. அவர் காந்தி பக்தர். மகாத்மா காந்தி பற்றி முதன்முதலாக ஒரு டாக்குமெண்டரிப் படம் தயாரித்து, அதன் மூலமும் ஏ.கே. செட்டியார் புகழ் ஈட்டியிருந்தார்.

அவர் தயாரித்து வெளியிட்ட 'குமரி மலர்' நல்ல, தரமான, வெளியீடாக அமைந்திருந்தது. வாசகர்களுக்குப் பிடிக்கும் கதை கட்டுரைகளை - அன்றையப் பிரபலஸ்தர்கள் எழுதியவை தாங்கி - மாதம் தோறும் வெளி வந்தது.

'குமரி மலர்' ஒரு புதிய பாதையைத் திறந்து வைத்தது. அதன் வெற்றியைக் கண்டு, பலரும்

'மாதம் ஒரு மலர்' வெளியீடு பிரசுரிப்பதில் ஆர்வம் காட்டினார்கள். கதை மலர், தமிழ் மலர், கதைக்கொடி., கதைக் கடல் என்றெல்லாம் பெயர் சூடி பலப் பல 'மாத வெளியீடு' கள் தோன்றின.

சில ஆழ்ந்த இலக்கிய முயற்சிகளாகவும் இருந்தன. அவை இரண்டு அல்லது மூன்று மாதங்களில் மறைந்தும் போயின.

வை. கோவிந்தன் பல வருடங்களாக நடத்திக் கொண்டிருந்த 'சக்தி' பத்திரிகை மிகுந்த நஷ்டம் அடைந்திருந்தது. மேலும் அதைப் பத்திரிகையாகத் தொடர்ந்து நடத்த விரும்பாத வை. கோ. 'சக்தி மலர்' என்று மாற்றினார். தொ. மு. சி. ரகுநாதன், கு. அழகிரிசாமி ஆகியோரின் பொறுப்பில் 'சக்தி மலர்' நல்ல இலக்கியத் தொகுப்புகளாக உருவாயிற்று, ஒரு வருடத்தில் ஒன்பது மலர்கள் கொண்டு வந்த பிறகு, அதுவும் லாபகரமான முயற்சியாக இல்லை என்று உணர்ந்து, வை. கோ. அதைப் பிரசுரிப்பதை நிறுத்தி விட்டார்.

'குமரி மலர்' நெடுங்காலம் நடைபெற்றது. பிற்காலத்தில் அதன் உள்ளடக்கம் பெரும் மாறுதலைப் பெற்று விட்டது. ஆரம்ப வருடங்களில், டி. கே. சிதம்பரநாத முதலியார், சக்கிரவர்த்தி இராஜகோபாலாச்சாரி, வெ. சாமிநாத சர்மா போன்ற பிரபலஸ்தர்களின் எழுத்துக்களைக் கொண்டிருந்தது அது. பிறகு, காலத்துக்குத் தக்கபடி, அவ்வக்காலத்திய

பிரபல எழுத்தாளர்களின் கதைகள், கட்டுரைகளை வாங்கிப் பிரசுரித்தது. பிற்காலத்தில், புதிய - சொந்த மான - படைப்புகள் தேவையில்லை என்று கருதி விட்டது. பழைய, அபூர்வமான, விஷயங்களைத் தேடி எடுத்து 'மறு பிரசுரம்' செய்வதற்கே அதன் பக்கங்களை ஈடுபடுத்தியது. பழங்காலப் பத்திரிகைகளில் வந்த அரிய செய்திகள், அபூர்வமான நூல்களில் வந்த முன்னுரைகள் - கட்டுரைகள், ஆனந்த ரங்கம் பிள்ளை டயரிக் குறிப்புகள், ராஜாஜியின் எழுத்துக்கள், காந்திஜீ கருத்துக்கள், அறிஞர்கள் ஞானிகளின் பொன்மொழிகள் முதலியனவே 'குமரி மலர்' உள்ளடக்கம் ஆயின. 1980 களின் ஆரம்பத்தில் - ஏ. கே. செட்டியார் மரணம் அடைந்த பிறகும் - சிறிது காலம் வெளி வந்து, பின் அது நின்று விட்டது.

கால ஓட்டத்தில் 'மாதம் ஒரு புத்தகம்' என்பது வேறொரு பரிணாமம் பெற்றது. அதைப் பற்றி பின்னால் விரிவாகக் கவனிக்கலாம்.

# 4

நாட்டு நடப்புகளைப் பற்றியும், உலகின் பல பகுதிகளில் நிகழ்கிற நிகழ்ச்சிகள் பற்றியும் அறிந்து கொள்ள மக்கள் ஆசைப்படுகிறார்கள்.

படிக்கத் தெரிந்தவர்களின் அவாவைத் தணிக்க முயல்கின்றன செய்திப் பத்திரிகைகள்.

யுத்தங்கள், சுதந்திரப் போராட்டங்கள், மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள் குறித்து ஓரளவுக்காவது தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை, மக்களிடம் செய்திப் பத்திரிகை படிக்க வேண்டும் என்ற உந்துதலை ஏற்படுத்துகிறது.

படிக்கத் தெரியாதவர்கள் கூட, பத்திரிகைகள் படிப்பவர்களிடம், 'இன்னிக்கு பேப்பர்லே என்ன விசேஷம்?' என்று கேட்டுத் தெரிந்து கொள்வதில் அக்கறை காட்டுகிறார்கள்.

இப்படி விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டும் எனும் ஆர்வமும், செய்திப் பத்திரிகைகளை வாசிக்கிற பழக்கமும் அதிகரிக்க அதிகரிக்க, பத்திரிகைகளின் எண்ணிக்கையும் அதிகரிப்பது இயல்பான நிகழ்ச்சியாகி விடுகிறது.

தமிழ் நாட்டிலும், கால வேகத்தில், தினப் பத்திரிகைகள் பலப் பல தோன்றுவது சகஜமாயிற்று.

1940 களுக்கு முன்பு, வரதராஜ நாயுடு வின் 'தமிழ் நாடு', சி. ஆர். சீனிவாசன் ஆசிரியராக இருந்து நடத்திய 'சுதேசமித்திரன்' நாட்டில் பரவலாக வாசிக்கப்பட்டு வந்தன. 'தினமணி' தோன்றிய பிறகு, அந்த நாளிதழ் வேகமாக மக்களின் ஆதரவைப் பெற்றது.

'சுதேசமித்திர' னுக்கும் 'தினமணி' க்குமிடையே ஒருவகைப் போட்டி நிலவியதாகத் தோன்றியது.

ஒரு சந்தர்ப்பத்தில், சுதேசமித்திரன் பத்திரிகையை விளம்பரப்படுத்துவதற்காக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. 'தமிழில் நீண்ட காலமாக நடைபெற்று வரும் தினசரிப் பத்திரிகை சுதேசமித்திரன்' என்று அச்சிட்டு ஒட்டினார்கள் அதன் நிறுவனத்தினர்.

மறுநாளே அந்தப் 'போஸ்டர்'களின் அருகருகே 'தினமணி' பற்றிய சுவரொட்டிகள் காணப்பட்டன. 'கிழடு தட்டிய பத்திரிகை அல்ல தினமணி' என்ற வாசகம் அவற்றில் மிளிர்ந்தது.

'தினமணி' இளமையும், வேகமும், புதுமையும் கொண்டு வளர்ந்தது. வாசகர்கள் மத்தியில் அதன் செல்வாக்கு பரவியது.

'பாரத தேவி' என்றொரு நாளிதழ் வந்து கொண்டிருந்தது.

இவை எல்லாம் தேசீயப் பத்திரிகைகள் என்று பெயர் பெற்றிருந்தன. தேச விடுதலைக்காகப் பாடுபட்ட அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியை ஆதரித்த பத்திரிகைகள் இவை.

பெரியார் ஈ. வெ. ரா. வின் கொள்கைகளையும் திராவிடர் கழகத்தையும் பிரசாரம் செய்யும் நாளிதழாக 'விடுதலை' ப் பத்திரிகை நடந்து கொண்டிருந்தது.

ஆங்கிலம் படித்தவர்கள் 'ஹிண்டு' பத்திரிகையை விரும்பி வாங்கினார்கள். 'ஹிண்டு' வாசிப்பது கவுரவத்தின் அடையாளம் - Status Symbol - என்று கூட அநேகரால கருதப்பட்டு வந்தது.

அந்நாளைய அரசியல் - பிரிட்டிஷ் சர்க்கார் -பணி புரிந்தவர்களும், தேசீய இயக்கத்தை ஆதரிக்-காதவர்களும் 'மெட்ராஸ் மெயில்' என்ற ஆங்கில தினசரியைப் படிப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் கொண்டிருந்தார்கள்.

தினமணி நிறுவனம் 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையை நடத்தத் தொடங்கிய பிறகு, அதை

வாங்கிப் படிப்பதில் அதிகம் பேர் ஆர்வம் காட்டலானார்கள்.

தேசீயக் கட்சிக்கு எதிரான கொள்கைகளைக் கொண்டிருந்த 'ஜஸ்டிஸ் கட்சி' யினருக்கு ஆதரவாக 'லிபரேட்டர்' என்ற ஆங்கில தினசரி வந்தது. அதை விரும்பிப் படிக்கக் கூடிய வாசகர்கள் குறைவாகத் தான் இருந்தார்கள்.

எத்தனை பத்திரிகைகள் வந்தாலும், ஆங்கிலத்தில் 'ஹிண்டு' மாதிரி உள்நாட்டு விசேஷங்கள், அயல் நாட்டுச் செய்திகள், அரசியல், சமூகம், பொருளாதாரம், ஸ்போர்ட்ஸ் போன்ற பல்வேறு துறைகள் பற்றிய செய்திகளும் கருத்துக்களும், இப்படி ஏராளமான தகவல்களை நல்ல முறையிலும், நடுநிலைமை நோக்கிலும் தரக் கூடிய பத்திரிகை வேறு எதுவும் இல்லை என்ற அபிப்பிராயம் வாசகர்களுக்கு ஏற்பட்டிருந்தது.

இப்பவும் இவ்விதம் எண்ணக் கூடிய வாசகர்கள் அதிகமாகவே இருக்கிறார்கள்.

'ஹிண்டு' பத்திரிகை போல, விசாலப் பார்வையுடன், பரந்த அளவில், சகல விதமான செய்திகளையும் கருத்துக்களையும் தொகுத்துத் தருகிற பத்திரிகை தமிழில் இதுவரை தோன்றவில்லை என்பதும் நீடித்து வளர்கிற குறைபாடே ஆகும்.

இருக்கிற பத்திரிகைகளில் தினமணி பரவாயில்லை என்று சொல்லலாம்.

எல்லாப் பத்திரிகைகளும் மத்திய தர மற்றும் உயர்தர வர்க்கத்தினர் – அதிகம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் – உபயோகத்துக்காகவே இருக்கின்றன. சிறிதளவு படிப்பறிவு உள்ளவர்கள், தெருவில் போகிற சாதாரண வாசகர்கள், - தெளிவாகச் சொன்னால், ரிக்‌ஷாக்காரர்கள் கூட - படித்துப் புரிந்து கொள்ளக் கூடிய விதத்தில் செய்திகளைத் தருகிற பத்திரிகை ஒன்று கூட இல்லை. அப்படி ஒரு தினத்தாள் தேவை. இந்த எண்ணம் 'தமிழ் ராஜ்ஜியம்' அமைக்க ஆசைப்பட்ட சி. பா. ஆதித்தனின் தீர்மானமாக அமைந்தது.

அந்த நோக்குடன் அவர் 'தந்தி' பத்திரிகையை ஆரம்பித்தார். சிறிது காலத்துக்குப் பிறகு அதன் பெயரை 'தினத் தந்தி' என்று ஆக்கினார். அவருடைய ஆற்றலும் அனுபவமும் 'தினத் தந்தி' க்கு நல்ல வெற்றியைக் கொண்டு தந்தன. அது ஜனரஞ்சகப் பத்திரிகையாக வேக வளர்ச்சி பெற்றது.

'தினமணி' யின் ஆசிரியராக இருந்து அதை நன்கு வளர்த்த டி. எஸ். சொக்கலிங்கமும், அவருக்குத் துணையாகச் சேர்ந்து உழைத்த அநேக திறமை–சாலிகளும், நிர்வாகத்துடன் ஏற்பட்ட பிணக்கு காரணமாக, அந்த நிறுவனத்திலிருந்து வெளியேற நேர்ந்தது.

சொக்கலிங்கம் 'தினசரி' என்ற பெயரில் ஒரு நாளிதழைத் தொடங்கினார். ஏ. என். சிவராமன் 'தினமணி ஆசிரியரானார்.

நவ இந்தியா, நவசக்தி என்ற நாளேடுகளும் வந்தன.

ஒவ்வொரு பத்திரிகைக்கும் குறிப்பிட்ட அளவு வாசகர்கள் இருந்தார்கள். கிடைத்த வாசகர்களை இழந்து விடாதிருப்பதற்காகப் பத்திரிகைகளும் தம்மால் இயன்ற அளவு கவனம் செலுத்தி, பலவித உத்திகளையும் கையாண்டு, தொழிலில் நிலைத்து நிற்கப் பாடுபட்டன.

கம்யூனிஸ்டுக் கட்சி 'ஜனசக்தி' நடத்தியது.

முஸ்லிம் சமூகத்துக்காக 'தாருல் இஸ்லாம்' வந்து கொண்டிருந்தது.


எல்லாப் பத்திரிகைகளும் தமிழ் நாடு நெடுகிலும் மிகப் பரவலாக வாசகர்களைப் பெற்றிருந்தன என்று சொல்ல முடியாது. சில பத்திரிகைகளுக்கு குறிப்பிட்ட சில ஜில்லாக்களில் மிக அதிகமாகவும் பல இடங்களில் குறைந்த அளவிலும் வாசகர்கள் இருந்தார்கள்.

எனினும், பத்திரிகைகளைப் படிக்க வேண்டும் என்ற உணர்வு எங்கும் பரவிக் கொண்டிருந்தது. கிராமங்களில் கூட 'வாசக சாலை' கள் ஏற்பட்டன. அங்கே பல விதமான பத்திரிகைகளும் கிடைப்பதற்கு

ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதெல்லாம் மகிழ்ச்சிக்குரிய வளர்ச்சி தான்.

நாடு அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற பிறகு, ஊர்தோறும் நூலகங்கள் அமைக்கப்பட்டன. நூலகங்களில் பலவிதமான புத்தகங்களும் வாசகர்களுக்குக் கிடைக்க வகை செய்யப்பட்டது.

நூலகங்களைப் பயன்படுத்தி, தங்களது படிக்கும் தாகத்தைத் தணித்துக் கொள்ள முற்பட்ட வாசகர் களுக்கும் குறைவில்லை.



# 5

வாசகர்கள் மொழி பெயர்ப்பு நூல்களை விரும்பிப் படிப்பதில்லை என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது.

நூலகங்களில், துப்பறியும் நவீனங்கள் சரித்திர நாவல்கள் மற்றும் கதைச் சுவை நிறைந்த நாவல்கள் தான் வாசகர்களால் மிகுதியும் எடுத்து படிக்கப்படுகின்றன. பல நாவல்களுக்கு 'டிமாண்ட்' அதிகம்; அவை எப்போதும் சுற்றிக் கொண்டேயிருக்கும். ஒருவருக்குத் தேவை ஏற்பட்டு, திடீரென்று நினைத்துக் கொண்டு நூலகத்துக்குப் போய் அந்த நாவல் வேண்டும் என்று கேட்டால், அது அவருக்கு கிடைத்து விடாது; அப்புறம் பல வாரங்கள் வரை கூட அவருக்கு அது கிடைக்க வாய்ப்பு இருக்காது. அது தனக்குத் தேவை என்று வாசகர்கள் பலர் முன்னதாகவே தங்கள் பெயரைப் பதிவு செய்து வைத்திருப்பார்கள். அவ்வரிசைப்படி தான் அந்த நாவல் வழங்கப்படும். இந்த அளவுக்கு மொழி பெயர்ப்புப் புத்தகங்கள் - சிறந்த நாவல்கள் என்று பெயர் பெற்றவை கூட - வெளியே போவதில்லை.

அநேக நூலகங்களில் இது நடைமுறை நிகழ்ச்சியாக இருந்து வருகிறது.

அதே போல, புத்தக வெளியீட்டாளர்களும், மொழி பெயர்ப்புப் புத்தகங்கள் விற்பனையாவதில்லை; வாசகர்கள் அவற்றை விரும்பி வாங்குவதில்லை என்று தான் சொல்கிறார்கள்.

இது நிகழ்கால அனுபவம். சமீப சில வருடங்களாக நிகழ்ந்து வருவது. இருபத்தைந்து, முப்பது வருடங்களுக்கு முன்பு நிலைமை இப்படி இருந்தது இல்லை.

'திக்கெட்டும் செல்வீர்; கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்து இங்கு சேர்ப்பீர்!' என்ற கவி பாரதியின் வாக்கிற்கு இணங்க, உலக இலக்கியச் செல்வங்கள் பலவற்றையும் தமிழில் கொண்டு வந்து, தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டும் என்ற துடிப்பு எழுத்தாளர்களுக்கு இருந்தது.

திறமை வாய்ந்த படைப்பாளிகள், சுயமாக எழுதுவதுடன் திருப்தி அடைந்துவிடவில்லை. தாங்கள் படித்து ரசித்து இன்புற்ற நல்ல இலக்கியங்களை - நாவல்கள், சிறுகதைகள், நாடகங்களை - தமிழாக்கி வெளியிடுவதிலும் அவர்கள் அக்கறைகொண்டிருந்தார்கள்.

உலக இலக்கியங்களை ஆங்கிலம் மூலம் அறிந்து கொண்டு, அவற்றில் முக்கியமானவற்றைத் தமிழாக்கித் தந்த படைப்பாளிகள், இந்திய மொழிகளிலிருந்து

நாவல்களை இந்தி மூலம் அறிந்து தமிழில் மொழி பெயர்த்தார்கள்.

மணிக்கொடி எழுத்தாளர்கள் எனப் பெயர் பெற்றிருந்த திறமையாளர்கள் மொழி பெயர்ப்பிலும். தங்கள் ஆற்றலைக் காட்டினார்கள்.

புதுமைப்பித்தன், கு. ப. ராஜகோபாலன் செய்த மொழி பெயர்ப்புகள் பற்றி முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். 'சிட்டி' என்ற புனை பெயரில் எழுதிய பெ. கே. சுந்தரராஜன் அப்டன் சிங்க்ளேர் என்ற அமெரிக்க ஆசிரியரின் நாவல்களை 1930 களிலேயே தமிழாக்கியுள்ளார்.

வங்க மொழி நாவல்கள் சிலவற்றையும் கு. ப. ரா தமிழாக்கினார். பின்னர் த. நா. குமாரஸ்வாமி, வங்க மொழி கற்று, பங்கிம் சந்திர சாட்டர்ஜி, தாராசங்கர் பானர்ஜி நாவல்களை மூலத்திலிருந்தே மொழி பெயர்ப்பு செய்தார்.

சரத் சந்திரர் நாவல்கள் பலவும் தமிழாக்கப்பட்டு, வாசகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றன. 1930 களிலும் 1940 களிலும்.

பிரேம் சந்த் இந்தியில் எழுதிய நாவல்களில் சில தமிழில் தரப்பட்டன.

உலக இலக்கியங்களை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதில் க. நா. சுப்ரமண்யம் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். ஹென்ரிக் இப்சன் நாடகத்தை

'பொம்மையா, மனைவியா?' என்ற பெயரில் தமிழில் தந்தார்.

பெயர் பெற்ற உலக நாவல்கள் பலவற்றை க. நா. சு. தமிழாக்கித் தந்தார். அவற்றைப் படித்து ரசிப்பதற்கு வாசகர்கள் இல்லாமல் போகவில்லை.

ஒவ்வொரு பதிப்பகமும் மொழிபெயர்ப்பு நூல்களையும் வெளியிட்டன. 'சர்வ தேசக் கதை மலர்கள்' என்ற வரிசையில், ஒவ்வொரு நாட்டின் சிறுகதைகளும், பிரபல எழுத்தாளர்களால் மொழிபெயர்க்கப்பட்டு, சின்னச் சின்ன புத்தகங்களாகப் பிரசுரம் பெற்றன.

அ. கி. ஜயராமன் என்ற எழுத்தாளர் நடத்திய 'ஜோதி நிலையம்' இந்தப் பணியில் ஈடுபட்டிருந்தது. அவர் சரத் சந்திரர் நாவல்களைத் தமிழாக்கி நல்ல பெயர் பெற்றிருந்தார்.

சொந்தமாக நாவல்கள் எழுதி வெற்றி கண்டிருந்த ஆர். சண்முக சுந்தரமும் சரத் சத்திரர் நாவல்களை மொழி பெயர்த்தார். 1940 களிலும் 50 களிலும் அவை வெவ்வேறு பதிப்பகங்களால் வெளியிடப்பட்டன.

பிரெஞ்சு எழுத்தாளர் மாப்பசான் சிறு கதைகளும், பால்ஸாக் நாவல்கள் சிலவும் தமிழில் வந்தன.

ரஷ்யப் படைப்பாளிகள் டால்ஸ்டாய், செகாவ், புஷ்கின் ஆகியோரது படைப்புகள் மொழி பெயர்ப்புகளாக வந்தன. ரஷ்ய இலக்கியத்துக்கு நல்ல வரவேற்பு

இருந்தது. எனவே தொடர்ந்து துர்கனேவ், கார்க்கி முதலியவர்களது எழுத்துக்கள் தமிழில் நிறையவே வெளி வந்தன.

மொழி பெயர்ப்புக்கும் புத்தக வெளியீட்டுக்கும் உந்துதல் கொடுக்கும் விதத்தில் சோவியத் ரஷ்யா பொருளுதவி செய்ய முன் வந்தது. எனவே, மாக்சிம் கார்க்கி படைப்புகளும், இதர ரஷ்ய இலக்கியங்களும், வேகமாகத் தமிழாக்கப்பட்டு, புத்தகங்கள் ஆயின. 1950 களில்.

அதே சமயம், அமெரிக்காவும் நூல் வெளியீட்டுத் திட்டத்தில் முனைந்து பதிப்பகங்களுக்குப் பொருளுதவி செய்தது. கம்யூனிச எதிர்ப்புப் பிரசார நூல்களைத் தமிழில் வெளியிடுவதோடு, பெயர் பெற்ற அமெரிக்க இலக்கியப் படைப்புகளையும் மொழி பெயர்த்துப் பிரசுரிக்க இத்திட்டம் வகை செய்தது. இதன் மூலம் நல்ல படைப்பாளிகள் அநேகரது எழுத்துக்கள் தமிழில் வருவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. இவ்வகையான புத்தகங்கள் குறைந்த விலையில் விற்கப்பட்டதால், அவற்றுக்கு வாசகர்கள் போதுமான அளவு சேர்ந்தார்கள்.

சில படைப்பாளிகளின் எழுத்துகளுக்கு நல்ல வரவேற்பு இருந்ததால் – முக்கியமாக சரத் சந்திரர், மாக்சிம் கார்க்கி, டால்ஸ்டாய் ஆகியோருக்கு - பிரசுரத் தொழிலில் ஈடுபட்டவர்களில் சிலர் எளிதில் பிசினஸ் வெற்றி பெற ஆசைப்பட்டு, ஒரே படைப்பை வெவ்வேறு பெயர்களில் வெளியிட்டார்கள்.

பணத்தேவை உள்ள எழுத்தாளர், ஒரே நாவலை, கதாநாயகி பெயரில் புத்தகமாக வெளியிட ஒரு பதிப்பகத்திலும், நாவலின் பெயரோடு, அல்லது வேறொரு பெயரை வைத்து, புத்தகமாக்கும்படி இன்னொரு பதிப்பகத்திலும் விற்று விடுவதும் சகஜமாக இருந்தது.

புத்தகங்கள் வெளிவந்ததும், நாவல் ரசிகர்கள் தங்கள் அபிமான ஆசிரியரின் புதிய புத்தகங்கள் வந்திருப்பதாக நம்பி, இரண்டையும் வாங்கிப் படித்துப் பார்த்த பின், இரண்டும் ஒன்றே எனக் கண்டு ஏமாறுவதும் சகஜமாயிற்று.

அயல் நாட்டுப் பொருள் உதவித் திட்டத்தின் கீழ் மொழி பெயர்ப்பு நூல்களை வெளியிட முன்வந்த பதிப்பாளர்களில் சில பேர், அதிக லாபம் பெற ஆசைப் பட்டு, திறமை இல்லாத சாதாரண எழுத்தாளரிடம் மொழி பெயர்ப்பை ஒப்படைப்பது இயல்பாக அமைந்தது. திறமையுள்ள, புகழ் வாய்ந்த, எழுத்தாளருக்கு, அதிகமான பணம் கொடுக்க வேண்டியிருக்கும்; புதிய, இளைய, எழுத்தாளருக்கு ஏதோ கொஞ்சம் கொடுத்தால் போதுமே!

இதனால் பல நல்ல நூல்களின் தமிழாக்கம் தரம் குறைந்ததாக இருந்தது. வாசகருக்கு சலிப்புத் தருவதாக அமைந்தது.

தென் இந்திய மொழிகளின் புத்தகங்களை தமிழில் பிரசுரிப்பதற்கென்று ‘ஸ்தர்ன் லேங்குவேஜஸ் புக் ட்ரஸ்ட்’ என்றொரு அமைப்பு, அரசு நிதி

உதவியுடன், தோன்றிச் செயல்பட்டது. அது வெளியிட்ட மொழி பெயர்ப்பு நூல்கள் பெரும்பாலும் சரளமான நடையில், வாசகர்களுக்கு படிக்க வேண்டும் எனும் ஆசையை உண்டாக்குகிற விதத்தில் தமிழாக்கப்பட வில்லை. பக்கத்துக்குப் பக்கம் 'இவை மொழி பெயர்ப்பு' என்று உறுத்தும் விதத்தில் அவை தமிழாக்கப்பட்டிருந்தன. இயல்பான ஓட்டத்துடன் இனிய தமிழில் மொழிபெயர்க்கப் பட்டிராத புத்தகங்கள் வாசகர்களின் மதிப்பையும் ஆதரவையும் பெறாமலே போயின.

1960 களிலும் 70 களிலும், சாகித்திய அகாடமியும், நேஷனல் புக் ட்ரஸ்ட் என்ற அமைப்பும் மொழி பெயர்ப்பு நூல்களை நிறையவே வெளியிட்டிருக்கின்றன. இதர இந்திய மொழிகளில் உள்ள பெயர் பெற்ற படைப் பாளிகளின் நாவல்களை தமிழில் மொழி பெயர்த்து வெளியிடும் பணியையும் இவை செய்கின்றன.

இந்தத் திட்டத்தின்படி பல நல்ல நாவல்கள் தமிழாக்கப்பட்டுள்ளன. அநேக சாதாரண நாவல்களும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. இவை போதிய கவனிப்பையும் வரவேற்பையும் பெறாமலே போயின.

மொழி பெயர்க்கப்பட்டுள்ள நல்ல நாவல்கள் உரிய முறையில் வாசகர்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்படாதது முக்கிய குறைபாடு ஆகும். பத்திரிகை களில் அவை பற்றி எழுதப்பட்டதில்லை. நூலகங்களில் அவை வாங்கி வைக்கப்பட்டதும் இல்லை.

ரஷ்ய எழுத்தாளர்களின் படைப்புகள் சோவியத் ரஷ்யாவிலேயே தமிழாக்கம் செய்யப்பட்டு, அங்கேயே அச்சாகி, அழகிய முறையில் புத்தகங்களாக உருவாக்கப் பட்டு இங்கே வந்து சேரும் செயல்முறை அமுலுக்கு வந்தது. புத்தகங்கள் வசீகரமாகத் தயாரிக்கப்படுவதாலும், அச்சு – அமைப்பு - அச்சாகும் தாள் எல்லாம் நேர்த்தியாக இருப்பதனாலும், விலை சகாயமாக நிர்ணயிக்கப்படுவதாலும், இப்புத்தகங்களை வாங்கி வாசிப்பவர்கள் கணிசமான அளவில் நாடு நெடுகிலும் இருக்கிறார்கள்.



# 6

பத்திரிகைகள், புத்தகங்கள் படிக்கிறவர்களில் பெரும்பாலோர் பொழுதுபோக்கிற்காகத் தான் அவற்றைப் படிக்கிறார்கள்.

அவர்களில் அதிகமான நபர்கள் கதைகள், துணுக்குகளைப் படிக்கிற போது அவற்றை எழுதியிருப்பவர்கள் யார் எவர் என்று கூட அக்கறை காட்டுவதில்லை. ஏதோ கதை, படிப்பதற்குச் சுவையாக இருந்தால் சரி என்பது தான் அவர்களுடைய மனநிலையாக இருக்கிறது.

இப்படி படித்துப் படித்து அவர்களில் பெரும் பலருக்கு சில விதமான கதைகளின் மீது, சிலருடைய எழுத்துக்கள் பேரில், ஒரு தனிச் சுவை ஏற்பட்டு விடுகிறது.

அநேகமாக இந்த ஈடுபாடும் லயிப்பும் தொடர் கதைகள் விஷயத்தில் தான் முக்கியமாக ஏற்படுகின்றன என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

அதனாலேயே, பிரபலம் அடையாதவர்கள், பெயர் தெரியாதவர்கள், ஏதேதோ புனை பெயர்களில் எழுதுகிறவர்கள், இளைய எழுத்தாளர்கள், புதுசாக எழுதுகிறவர்கள் போன்றோரது கதைகளை ஜனரஞ்சகப் பத்திரிகைகள் பிரசுரிப்பதற்கு மனம் கொண்டாலும் கூட, தொடர்கதைகள் எழுதுவதற்கு புகழ் பெற்ற ஸ்டார் எழுத்தாளர்களை மட்டுமே அவை நாடுகின்றன.

சில எழுத்தாளர்கள் எழுதுகிற தொடர்கதைகள் பத்திரிகை வாசகர்களுக்கு வெகுவாகப் பிடித்துப் போகின்றன. தொடர்ந்து அவ் எழுத்தாளர்களின் தொடர்கதைகளை அவர்கள் அலுக்காமல் படிக்கிறார்கள்.

உடனே வணிக நோக்குப் பத்திரிகைகள் போட்டி போட்டுக் கொண்டு அவ் எழுத்தாளர்களின் எழுத்துக் களை வாங்கிப் பிரசுரிக்கின்றன. பத்திரிகைகளில் தொடர்கதை முடிவுற்ற உடனேயே, அதைப் புத்தகமாக வெளியிடுவதற்கு பதிப்பகத்தார் தயாராக இருக்கிறார்,

அப்படி வெளி வருகிற நாவலை வாங்கிப் படிப்பதற்கும் வாசகர்கள் இருக்கிறார்கள். புத்தகம் விரைவில் விற்பனையாவதிலிருந்து இது புரிய வருகிறது.

ஆயினும் எந்த ஒரு எழுத்தாளருக்கும் இது நீடித்த நிரந்தரமான, நிலையாக அமைவதில்லை. வாசகர்களின் அபிமானம் அல்லது மோகம், ஒரு கால கட்டத்திற்குத் தான் ஒரு எழுத்தாளர் மீது படிந்திருக்கிறது. பிறகு

அது வேறு விதமான எழுத்துக்களை உருவாக்குகிற இன்னொருவர் மீது தாவி விடுகிறது.

அதற்கு ஏற்பவே எழுத்தாளருக்கும் புகழ் (கவனிப்பு) 'சீசன்' நடைமுறையில் நிலவுகிறது. வாசகர்களின் ஆர்வம் வேறு திக்கில் பாயவும், முந்தியவரின் சீசன் மங்கிப் போகிறது. விரைவிலேயே வாசகர்கள் மத்தியில் அந்த எழுத்தாளருக்குக் கவனிப்பு இல்லாமல் போகிறது. அதை உணர்ந்த ஜனரஞ்சகப் பத்திரிகைக்காரர்கள் அவரை – அவர் எவ்வளவு பெரிய 'ஸ்டார் எழுத்தாளராக' இருந்த போதிலும்- ஒதுக்கி வைத்து விடுகின்றன.

வாசகர்களின் 'டேஸ்ட்' ஒரு வகை எழுத்தின் மீது ஏன் ஏற்படுகிறது; ஒரு உச்ச கட்டம் வரை போய் அது ஏன் சட்டென வேறொரு வித எழுத்தின் மீது படிகிறது; ஒரு எழுத்தாளரின் எழுத்துக்களை விரும்பிப் படித்துக் கொண்டே இருந்த வாசகர்கள் மெது மெதுவாக அவரை ஏன் ஒதுக்கி வைத்து விடுகிறார்கள். இத்தகைய விஷயங்களை எவரும் ஆய்வு செய்யவில்லை.

எந்த ஆய்வு மாணவராவது இவற்றை எல்லாம் ஆராய்ச்சிப் பொருளாக்கி உழைத்தால், ரசமான சுவையான உண்மைகள் தெரியவரக் கூடும்.

பத்து வருடங்களுக்கு ஒரு முறை வாசகர்களின் ருசிகள் மாறுகின்றன என்று சொல்லலாம். ஏனெனில், பத்து வருடங்களில் வாசகர்களின் தலைமுறையே

மாறுகிறது என்று சொல்ல வேண்டும். முன்பு படித்துக் கொண்டிருந்தவர்கள் முதுமை பெற்று விடுகிறார்கள். புதிய வாசகர்கள் நிறையப் பேர் வந்து விடுகிறார்கள். அடுத்த பத்து வருடங்களில் இளையவர்கள் வேறு வித ருசி பேதங்கள் கொண்டவர்கள் – வாசகர்கள் ஆகிறார்கள். இப்படி மாறிக் கொண்டே போகிறது, அல்லது வளர்ந்து கொண்டே இருக்கிறது எனச் சொல்லலாம்.

இலக்கியம், சமூகம், மனிதர்கள் இயல்பு முதலிய பல விஷயங்களையும் கூர்ந்து நோக்கி விமர்சனம் செய்வதில் ஈடுபட்டிருந்த நண்பர் ஒருவர் ஒரு சமயம் இவ்விதம் கூறினார்.

பத்து வருடங்கள் என்று சும்மா ஒரு கணக்கிற்காகத் தானே தவிர, வரம்பிட்டு கட்டுப்படுத்துவதற்கில்லை.

வாசகர்களின் மோகம் ஒருவித எழுத்தின் மீது பதினைந்து, இருபது வருடங்கள் வரை என்று படிந்திருக்கவும் விடும்.

அபூர்வமாக, ஒரு சிலரது தொடர்கதை எழுத்துக்கள் எல்லாத் தலைமுறையினருக்கும் பிடித்துப் போகின்றன. எந்தக் காலத்திலும் வாசகர்கள் அந்த எழுத்தாளரின் தொடர்கதைகளை ஆசையோடு படிக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதும் தெரிய வருகிறது.

பொதுவாக பார்க்கப் போனால், அந்த விமர்சக நண்பர் நோக்கு சரியானது தான் எனப் புரியும்.

1920 கள் 30 களில் வாசகர்கள் 'விழுந்து விழுந்து படித்த' வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்புசாமி முதலியார், ஜே. ஆர். ரங்கராஜு முதலியோரின் நாவல்களுக்கு காலப் போக்கில் வாசகர்களே இல்லாமல் போனார்கள்.

சரத் சந்திரர், காண்டேகர் நாவல்கள் ஒரு சீசனில் விரும்பி வாசிக்கப்பட்ட அளவுக்கு பின்னர் மிகப் பலரால் தேடி எடுத்து வாசிக்கப்படவில்லை.

மு. வரதராசன் எழுதிய நாவல்களுக்கு ஒரு கால கட்டத்தில் தான் மிகப் பரவலான செல்வாக்கு இருந்தது.

1930 களில் தொடர்கதை எழுதத் தொடங்கிய கல்கியின் எழுத்துக்களுக்கு வாசகர்கள் குறையாமல் இருக்கிறார்கள். அவருடைய சரித்திர நாவல்கள், ஒரே பத்திரிகையில் திரும்பத் திரும்ப அச்சிடப்பட்ட போதிலும், அலுப்பில்லாமல் வாசித்து மகிழ்கிறவர்கள் எல்லாக் காலத்திலும் இருக்கிறார்கள் என்பது நிரூபணமாகி உள்ளது.

அகிலன், நா. பார்த்தசாரதி, ஜெயகாந்தன் எழுத்துக்கள் ஒரு காலகட்டத்தில் மிக அதிகமான வாசகர்களால் வரவேற்கப்பட்டன. படித்து ரசித்துப் பாராட்டப்பட்டன. காலவேகத்தில் வாசகர்கள் அவற்றை குறை கூறவும், கவனிக்காதிருக்கவும் பழகிப் போனார்கள்.

1980 களில் தொடர்கதைகள் எழுதுவதில் வெற்றி பெற்ற 'லக்ஷ்மி' (டாக்டர் திரிபுரசுந்தரி) இடைக்காலத்தில் எழுதாமல் இருந்து, பிறகு எழுத ஆரம்பித்து நிறையவே எழுதிய போதிலும் - 40 வருடங்களுக்கு அப்புறமும் - வாசகர்களின் கவனிப்பையும் ஆதரவையும் முன்போலவே பெற முடிந்தது.

சிவசங்கரி, இந்துமதி போன்ற ஸ்டார் எழுத்தாளர் களின் எழுத்துக்கள் அதிகம் அதிகமான வாசகர்களின் ஆதரவைப் பெற்றன. சமீப வருடங்களில் அவற்றுக்கு முன்புபோல் வாசக வரவேற்பு இல்லை என்றே தெரிகிறது.

எழுத்து நடையிலும், கதை சொல்லும் முறை யிலும், கதைகளுக்கு எடுத்துக் கொண்ட விஷயத்திலும், 'இளமை, இனிமை, புதுமை,' சுவாரஸ்யம், கிளுகிளுப்பு எல்லாம் கலந்து எழுதிய சுஜாதா வாசகர்களிடம் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தினார். அவருடைய எழுத்துக் களை விரும்பிப் படிக்கும் வாசகர்கள் அதிகரித்தனர்.

அவரைப் போலவே எழுதக் கற்றுக் கொண்டு பலர் கதை எழுத முற்பட்டார்கள். அவரும் அதிகம் அதிகமாக எழுதும் ஆசையோடு பல பத்திரிகை களிலும் எழுதினார். புதுமையும் நயமும் குறைந்தன. வாசகர்கள் கவனம் இளையவர்கள் பக்கம் திரும்பி விட்டது.

சுஜாதாவை விட அதிகம் கவனிப்புக்கும் வரவேற்புக்கும் உரியவர் ஆனார் பாலகுமாரன்.

---

ஒன்றிரண்டு வருடங்களுக்குத் தான். புஷ்பா தங்கதுரை என்ற பெயரில் எழுதும் ஸ்ரீ வேணுகோபாலனுக்கும் வாசகர்களின் பேராதரவு கிடைத்தது.

ராஜேந்திரகுமார், ராஜேஷ்குமார் பத்திரிகை உலகில் ஒளிரும் நட்சத்திரங்கள் ஆகிவிட்டார்கள்.

சரித்திர நாவல் எழுதுவதில், கல்கிக்குப் பிறகு பெரும் மதிப்பையும் வாசக ஆதரவையும் சாண்டில்யன் பெற முடிந்தது. 1960 களிலிருந்தே.

வாசகர்கள் தொடர்கதைகளுக்கு (நாவல்களுக்கு) மட்டும் தான் ஆதரவு காட்டுவார்கள் என்பதில்லை. கட்டுரைகளினாலும் பெரும் பலர் ஈர்க்கப்படுவது உண்டு.

கண்ணதாசன் எழுதிய 'அர்த்தமுள்ள இந்து மதம்' மிக அதிகமான வாசகர்களைக் கவர்ந்தது. புத்தகமாக வந்தும் அது பலப்பல பதிப்புகளைக் கண்டு வருகிறது.

உதய மூர்த்தியின் சிந்தனைக் கட்டுரைகளை ரசித்துப் படிக்கிற வாசகர்கள் எண்ணிக்கைக்கும் குறைவில்லை.

# 7

வாசகர்கள் பலவிதம்.

எழுதப்படிக்கத் தெரிந்த எல்லோரும் பத்திரிகைகள் புத்தகங்கள் படிப்பதில் ஆர்வம் காட்டுகிற வாசகர்களாக வளர்வதில்லை.

பத்திரிகைகள் புத்தகங்கள் படிப்பதில் நாட்டம் செலுத்துகிற அனைவரும் எக்காலத்தும் வாசகர்களாக இருப்பதும் இல்லை.

படிக்க வேண்டும் எனும் ஆசை – பாடப்புத்தகங்கள் தவிர இதர கதைப்புத்தகங்கள், வாழ்க்கை வரலாறுகள், பத்திரிகைகள் முதலியவற்றைப் படிக்கிற அவா- ரொம்பப் பேருக்கு சிறுவயதிலேயே ஏற்பட்டு விடுகிறது. பலருக்கு உயர் வகுப்புகள் படிக்கிற போது ஏற்படுகிறது.

எண்ணற்ற பேர்களுக்கு, வேலை இல்லாமல் வீட்டில் இருக்கிற போது அந்த நாட்டம் உண்டாகிறது. பெண்களுக்கு, கல்யாணமாகாது வீட்டோடு இருக்கிற காலத்தில் இந்த ஆர்வம் தீவிரமாக இருக்கிறது.

உத்தியோகம் கிடைத்த பிறகு அநேகர் படிப்பதில் அவ்வளவாக நாட்டம் கொள்வதில்லை. பெண்களில் பெரும் பலர் திருமணம் ஆனபிறகு, குடும்பம் பிள்ளைகள் என்றெல்லாம் ஆகி விட்டதும், படிப்பதில் ஆர்வம் இல்லாதவர்களாக மாறிப்போகிறார்கள்.

அநேகர் முதுமைக் காலத்திலும் கூட பத்திரிகைகள், புத்தகங்கள், தொடர்கதைகள் முதலியவற்றை தேடி வாங்கி உற்சாகத்தோடு படிக்கும் இயல்பினராக இருக்கிறார்கள்.

சிறுவர் சிறுமியர்க்கென்று இப்போது ஏகப்பட்ட பத்திரிகைகள், சித்திரக் கதைகள், ரசமான கதைப் புத்தகங்கள் வருகின்றன. அவற்றை சிறு வயதினர் மட்டுமல்லாது பெரியவர்களில் அநேகர் கூட ஆசையோடு படிக்கிறார்கள்.

சிறார்க்கென்றே தோன்றிய சில பத்திரிகைகள் இளைஞர்களும் பெரியவர்களும் விரும்பிப் படிக்கும் பத்திரிகைகளாக விளங்குவதும் உண்டு.

தமிழ்வாணன் ஆசிரியராக இருந்து நடத்திய 'கல்கண்டு' பத்திரிகை வாசகர்கள் மத்தியில் அந்த விதமான வரவேற்பைப் பெற்றிருந்தது.

முதலில் அது சிறுவர் பத்திரிகையாகத் தான் தொடங்கப்பட்டது. பிறகு, சிறு வயதினர் மட்டுமின்றி, சிறிதளவு படிப்பறிவு உள்ளவர்களும் விரும்பிப் படிக்கும் பத்திரிகையாக அது விளங்கியது. பின்னர், வயது

வந்தோர் மற்றும் பெரியவர்களும் படிப்பதில் விருப்பம் கொள்ளத் தூண்டியது 'கல்கண்டு'.

அந்தப் பத்திரிகையில் தரப்பட்ட பல்சுவை விஷயங்களே இதற்குக் காரணம் ஆயின. ரசமான சிறுவர் கதைகள் மட்டுமே அதில் பிரசுரிக்கப்படவில்லை. சுவையான துணுக்குகள், மக்களின் அறியும் அவாவை திருப்தி செய்யக் கூடிய பல விதமான தகவல்கள், அறிவியல் விஷயங்கள், பிறமொழிக் கதைகள், மர்மம் – திகில்-துப்பறிதல் எல்லாம் நிறைந்த தொடர்கதைகள், ஆரோக்கியக் குறிப்புகள் முதலியன அதில் இடம் பெற்றன. எனவே, அதை பல தரத்தினரும் வரவேற்பது சாத்தியமாயிற்று.

சர்வ சாதாரண முறையில், எளிய நடையில், பல்சுவை விஷயங்களையும் தருகிற பத்திரிகைகளை வாசகர்கள் மகிழ்ச்சியுடன் ஆதரிக்கிறார்கள். இது எக்காலத்தும் நடைமுறை நிகழ்ச்சியாக இருந்து வருகிறது.

வீட்டு வைத்தியம், நாட்டு வைத்தியம், சோதிடக் குறிப்புகள், தன்னம்பிக்கை ஊட்டுகிற - சுயவளர்ச்சிக்கு வழிகாட்டுகிற கட்டுரைகள், கோயில்கள் திருத்தலங்கள் புண்ணியம் தேடித் தருகிற புனித இடங்கள் பற்றிய விவரிப்புகள் முதலியவற்றை விரும்பி, எதிர்பார்த்து, ஆர்வத்துடன் வரவேற்கிற வாசகர்கள் இந்த நாட்டில் மிக நிறையவே இருக்கிறார்கள்.

இதனாலேயே, வணிக நோக்கில் நடத்தப்படுகிற சகல மொழிகளின் பத்திரிகைகளும் (ஆங்கிலத்தில் வெளி வருகிற பத்திரிகைகளையும் சேர்த்தே தான்) இந்த ரக விஷயங்களுக்காக தாராளமாகப் பக்கங்களைச் செலவிடுகின்றன.

முன்பு 'சுதேசமித்திரன்' நாளிதழ் ஒவ்வொரு வாரமும் குறிப்பிட்ட ஒரு தினத்தன்று 'வார பலன்' என்று சோதிடக் குறிப்புகள் வெளியிட்டு வந்தது. அந்நாளைய இதழ் மிக அதிகமான பிரதிகள் செலவாயின என்று கணக்கு கூறியது.

அதே போல, 'சுதேசமித்திரன்' வாரப் பதிப்பு' குறித்த ஒரு வாரத்தில் மாத ராசி பலன் பிரசுரித்தது. அந்த வாரத்திய இதழ் - இதர வாரங்களின் இதழ்களை விட - வெகு அதிகமாக விற்பனைக்குத் தேவைப் பட்டது,

காலப்போக்கில், அநேகமாக எல்லா நாளிதழ்களும் ராசிபலனுக்கு ஒரு முழுப்பக்கம் ஒதுக்குவது சகஜமாகி விட்டது.

வாசகர்களின் மன இயல்பைப் புரிந்து கொண்ட பல வாரப் பத்திரிகைகளும், மாத இதழ்களும் கிரக பலன் வெளியிடுவதையும் தமது கடமையாகக் கொண்டு விட்டன.

ஒரு எழுத்தாளர்: ஓரளவு வாசகர்கள் நடுவே கவனிப்பும் பிரசித்தியும் பெற்றிருந்தவர். பல

பத்திரிகைகளில் ஆசிரியப் பொறுப்பு வகித்தவர். கிளுகிளுப்பூட்டும் கதைகளும், கிளர்ச்சியூட்டும் திகில்-மர்மக் கதைகளும், பிறவும் எழுதும் திறமை பெற்றவர், ஒரு புனை பெயர் சூடிக் கொண்டு ராசிபலன் - கிரக பலன் என்று பத்திரிகைகளிலும், விசேஷ வெளியீடு-களாகவும் எழுதி வந்தார். வருட ஆரம்பத்தில், ஒவ்வொரு ராசிக்கும் வருட பலன் கணித்து, தனித் தனிப் புத்தகங்களாக பிரசுரிப்பதிலும் அவர் ஆர்வம் காட்டினார்.

— மற்ற விதமான கதைகள் எழுதிக் கொண்டிருப்பதை விட, ஒவ்வொரு ராசிக்கும் வருட பலன் எழுதி, தனித் தனிப் புத்தகங்களாக அச்சிட்டு, தமிழ் நாடு பூராவும் விற்பனைக்கு அனுப்பி, பண வசூல் செய்வது ரொம்பவும் லாபகரமான தொழில் என்று கண்டு கொண்டேன். கதைப் புத்தகங்கள் - துப்பறியும் மர்மக் கதைகள் கூட - அதிகமாய் போனால் இரண்டு ஆயிரம் மூவாயிரம் விற்பனையாகலாம். ஆனால், ராசி ரீதியாக வருட பலன் என்பதை ஒவ்வொரு ராசிக் காரரும் ஆவலுடன் வாங்கிப் பார்க்கிறார். இது பத்தாயிரக் கணக்கில் விலை போகிறது. ஒரு புத்தகம் ஒரு ரூபாய் என்று விலை வைத்தாலே எக்கச்சக்கமாக நமக்குப் பணம் வந்து சேர்ந்து விடும். ஏஜன்சி கமிஷன், ஊர் ஊராகப் போய் புத்தகங்களை விநியோகிப்பது, பணம் வசூல் செய்வது இவற்றுக்கெல்லாம் ஆகக்கூடிய செலவுகளை ஒதுக்கி விட்டுப் பார்த்தாலும் நமக்கு நல்ல லாபம் கிடைக்கிறது...

இப்படி அந்த நண்பர் ஒரு சமயம் தெரிவித்தார். இது 1960 களில்.

அதன் பிறகும் நிலைமை பகுத்தறிவு ஒளி ஏற்று மாறுதல் பெற்றுவிடவில்லை.

சோதிட மோகம் வாசகர்களிடம் அதிகமாக வளர்ந்துள்ளது என்று சொல்ல வேண்டும்.

சோதிடத்துக்கென்றே பலவிதமான பத்திரிகைகள்- தாள்களாகவும் புத்தக வடிவத்திலும் - 1970 களில் அதிகம் அதிகமாக வந்து கொண்டிருந்தன.

இவற்றில் பல வெளியீடுகள் நின்று போயிருக்கலாம். எனினும், 1980 களிலும் சோதிடப் பத்திரிகைகள் பல வந்து கொண்டு தான் இருக்கின்றன. அவற்றை வாங்கி ஆர்வமாக கவனிக்கிற வாசகர்களும் நிறையவே இருக்கிறார்கள்.

மனிதர்கள் எதிர்காலம் பற்றிக் கனவு காண்கிறார்கள். வளமான எதிர்காலத்துக்கும், அதற்கு வகை செய்யக்கூடிய அதிர்ஷ்டத்துக்கும் ஆசைப் படுகிறார்கள். எண்ணங்கள் வளர்க்கிறார்கள். அவை எல்லாம் சித்திக்க வேண்டும் என விரும்புகிறார்கள். சித்திக்கும், எண்ணங்கள் முழுதுமாக இல்லாவிட்டாலும் அரைவாசி கால்வாசியாவது நிறைவேறும் என்று நம்பிக்கை ஊட்டுகிற ஆசை வார்த்தைகள் அவர்களுக்கு தெம்பு தருகின்றன. ராசி பலன்களும் சோதிடக் குறிப்புகளும் இந்த வேலையைச் செய்கின்றன.

எனவே தான் அவற்றுக்கு வரவேற்பு பெரும் அளவில் கிட்டுகிறது.

மனித மன இயல்புகளையும் பலவீனங்களையும் ருசிகளையும் நன்றாகப் புரிந்து கொண்டு - சரியாகக் கணித்து - திட்டமிட்டுச் செயலில் ஈடுபடுகிற வணிக நோக்குப் பத்திரிகைக்காரர்கள் தொழில் வெற்றி அடைகிறார்கள். வாசகர்கள் அவர்களை ஏமாற்றுவது இல்லை.

வாசகர்களின் தரம் உயர்வதற்கான வழிவகைளைச் செய்ய வேண்டும்; தரம் உயர்ந்த வாசகர்களின் அறிவுப் பசிக்கும் சிந்தனை வேகத்துக்கும் புதுமை வேட்கைக்கும் திருப்தி தரக்கூடிய விதத்தில் உலகத்து அற்புதங்களை எல்லாம் தமிழில் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நினைப்பு, லாபத்திலேயே குறியாக வணிக நோக்குடன் பத்திரிகைகள் நடத்துகிற பண அதிபர்களுக்கு சிறிதளவு கூட எழாது.

வாசகர்களை மயக்க நிலையிலேயே இருக்க வைத்து, அவர்களது அறிவையும் சிந்தனைத் திறனையும் மழுங்கடித்து, தாங்கள் கொடுக்கிற சரக்குகளை வாங்கி நுகரும்படி செய்வதில் கருத்தாக இருப்பவர்களே பத்திரிகைத் தொழில் அதிபர்கள்.

இவ்விஷயம் குறித்து 'எழுத்தாளர்கள் பத்திரிகைகள் - அன்றும் இன்றும்' என்ற புத்தகத்தில் விரிவாகவே கூறப்பட்டுள்ளது.

வாசகர்களில் பெரும்பாலோர் கிளுகிளுப்புச் செய்திகளையும், கிசுகிசுத் தகவல்களையும், சிரிக்க வைக்கும் துணுக்குகளையும், சினிமா நடிகர் நடிகைகள் பற்றிய வம்பளப்புகளையும் ஆவலுடன் விழுங்குகிறார்கள் என்பதனால், பத்திரிகை நடத்துகிறவர்கள் இந்த ரகமான விஷயங்களை மிகுதியாக சேகரித்துத் தரும் தளங்களாகவும் மேடைகளாகவும் ஆக்கி விட்டார்கள் தங்களுடைய பத்திரிகைகளை.

இவற்றுடன், சிலிர்க்க வைக்கும் மர்மச் செயல்கள், கொலைகள், பரவசப்படுத்தும் பெண் அழகு வர்ணனைகளும் காமச்செயல் விவரிப்புகளும் நிறைந்த, விறுவிறுப்பாக வளரும் கதைகளை சப்ளை பண்ணுவதிலும் பத்திரிகை அதிபர்கள் கருத்தாக இருக்கிறார்கள். வாசகர்கள் இவற்றை விரும்பும் ருசியிலிருந்து விடுபடத் தயாராக இல்லை என்பதை பத்திரிகைக்காரர்கள் நன்றாக அறிந்து வைத்திருக்கிறார்கள்.

'மாதம் ஒரு வெளியீடு' அவர்களுக்கு வெகுவாகக் கைகொடுத்துள்ளது.

'மாதம் ஒரு மலர்' என்று கதைகள், கட்டுரைகள், கவிதைகளுடன் வெளிவரத் தொடங்கிய வெளியீடுகள், சில வருடங்களிலேயே, குறைந்து தேய்ந்து இல்லாது போயின. 'குமரி மலர்' மட்டுமே நீடித்து வளர்ந்தது.

பின்னர், 'ராணி' நிறுவனம் 'ராணி முத்து' என்ற

மாதம் ஒரு நாவல் வெளியீட்டை தொடங்கியது. இது தமிழில் வித்தியாசமான முயற்சியாக அமைந்தது.

தமிழில் புத்தகமாகப் பிரசுரமாகி ஓரளவுக்கு நல்ல கவனிப்பைப் பெற்றிருந்த நாவல்களை மாதம் ஒன்றாக வெளியிட்டது ராணி முத்து. பிரசித்தி பெற்ற எழுத்தாளர் களின் நாவல்கள்—அதிக விலையில் புத்தகமாக வெளி வந்தவை - 'முழுமையாக' ஒரு ரூபாய் விலையில் தரப்படவும், வாசகர்கள் ஆர்வத்தோடு வாங்கிப் படிக்கலானார்கள்,

முழுமையாக, புத்தகத்தில் உள்ளபடியே தரப் படுவதாக 'ராணி முத்து' விளம்பரப்படுத்தி வந்த போதிலும், பெரிய புத்தகத்திலிருந்து சுருக்கியும் குறைத்தும், சில பகுதிகளை நீக்கியும் தான் மாத வெளியீட்டைப் பிரசுரித்தது. இருந்த போதிலும், அதிக மான விலையில் பெரிய புத்தகங்களை வாங்கிப் படிக்க மனமோ வசதியோ பெற்றிராத பல ஆயிரக்கணக்கான வாசகர்களுக்கு ராணி முத்து வெளியீடுகள் லாபகர-மானவையாகத் தோன்றின.

'மலிவு விலைப் பிரசுரங்கள்' எப்பவுமே வாசகர் களைக் கவர்ந்திழுக்கக் கூடியவை என்பது புத்தக வெளியீட்டாளர்கள் காலம் காலமாக உணர்ந்துள்ள உண்மை ஆகும்.

1950 களில் 'சக்தி' வை. கோவிந்தன் ஒரு துணிகரமான முயற்சியில் ஈடுபட்டு, பல பிரசுரகர்—

களுக்கும் வழிகாட்டியானது வரலாறு.

முதன் முதலாக, மகாகவி பாரதியார் கவிதைத் தொகுப்பை முழுமையாக ஒரு ரூபாய் விலைக்கு, பெரிய புத்தகமாகத் தயாரித்து வெளியிட்டார் வை. கோ. அதற்குப் பிரமாத வரவேற்பு கிட்டியது.

அடுத்து, அவர் 'திருக்குறள்' (உரையுடன்) வெளியிட்டார். மாயூரம் வேத நாயகம் பிள்ளை எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' 'சுகுண சுந்தரி' ஆகிய இரண்டு நாவல்களையும் ஒரே புத்தகமாகப் பிரசுரித்தார். தொடர்ந்து கம்பராமாயணம் 'சுந்தரகாண்ட'த்தை மலிவுப் பதிப்பாகக் கொண்டு வந்தார். அதற்கு மேல் அவர் பிரசுரத்தைத் தொடரவில்லை.

இதற்குள் தமிழில் இதர 'மலிவுப் பதிப்பு' முயற்சிகள் அதிகரித்து விட்டன. 'காதல்' பத்திரிகை நடத்திய அரு. ராமநாதன், தனது 'பிரேமா பிரசுரம்' வாயிலாக சித்தர் பாடல்கள், விக்கிரமாதித்தன் கதைகள், மதனகாமராஜன் கதைகள், கதைக்கடல் முதலியவற்றை மலிவு விலை நூல்களாக வெளியிட்டு வாசகர்களுக்கு விருந்தளித்தார்.

நடேச சாஸ்திரியின் 'திக்கற்ற இரு குழந்தைகள்' நாவலை ஒரு பதிப்பகம் மலிவுப் பதிப்பாகப் பிரசுரித்தது.

இவை எல்லாம் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று மலிவு விலையில் விற்கப்பட்டதால், வாசகர்

களுக்கு லாபகரமாகவே அமைந்தன. எளிதில் வாங்கிப் படிக்கக் கூடியனவாகவும் இருந்தன.

மலிவு விலைப் பதிப்புகளாக உயர்ந்த நூல்களை வெளியிட்டு ஒரு சாதனை புரிந்த ஒருவரைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். மர்ரே அன்ட் கம்பெனி ராஜம் என்பவர் தான் அவர்.

கம்ப ராமாயணம், சிலப்பதிகாரம், மணிமேகலை வில்லிபாரதம், புறநானூறு, அகநானூறு மற்றும் சங்கப் பாடல்கள் பலவற்றையும் தனித்தனிப் புத்தகங்களாக அச்சிட்டு விநியோகித்தார். கம்ப ராமாயணம் ஒவ்வொரு காண்டமும் தனித்தனியே வெளியிடப்பட்டது. ஆனால் எல்லா நூல்களின் 'மூலம்' மட்டுமே தெளிவாக அச்சிடப்பட்டன. எந்த நூலுக்கும் 'உரை' சேர்க்கப்படவில்லை.

பாராட்டுதலுக்கு உரிய இந்த இலக்கியப் பணியை, ஒவ்வொரு நூலிலும் ஒரே ஒரு பதிப்பு வெளியிட்டதோடு அவர் நிறுத்திக் கொண்டார். அது வாசக உலகத்துக்கு நட்டம் தான்.

'ராணி முத்து' பிரபல எழுத்தாளர்களின் பெயர் பெற்ற நாவல்களை ஒரு ரூபாய் புத்தகமாக வெளியிடவும், வாசக உலகம் மகிழ்ச்சியோடு வரவேற்று ஆதரித்ததில் வியப்பு எதுவும் இல்லை.

பல வருடங்களுக்குப் பிறகு, 'குமுதம்' பத்திரிகை நிறுவனம் 'மாதம் ஒரு நாவல்' வெளியிட முன் வந்தது. 'மாலைமதி' வெளியீடு தோன்றியது.

'மாலைமதி', ராணிமுத்து போல் அல்லாது, பல எழுத்தாளர்களிடம் புதுசாக நாவல் எழுதித் தரும்படி கேட்டு வாங்கிப் பிரசுரித்தது. ஒரு ரூபாய் விலையில் அதிகமான பக்கங்களுடன், அழகான கவர்ச்சிப்பட அட்டையுடன் வரும் இந்த வெளியீடு வாசகர்களைப் பெரும் அளவில் ஈர்க்க முடிந்தது.

அதன் வெற்றியைக் கண்ட ஜனரஞ்சகப் பத்திரிகை ஒவ்வொன்றும் 'மாதம் ஒரு நாவல்' வெளியீட்டைப் பிரசுரிக்கத் துணிந்தது.

இவை எல்லாம் பத்தாயிரக்கணக்கில் விற்பனை ஆயின, ஆகின்றன. வாசகர்கள் விரும்பிப் படிக்கிற 'தொடர்கதை' எழுத்தாளர்கள் தான் இம்மாத வெளியீடு களுக்காகவும் நாவல்கள் எழுதிக் கொடுக்கிறார்கள். மசாலாத்தனங்கள் பலவும் சேர்க்கப்பட்ட கொலை, மர்ம நாவல்களே இவ் வெளியீடுகளில் இடம் பெறுகின்றன.

மாத நாவல் வெளியீடு லாபகரமான பிசினஸ் ஆக வளர்வதைக் கண்ட அநேகர் தனித்தனியே இந்த ரகப் பிரசுரங்களை ஆரம்பித்து நடத்துவது கால நியதி ஆகி விட்டது.

ஏற்கனவே 'மாத நாவல்' வெளியிட்டு வந்தவர்கள் தங்கள் வெளியீட்டை 'மாதம் இரு முறை' என்று ஆக்கிவிட்டார்கள். மாதம் ஒரு தடவை வந்து கொண்டிருந்த 'மாலைமதி' வாரம் தோறும் வெளிவரும் பிரசுரம் ஆகி விட்டது.

இவற்றுடன் போட்டி போடுகிற விதத்தில் 'பாக்கெட் புக்ஸ்' 'கிரைம் நாவல்ஸ்' என்ற பெயரில் சிறு வடிவப் புத்தகங்கள் வெளிவர ஆரம்பித்தன. அவை வேகமாக விற்பனையாவதாகவே தெரிகிறது.

பெரும்பாலும் இவ்வெளியீடுகள் அனைத்தும் அவசரம் அவசரமாக எழுதித் தள்ளப்பட்ட, விறுவிறுப்பும் ஜிலுஜிலுப்பும் நிறைந்த, குற்றங்கள் கொலைகள் செக்ஸ் விவகாரங்கள் மிகுந்த கதைகளையே கொண்டிருக்கின்றன. வாழ்க்கை யதார்த்தங்களைப் பிரதிபலிக்காத, கனவுகளும் கற்பனைகளும் நிறைந்த கதைகளும் அவற்றைப் படிக்கிற முதிரா இளம் உள்ளங்களில் – பண்பும் பயிற்சியும் பெற்றிராத மனசுகளில் கிளர்ச்சியும் கிளுகிளுப்பும் மூட்டக்கூடிய பரப்பரப்பு எழுத்துக்கள்.

எப்பவாவது, அபூர்வமாக, இவற்றில் வித்தியாச மான படைப்புகள் வந்து விடுகின்றன. ஐம்பது வெளியீடு களில் மூன்று நான்கு இப்படி அமைந்து விடக்கூடும்.

மற்றபடி, வாசகர்களுக்கு போதைப் பொருளாக விளங்கக்கூடிய எழுத்துக்களே இம் மலிவு வெளியீடு களின் மூலம் சப்ளை செய்யப்படுகின்றன.

இந்த விதமான நாவல் பிரசுரங்கள் தமிழில் சுமார் எழுபது மாதம் தோறும் வெளிவருவதாகச் சொல்லப்படுகிறது. ஒவ்வொன்றும் பத்தாயிரக்கணக்கில் விற்பனையாவதாகவும் கூறப்படுகிறது.

இவ் மலிவுப் பிரசுரங்களை மக்கள் ஏன் விரும்பிப் படிக்கிறார்கள்?

'பொழுது போக்காக' என்று சொல்லலாம். அது மட்டுமல்ல. வாழ்க்கையின் வெறுமையை, சோகங்களை, கவலைகளை மறப்பதற்கு இத்தகைய எழுத்துக்கள் துணை புரிகின்றன. உண்மைகளைக் கண்டு கொள்வதிலிருந்து வழி விலகிச் செல்ல - வாழ்க்கை யதார்த்தங்களிலிருந்து சிறிது நேரத்துக்காவது மனம் நழுவிப் போக—இவை உதவுகின்றன. ஒரு 'எஸ்கேப்பிசம்' ஆக இக் கனவுகளும் கற்பனைகளும், போலிப்பகட்டுகளும் பொய்மைகளும் நிறைந்த எழுத்துக்கள் பயன்படுகின்றன.

வாழ்க்கையைப் பிரதிபலிக்காத – நம் நாட்டின் கலைத்தன்மைகளையும் கலாச்சாரங்களையும் எடுத்துக் காட்டாத, அதீதக் கற்பனைகளையும் அபத்தக் கூத்தடிப்புகளையும் கொண்ட திரைப்படங்களையும் டி. வி. காட்சிகளையும் மக்கள் ஆவலோடு பார்ப்பதற்கும் இது தான் அடிப்படைக் காரணம்.

இவை எல்லாம் மக்களின் மனசையும் அறிவையும், சின்ன வயதிலிருந்தே, கெடுத்து வருகின்றன. சமூகத்தின் பண்பாட்டையும் சிதைத்துச் சீரழித்துக் கொண்டிருக் கின்றன.

# 8

மற்றவர்களை - முக்கியமாக பிரபலமானவர்களை, உயர் பதவிகளில் இருப்பவர்களை, அரசியல் தலைவர்களை, ஆட்சியாளர்களை – கண்டித்தும், குறை கூறியும், கடுமையாக விமர்சித்தும், பரிகசித்தும், நையாண்டி பண்ணியும் எழுதுகிற எழுத்துக்களை வாசகர்களில் ஒருசாரார் விரும்பிப் படிக்கிறார்கள்.

இவ்விதமான எழுத்துக்களை கட்டுரைகளாகவும், செய்தி விமர்சனங்களாகவும், கார்ட்டூன்களாகவும், நாடகங்கள் கதைகள் தொடர்கதைகளாகவும் பிரசுரித்துக் கொண்டிருக்கிற பத்திரிகைகளுக்கு லட்சக்கணக்கில் வாசகர்கள் சேர்வதை அறிய முடிகிறது.

ஆளும் கட்சியையும் ஆட்சியாளர்களையும் பல்வேறு முறைகளில் கிண்டல் செய்தும், கடுமையாக விமர்சனம் பண்ணியும், நகைச்சுவையோடு அவர்களது குறைபாடுகளை எடுத்துக் கூறியும், வாசகர்கள் மத்தியில் தனித்த செல்வாக்கைப் பெற்றுள்ளது. சோவின் 'துக்ளக்'

பத்திரிகை. சோவின் எழுத்துத் திறமை 'துக்ளக்' மாதம் இருமுறைப் பத்திரிகையை படிப்படியாக வளர்த்துள்ளது. பல்லாயிரக் கணக்கான வாசகர்கள் என்ற எல்லை அகண்டு பரவலாகி சில லட்சம் வாசகர்கள் எனும் பரப்பைத் தொட்டுள்ளது.

சினிமா விஷயங்களையும், சினிமா நட்சத்திரங்கள் பற்றிய கிசுகிசுக்களையும் சுவையாகத் தந்தால் மட்டுமே எண்ணிக்கை உயரும் என்கிற பத்திரிகை உலக நம்பிக்கை பொய்த்துப் போகும்படி செய்த பெருமை சோ-ராமசாமிக்கு உண்டு.

சிறிது காலம் துக்ளக் பத்திரிகை சினிமாப் பட விமர்சனங்களை, தனக்கென அமைத்துக் கொண்ட தனிப் பாணியில், வெளியிட்டுக் கொண்டிருந்தது. அந்த அந்தப் படத்தின் டைரக்டர் (இயக்குநர்) பதிலையும் வாங்கிப் பிரசுரித்து வந்தது.

பின்னர் அந்த வழக்கத்தை நிறுத்திக் கொண்டது. அரசியல், சமூக விவகாரங்களிலேயே தன் கவனத்தைச் செலுத்துகிறது. நாட்டின் பல்வேறு துறைகளிலும் நிலவுகிற ஊழல்களை மக்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறது.

'இன்வெஸ்டிகேஷன் ஜர்னலிசம்' என்று சொல்லப் படுகிற எழுத்து முறையை (பத்திரிகைத் தன்மையை) துக்ளக் வெற்றிகரமாக வளர்த்து விட்டிருக்கிறது.

வாசகர்கள் இந்த ரகப் பத்திரிகைப் போக்கை வரவேற்கிறார்கள் என்பதற்கு 'துக்ளக்' கைப் பின்பற்றி,

அதே மாதிரிப் பத்திரிகைகள் பல தோன்றியுள்ளதே நல்ல சான்று ஆகிறது.

விசிட்டர், விசிட்டர் லென்ஸ், ஜூனியர் விகடன், தராசு, நேயர் விமர்சனம் – இப்படி அநேகம்.

இவற்றில் ஜூனியர் விகடன், தராசு ஆகியவை வாசகர்களின் ஆதரவை அதிகமாகவே பெற முடிந்துள்ளது.

இப்பத்திரிகைகள் நாட்டில் பரவலாக நீடிக்கிற, வளர்ந்து கொண்டிருக்கிற, ஊழல்களை சுட்டிக் காட்டுகின்றன; அவற்றுக்கான பரிகாரங்களைத் தேட வழிகாட்டுவதில்லை, அவ்வழியில் முயல்வதும் இல்லை. இதை வாசகர்களில் பலப்பலர் உணர்ந்து தான் இருக்கிறார்கள். தங்கள் அபிப்பிராயத்தை அவ்வப்போது வெளியிட்டும் வருகிறார்கள்.

'இன்வெஸ்டிகேஷன் ஜர்னலிசம்' எனும், ஊழல் களையும் குறைபாடுகளையும், சமூக அநீதிகளையும் அதிகாரச் சீர்கேடுகளையும் கண்டு சுட்டிக்காட்டுகிற பத்திரிகை எழுத்து முறை ஜனங்களிடையே பரபரப்பான கவனிப்பைப் பெறுகிறது என்பதை அறிந்த வணிக நோக்குப் பெரும் பத்திரிகைகள் கூட, கதைகள் வெளியிடுவதைக் குறைத்துக் கொண்டு, இப்படிப்பட்ட 'சமூக நல ஆய்வு'க்கட்டுரைகளை அதிகமாகப் பிரசுரிப் பதில் அக்கறை காட்ட முற்பட்டுள்ளன.

இந்த ரகமான செய்திக்கட்டுரைகளையும், தகவல் குறிப்புகளையும், ஊர் சுற்றி மக்களை சந்தித்து

உண்மை அறிந்து விவரிக்கிற எழுத்துக்களையும் தயாரித்து அனுப்புவதற்கு இளைஞர்களையும் மாணவ மாணவிகளையும் சில பத்திரிகைகள் பயிற்றுவிக்கின்றன.

இதே ரீதியில் சினிமா வட்டாரங்களில் சுற்றியும், ஸ்டுடியோக்களில் அலைந்து திரிந்தும், சினிமாத்துறையினரை சந்தித்துப் பேசியும், சினிமா உலக உண்மைகளையும் வம்புகளையும் சேகரம் செய்து சுவாரஸ்யமாக வெளியிடுவதன் மூலம் வாசகர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதிலும் பத்திரிகைகள் கருத்தாக இருக்கின்றன.

சினிமா சஞ்சிகைகள் மட்டுமின்றி, ஜனரஞ்சகப் பத்திரிகைகள் என்று சொல்லிக் கொள்கிற வணிக நோக்குப் பத்திரிகைகளும் இவ்வியாபார நுணுக்கங்களைத் திறமையாகக் கையாள்கின்றன. தினத்தாள்கள் அனைத்தும், வாரம் தோறும் குறித்த ஒரு நாளில், இந்த விதமான சினிமா உலகச் செய்திகளுக்காக, பக்கங்களை தாராளமாகவே ஒதுக்குகின்றன.

சாதாரண வாசகர்கள் இவற்றை எல்லாம் ரசித்து மகிழத் தவறுவதில்லை.

சாதாரண வாசகர்கள் ஏமாறத் தயாராக இருக்கிறார்கள். எனவே பத்திரிகைகள் அவர்களை ஏமாற்றத் தயங்குவதில்லை,

சினிமா நடிகைகள் நடிகர்கள் பேரில் மக்களுக்கு ஒரு மோகம் இருக்கிறது. அதை பத்திரிகைக்காரர்கள் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

நடிகைகளும் நடிகர்களும் கதைகள் எழுதுவதாகவும் கேள்விகளுக்கு பதில் சொல்வதாகவும் விளம்பரப்படுத்தி தங்களுடைய பத்திரிகைகளின் விற்பனையைப் பெருக்கிக் கொள்வதில் கவனம் செலுத்துகிறார்கள்.

புகழ் பெற்ற நடிகைகளும் நடிகர்களும் எழுதிய கதைகள், தொடர்கதைகள், கட்டுரைகள் என்று பத்திரிகைகள் வெளியிடுவது இப்போதெல்லாம் சர்வ சாதாரணமாகிவிட்டது. இவற்றில் பெரும்பாலானவை பெயர் குறிப்பிடப்படும் நடிகைகள் அல்லது நடிகர்களால் எழுதப்படுவதில்லை. 'Ghost writing' என்கிற முறை தான். அவர்களுக்குப் பதிலாக வேறு எவராவது எழுதி விடுவது தான் வழக்கமாக இருக்கிறது.

பத்திரிகை ஆசிரியர் குழுவில் பணி புரியும் திறமையாளர்களில் எவராவது ஒருவர் இத்திருப்–பணியை வெற்றிகரமாகச் செய்வது தான் பத்திரிகை உலக நியதி ஆகும்.

அச்சில் அவற்றைப் பார்க்கிற சாதாரண வாசகர்கள் அவை எல்லாம் தங்களது அபிமான நட்சத்திர நடிகைகளாலும் நடிகர்களாலும் எழுதப் பட்டவையே என்று எண்ணிக் கொள்வதும் இயல்பாக நடக்கிறது.

நடிகர்களிலும் நடிகையரிலும், எழுதக் கூடிய திறமை பெற்றவர்கள் ஒரு சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் 'அபூர்வ கேஸ்'கள்.

இதே போன்று தான், பெண்கள் பெயரில் எழுதப்படுகிற எழுத்துக்களில் அநேகம் பெண்களால் எழுதப்படுவதில்லை என்கிற உண்மையும்.

பத்திரிகைகளில் பணிபுரிகிற ஆசியர்கள், துணை ஆசிரியர்கள் – பொதுவாக ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவர்களுக்கு, வாசகர்கள் பெண்கள் பெயர்களைப் பார்த்தாலே ஒருவிதக் கிறக்கம் கொண்டு விடுவார்கள் எனும் நினைப்பு இருக்கிறது. அவர்களே பெண்கள் பெயரில் கதைகள் எழுதுவதோடு, பெண்கள் பெயரில் எழுதப்பட்டு வருகிற கதைகளுக்கு விசேஷ கவனிப்பு அளிக்கிறார்கள்.

இதனால், பத்திரிகைகளில் சுலபமாக இடம் பெற ஆசைப்படுகிற எழுத்தாளர்களில் சிலர் பெண் பெயரைச் சூடிக்கொண்டு எழுதத் தொடங்குகிறார்கள். வெற்றியும் பெற்று விடுகிறார்கள்.

சிறிது காலம் எழுதிய பிறகு, பெயரும் புகழும் எவளோ ஒரு பெண்ணுக்கு - அந்தப் பெண் கதை எழுதுகிறவரின் மனைவியாகவே இருந்த போதிலும்-போய் சேருவதை அந்த எழுத்தாளராலேயே சகித்துக் கொள்ள முடியாமல் போகிறது. 'உண்மையில் எழுதுவது நான் தான்' என்று விளம்பரப்படுத்திக் கொள்ளத் தவிக்கிறார் அவர்.

பத்திரிகை ஆசிரியரும் பெயர் பெற்று விடுகிற பெண்ணின் பேரிலேயே கதையைப் பிரசுரித்து, அவரை அறிமுகம் செய்யும் வகையில் ஆணின் படத்தை அச்சிட்டு வைக்கிறார்.

அப்புறமும் அந்த எழுத்தாளர் தொடர்ந்து பெண் பெயரிலேயே தான் எழுதுகிறார். சந்தர்ப்பம் நேர்கிற போது எல்லாம் ஆண் படம் தான் பிரசுரிக்கப்படுகிறது,

இது முதல் ரகமான ஏமாற்று வேலையாகத் தான் தோன்றுகிறது. அல்லது, வாசகர்கள் ‘இளிச்சவாயர்கள்’, ஏமாற்ற ஏமாற்ற, மேலும் ஏமாறவே தயாராக இருப்பார்கள் என்று சம்பந்தப்பட்ட அனைவரும் எண்ணிச் செயல் புரிகிறார்களோ என்னவோ!



# 9

படிக்கிறவர்கள் (வாசகர்கள்) பற்றி என் நண்பர் ஒருவர் விரிவாகச் சொன்ன கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை ஆகும்:

— பொதுவாக இப்போதெல்லாம் புத்தகங்கள் படிக்கிறவர்கள் அதிகமாக இல்லை. புத்தகங்களை – புதுசோ பழசோ - தேடி எடுத்துப் படிக்க வேண்டும் என்கிற ஆர்வம் உடையவர்கள் குறைவாகத் தான் இருக்கிறார்கள். அவர்களிலும் புத்தகங்களை விலை கொடுத்து வாங்கிப் படிக்கிறவர்கள் ரொம்பவும் குறைவு.

— படிக்கும் பழக்கம் உடையவர்களில் மிக அதிகமான பேர் பொழுது போக்கிற்காகத் தான் படிக்கிறார்கள், இவர்களுக்கு, புத்தகம் என்று ஏதாவது இருந்தால் போதும். நல்ல விஷயங்களைக் கொண்ட தரமான படைப்பு நூல் தான் தேவை என்ற கட்டாயம் எதுவும் இல்லை. சிரமப்படுத்தாத - சிந்தனைக்கு வேலை கொடுக்காத – பத்திரிகைகளே போதும். கதைப் புத்தகம் என்றால், சரளமான நடையில் கதை சொல்கிற,

சம்பவப் பின்னல்களைக் கொண்ட, கிளர்ச்சி ஏற்படுத்துகிற கதைகளாக இருக்க வேண்டும். அதனால் தான் கொலை, கொள்ளை, மர்மம், காமம், துப்பறிதல் எல்லாம் உடைய த்ரில்லர்கள் மிகப் பலரால் விரும்பப்படுகின்றன.

— பொழுது போக்கிற்காகப் படிக்கிறவர்கள் கூட, ஒரு காலகட்டத்துக்குப் பிறகு படிப்பதிலும் சோம்பல் கொள்கிறார்கள். யாரோடாவது பேசி வம்பளந்து பொழுது போக்குவது இவர்களுக்கு மிகவும் பிடித்த விஷயம் ஆகி விடுகிறது. மணிக்கணக்கில், பொருள் இருக்கிறதோ இல்லையோ, எதைப் பற்றியாவது பேசிக் கொண்டிருப்பதில் அளவற்ற சந்தோஷம் அடைகிறார்கள்.

— இந்த ரகத்தினர் பலருக்கு இப்போது 'வரப்பிரசாதம் போல்' டெலிவிஷன் கிடைத்திருக்கிறது. டி. வி. யில் காட்டப்படுவது நல்ல நிகழ்ச்சியோ இல்லையோ — தரமானதோ அபத்தக்களஞ்சியமோ — எதுவாக இருந்தாலும் சரியே. 'செவனேன்னு' (சிவனே என்று) உட்கார்ந்து, அல்லது ஈசிச் சேரில் சாய்ந்தபடி, நாள் பூராவும் பார்த்துக் கொண்டிருப்பதில் இவர்களுக்கு ரொம்ப திருப்தி. பத்திரிகை அல்லது புத்தகத்தைக் கையில் பிடித்து, கண்களை ஓடவிட்டு, கவனம் செலுத்தி வாசிக்க வேண்டிய சிரமம் டி. வி. பார்ப்பதில் இல்லையே! ஆகவே, சோம்பல் உபாசகச் சுகவாசிகளுக்கு டி. வி. முன் உட்கார்ந்திருப்பது சுகமான அனுபவம் ஆகிவிட்டது. கலர் டி. வி. என்றாலோ, ஆகா, அதன் சுகம், அதன் இனிமை, அது தருகிற சந்தோஷம் எல்லாமே தனி டி.வி. யின் சர்வ வியாபகம் மக்களின் படிக்கிற இயல்பையும்

சிதைத்து விட்டது. படிப்பவர்கள் எண்ணிக்கை குறைந்து வருவதற்கு டி. வி. யின் வளர்ச்சியும் ஒரு காரணம் தான்.

இன்னொரு நண்பர், வேறொரு சமயம், ஜனங்களின் படிக்கிற ஆர்வம் பற்றி - அல்லது படிக்காமல் இருக்கிற (படிக்க விரும்பாத) இயல்பு குறித்து - தனது அபிப்பிராயத்தைச் சொன்னார்:

— ரொம்பப் பேர் இலக்கியப் புத்தகங்களை, இலக்கியப் பத்திரிகைகளை, விரும்பிப் படிக்கவில்லை என்பது உண்மை ஆனால் அதற்காக அவர்களைக் குறை கூறுவதில் அர்த்தம் இல்லை. மக்களின் வாழ்க்கை நிலை, இன்றைய சமூக நிலைமை, அப்படி இருக்கிறது. அவர்கள் வயிற்றுப்பாட்டுக்காக, வாழ்க்கைச் செலவுகளை ஒட்டுவதற்காக ஏதாவது வேலை பார்த்தாக வேண்டி இருக்கிறது. கிடைக்கிற வருமானம் செலவுகளுக்குப் போதுமானதாக இல்லை. எனவே, அன்றாடம் வீட்டில் பல சிக்கல்கள். வாழ்க்கைப் பிரச்னையே பெரும் பிரச்னையாக இருக்கிற போது, அமைதியாக உட்கார்ந்து, ஆழ்ந்த விஷயங்களைப் படிப்பதில் ஆர்வம் எப்படி உண்டாகும்?

— ஆபீஸ்களில், தனியார் நிறுவனங்களில், பாங்குகளில், இப்படி எங்கெங்கோ வேலை பார்க்கிறவர்களுக்கு நேரம் நிறையவே இருக்கும் எனத் தோன்றலாம். ஆனால் அவர்களுக்கும் எவ்வளவோ சிக்கல்கள். காலையில் எழுந்து, தினசரி அலுவல்களைக் கவனித்து, ஆபீசுக்குப் புறப்படுவது வரை ஏகப்பட்ட டென்ஷன். ஆபீசுக்கு

வந்தால், அங்குள்ள வேலைகள், பிரச்னைகள், கவலைகள். எட்டு மணி நேரம் உழைத்து விட்டு வீட்டுக்கு வருவது எளிய காரியமாக இல்லை. பஸ்சுக்காகக் காத்திருப்பது, பஸ்சில் நெருக்கடி அனுபவிப்பது. எலெக்ட்ரிக் ரயிலில் திணறுவது, என்றும் எங்கும் எப்போதும் கும்பல் — நெருக்கடி — வசதிக் குறைச்சல்கள். எல்லாம் எரிச்சல் தருவதாகத் தான் இருக்கிறது. வீட்டுக்கு வந்து ஓய்வாக இருக்கலாம் என்று எண்ணி வருகிறவர்களுக்கு அங்கே வேறு ரகமான சிக்கல்கள், குழப்பங்கள், டென்ஷன்... அமைதி கிடைக்க வழி இல்லை.

— இந்த நிலையில் புத்தகம் படிக்கவா மனம் இருக்கும்? இருப்பதைச் சாப்பிட்டு விட்டு, ஹாயாகச் சாய்ந்து கிடக்கலாம் என்று தான் தோன்றும். படிக்கவில்லையே, ஏதாவது படிக்கலாமே என்ற மன அரிப்பைத் திருப்திப்படுத்துவதற்காக எதையாவது எடுத்துப் புரட்டுகிறார்கள். ஜனரஞ்சகப் பத்திரிகைகள் தான் அவர்களுக்குக் கைகொடுக்கின்றன. உழைத்து அலுத்து ஓய்வு நாடிச் சாய்ந்திருப்பவர்களுக்கு லைட் ரீடிங் தான் பிடிக்கும். ஸீரியஸ் லிட்டரேச்சர் பக்கம் அவர்கள் மனம் திரும்ப முடியாது.

வேறொரு நண்பர் பேச்சோடு பேச்சாகக் குறிப்பிட்டது இது:

— படிப்பது என்பது ரொம்பப் பேருக்கு சிரமமான விஷயம் தான். சிரமப்படுத்துகிற காரியம் கூட. தனிமையில் இருந்து, புத்தகத்தை எடுத்து, கவனம்

செலுத்தி ... இதெல்லாம் பலருக்கு ஒத்து வருவதில்லை. படிப்பதை விட சினிமா பார்ப்பது சுகமான விஷயம் அவர்களுக்கு. அதனால் தான் மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்த பெரும்பலருக்கு டெலிவிஷன் மீது அதிக மோகம் இயல்பாக ஏற்பட்டுள்ளது. வீட்டில் இருந்தபடியே படம் பார்க்கிற சுகத்தை அனுபவிப்பதற்கு வசதியாக இப்போது வீடியோ வேறு இருக்கிறது. பல வீடுகளில் வீடியோ கேசட்டுகளை வாடகைக்கு வாங்கிப் படம் போட்டுக் கண்டு களிக்கிறார்கள். ஒரு படத்தின் பின் மற்றொரு படமாக, ஒரே நாளில் மூன்று நான்கு சினிமாப் படங்களைப் பார்ப்பதில் ரொம்பப் பேர் உற்சாகம் காட்டுகிறார்கள். மாணவ மாணவிகளும் இதில் அதிகமான ஆர்வம் கொள்கிறார்கள். இதனால் எல்லாம் படிக்க வேண்டும் என்கிற ஆசையும், புத்தகங்கள் படிக்கிற செயலும் வரவரக் குறைந்து வருவதை உணர முடிகிறது.

மற்றொரு நண்பர் உரையாடலில் இவ்விதம் கூறினார்:

— படிக்கிறவர்கள், நல்ல புத்தகங்களைப் படிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறவர்கள், இப்பவும் இருக்கத் தான் செய்கிறார்கள், நல்ல புத்தகங்களும் வந்து கொண்டு தான் இருக்கின்றன. ஆனால், படிக்க ஆசைப்படுகிறவர்கள் அங்கும் இங்குமாக எங்கெங்கோ சிதறிக் காணப்படுகிறார்கள். ஊருக்கு ஒருவர் இரண்டு பேர் என்று இருக்கிறார்கள். வெளிவருகிற நல்ல

புத்தகங்கள் அவர்களைப் போய்ச் சேர வழி இல்லை என்ன புத்தகம் வந்திருக்கிறது, எது நல்ல புத்தகம் என்று தெரிந்து கொள்வதற்கான வாய்ப்பும் வசதியும் அவர்களுக்கு இல்லை. இது ரொம்பச் சிக்கலான விஷயம் தான்.

நண்பர்களின் பேச்சுக்கள் தற்கால நிலைமைகளை — வாழ்க்கை உண்மைகளைப் புலப்படுத்துகின்றன.

வறுமையிலும் விரக்தியிலும், வாழ்க்கைப் பிரச்னைகளிலும் சிக்கித் திணறுகிற மக்களுக்கு, மசாலாத்தனப் பத்திரிகைகளும் சினிமாக்களும் (இப்போது அதே தரத்தில் இயங்குகிற டி. வி. யும், பிரச்னைகளிலிருந்து நழுவுவதற்கு — அவற்றை சிறிது நேரத்துக்காவது மறப்பதற்கு - துணை புரிகிற சாதனங்களாக விளங்குகின்றன.

படிப்பவர்களில் பெரும்பாலோரும், படம் பார்க்கிறவர்களில் மிக அதிகமான பேர்களும், பத்திரிகைகளையும் படங்களையும், அன்றாடச் சிக்கல்கள் - தொல்லைகள் - கவலைகளை மறப்பதற்கும் அவற்றிலிருந்து நழுவுவதற்கும் உதவுகிற (எஸ்கேப்பிச) சாதனங்களாகத் தான் மதிக்கிறார்கள்.

ஆகவே அவர்களுக்கு கிளுகிளுப்பூட்டும், கிச்சுகிச்சு மூட்டும் விஷயங்களே போதுமானவையாக இருக்கின்றன.

பொதுவாக, எங்குமே — எல்லா நாடுகளிலும், அனைத்து மொழிகளிலும் — கனமான, ஆழ்ந்த,

சிந்தனைக்கு வேலை கொடுக்கிற. ஆய்வு ரீதியான, சோதனை அடிப்படையில் அமைகிற, தரத்தில் வெகுவாக உயர்ந்த படைப்புகள் அதிகமான வரவேற்பு பெறுவது இல்லை. இத்தன்மையான ஆக்கங்களை வரவேற்று, ஆதரித்து, ரசித்துப் பாராட்டி மகிழ்கிறவர்களின் எண்ணிக்கை மசாலாத்தனப் படைப்புப் பிரியர்களின் தொகையை விடக் குறைவாகத் தான் இருக்கும் - இருக்கிறது.

ஆனால், தமிழ் நாட்டில் இந்த வித்தியாசம் பயங்கரமான அளவில் - வேதனையும் வருத்தமும் தரக்கூடிய அளவில் - இருக்கிறது. இது பெரிய குறை.

மசாலாத்தனப் பத்திரிகைகள் வாரம் தோறும் பல லட்சம் பிரதிகள் விலை போகின்றன. மாத நாவல்கள், க்ரைம் ஸ்டோரீஸ் - பாக்கெட் புக்ஸ் என்று சொல்லப்படுகிற கிளுகிளுப்பு, செக்ஸ், வன்முறை. மர்ம சமாச்சாரங்களை விறுவிறுப்பான விதத்தில் கூறுகிற - வெளியீடுகளும், லட்சக்கணக்கில் இல்லா விட்டாலும், பல்லாயிரக்கணக்கில் விற்பனையாகிக் கொண்டு தான் இருக்கின்றன.

நாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள் வேகமாக விற்பனையாவதில்லை என்று புத்தக வெளியீட்டாளர்கள் சொல்கிறார்கள். ஆனாலும், மசாலாப் பத்திரிகைகளில் தொடர்கதைகளாக வந்த மசாலாத்தன எழுத்துக்கள் உடனடியாகப் புத்தகங்களாக உருவாக்கப்பட்டதும், அதிக விலை நிர்ணயிக்கப்பட்டிருப்பினும், நல்ல விற்பனையைப் பெறத்தான் செய்கின்றன.

அக்கறை செலுத்தி (சிரத்தையும் சிரமமும் ஈடுபடுத்தி) படிக்க வேண்டிய கனமான, ஆழ்ந்த, சிந்தனைக்கு வேலை வைக்கக் கூடிய புத்தகங்கள் விலை போவதில்லை. அப்படி எழுதப்படுகிற படைப்புகள் (கதைகள், நாவல்கள், கவிதைகள்) புரியவில்லை என்று சுலபத்தில் ஒதுக்கப்பட்டு விடுகின்றன.

இங்கே பணம் கொடுத்து புத்தகங்கள் வாங்கக் கூடியவர்கள் மிகவும் குறைவு. சினிமாவுக்கு அஞ்சும் பத்தும் (ரூபாய் தான்) அலட்சியமாகக் கொடுக்கிறவர்கள், ஓட்டல்களில் தங்களுக்காகவும் நண்பர்களுக்கென்றும் பணத்தை தாராளமாய் செலவு பண்ணுகிறவர்கள். குளிர் பானங்களுக்காக ('பாட்டில்ட் ட்ரிங்க்ஸ்') நோட்டு நோட்டாக எடுத்து நீட்டுகிறவர்கள் கூட, புத்தகங்கள் வாங்க வேண்டும் என்றால் தயங்குகிறார்கள்; கூசுகிறார்கள். பணம் இல்லையே என்று பின்வாங்கு கிறார்கள். இது பரிதாபத்துக்கு உரியதே.

இன்னொரு உண்மை. கல்லூரிகளில் பணி புரிகிற பேராசிரியர்கள், மேல் நிலைப் பள்ளிகளின் ஆசிரியர் களில் அதிகம் பேர் - புத்தகங்களுக்காகப் பணம் செலவு பண்ணக் கூடிய நிலையில் இருப்பவர்கள் - பாட நூல்கள் தவிர்ந்த பொதுவான புத்தகங்களை வாங்குவதேயில்லை. படிப்பதில் ஆர்வம் கொள்ளுவதுமில்லை.

நல்ல, தரமான, புத்தகங்கள் பற்றிப் பேராசிரியர் களும் மற்றவர்களும் மாணவர்களுக்கு எடுத்துக் கூற

முடியும். அவற்றின் நயங்களை சொல்வதன் மூலம் மாணவர்களுக்கு புத்தகங்கள் மீது விருப்பம் ஏற்படுத்தி விட முடியும்.

ஆசிரியர்களே படிப்பதிலும், புத்தகங்கள் வாங்குவதிலும் ஆர்வம் கொண்டிராத நிலையில், மாணவர்களுக்கு எப்படி நல்ல, தரமான, புதுமையான புத்தகங்கள் பற்றிக் கூற இயலும்?



# 10

தரமான வாசகர்கள் யார்? அவர்கள் எப்படி உருவாகிறார்கள்?

படிப்பு அனுபவம் பெற்றவர்கள், ரசனைத் தேர்ச்சி உடையவர்கள், மன முதிர்ச்சி கொண்டவர்கள், ஆழ்ந்த படைப்புகளையும் மேலோட்டமான எழுத்துக் களையும் இனம் கண்டு கொள்ளக் கூடியவர்கள், இன்னபிற இயல்புகள் பெற்றிருப்பவர்கள் தரமான வாசகர்கள் ஆவர்.

இவர்களும் சாதாரண வாசகர்களாக இருந்து வளர்ச்சி பெறுகிறவர்கள் தான்.

ஆரம்ப நாட்களில் அனைத்து வாசகர்களும் எல்லா விதமான எழுத்துக்களையும் படிப்பதில் விருப்பம் கொண்டவர்களாகத் தான் இருப்பர். பார்வையில் படுகிற பத்திரிகைகளை எல்லாம், கிடைக்கிற புத்தகங்கள் பலவற்றையும் படிப்பதில் ஆர்வம் உடையவர்களாகத் தான் இருப்பார்கள்.

இப்படி படிக்கப் படிக்க வாசகர்களுக்கு, கால ஓட்டத்தில், ஒரு முதிர்ச்சி ஏற்படுகிறது. எழுத்துக்களின் தன்மைகளையும் தராதரங்களையும் கண்டு உணரக் கூடிய ரசனைத் திறம் உண்டாகிறது. இவை படிக்கக் கூடியவை, இவற்றைப் படிப்பது வீண் வேலை - கால நஷ்டம் எனப் புரிந்து கொள்ளும் தேர்ச்சி பிறந்து விடுகிறது.

இந்த முதிர்ச்சியும் ரசனை வளர்ச்சியும், தரம் உணரும் தேர்ச்சியும் சில பேருக்கு சீக்கிரம் கிட்டி விடுகின்றன. அநேகருக்கு நாளாவட்டத்தில் - நீண்ட காலத்தில் - கிடைக்கின்றன. பலருக்கு என்றுமே ஏற்படாமலும் போகிறது. இது அவரவர் மனப்பக்குவம், அறிவு நிலை, ருசி பேதம் முதலியவற்றைப் பொறுத்து அமையும்.

ரசனை வளர்ச்சிக்கும் தேர்ச்சிக்கும் இதர வாசக ரசிகர்களது அபிப்பிராயங்கள் துணை புரியக் கூடும். ரசிக நண்பர்களது உரையாடல்களும் யோசனைகளும் உதவக் கூடும். படித்தவர்களின் சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், புத்தகங்களை மதிப்பிட்டுரைக்கும் கட்டுரைகள், நல்ல விமர்சகர்களின் நேர்மையான அபிப்பிராயங்கள் எல்லாம் வாசகர்களின் தரம் உயர்வதற்கு வகை செய்யக் கூடும்.

படிக்கிற எல்லோருமே தமக்கெனத் தனி அபிப்பிராயம் வளர்த்துக் கொள்ளும் ஆற்றல் பெற்று இருப்பதில்லை.

தமக்கெனத் தனி அபிப்பிராயம் கொள்ளக் கூடிய-கொள்கிற - எல்லோருமே தங்கள் கருத்துக்களை வெளிப் படுத்தும் திறமை பெற்றிருப்பதில்லை. தங்கள் கருத்துக் களை வெளிப்படையாகக் கூறத் துணிவதுமில்லை.

தங்களது அபிப்பிராயங்களை – சிந்தனைகளை, எண்ணங்களை, விருப்பு வெறுப்புகளை – தயக்கம் இல்லாமல் பேச்சில் வெளிப்படுத்துகிறவர்கள் பலர் இருக்கலாம். இத்தகைய அபிப்பிராயக்காரர்களில் ஒரு சிலர் தான் தங்கள் கருத்துக்களை எழுத்தில் வெளியிட முன் வருகிறார்கள்.

இவர்களில் அநேகர் 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' எழுதுவதோடு நின்று விடுகிறார்கள். சிலர் தான் தங்கள் எண்ணங்களை முறைப்படுத்தி, காரண காரியங்-களோடு விளக்கிக் கட்டுரையாக எழுத முற்படுகிறார்கள்.

இவர்கள் மத்தியில் தான் விமர்சகர்கள் தலையெடுக்கிறார்கள்.

வாசகர்களில் பலப்பலருக்கு எழுத்தாளராக விளங்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. ஆயினும் எல்லோரும் எழுத்தாளர்கள் ஆக வளர்ச்சி பெற்றுவிட இயல்வதில்லை.

அதே போல, படிக்கிறவர்களும் எழுதுகிறவர்களும் தாங்கள் படித்தவற்றைப் பற்றி தங்களுக்குத் தோன்றிய எண்ணங்களைச் சொல்ல ஆசைப்படுகிறார்கள். ஆயினும், அவர்கள் அனைவரும் விமர்சகர்கள் ஆகிவிடுவதில்லை.

பத்திரிகைகள் புத்தகங்களைப் படிக்கிறவர்களில் பலர் பொதுவாக 'இது நல்லாயிருக்கு' 'இது நன்றாக இல்லை' 'பரவால்லே' என்று சொல்வதோடு நின்று விடுகிறார்கள்.

தாங்கள் படித்தவற்றில் நல்லன குறித்து - பொதுவாக, தாங்கள் படித்த புத்தகங்கள் பற்றி - ரசிகர்கள் தங்கள் நண்பர்களுக்கு எடுத்துக்கூற ஆசைப்படுகிறார்கள். அநேகர் பேச்சோடு பேச்சாக அவை பற்றியும் குறிப்பிடுகிறார்கள். சிலர் கடிதங்களில் எழுதுகிறார்கள். படித்த புத்தகங்கள், அவற்றின் நயங்கள், சிறப்புகள் பற்றி சில வரிகள் எழுதி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

இவர்களில் அநேகர், தங்களை தகுதிப்படுத்திக் கொண்டால், விமர்சகர்கள் ஆக வளர்ச்சி பெற முடியும். ஆனால், அப்படி எவரும் வளர்வதில்லை.

பத்திரிகைகள் பல - தினத்தாள்களும், வார ஏடுகளும், மாத சஞ்சிகைகளும் - புத்தக மதிப்புரைப் பகுதி வெளியிடுகின்றன. நீண்ட காலமாகவே வெளியிட்டு வருகின்றன. இவற்றுக்காக மதிப்புரை எழுதித் தரக்கூடியவர்கள் பலர் இருக்கின்றனர். இவர்களில் அநேகர் வாசகர்களாகவும், எழுத்தாளர்களாகவும் இருப்பவர்கள் தான்.

மதிப்புரை என்பது, பொதுவாக, ஒரு புத்தகத்தைப் பற்றிய அறிமுகம் தான். புதிதாக வந்திருக்கிற புத்தகம் இப்படி இருக்கிறது; அது எதைப் பற்றி

எழுதப்பட்டிருக்கிறது; நாவல் என்றால் அதன் கதை இப்படி இப்படி அமைந்துள்ளது என்ற தன்மையில் சில வரிகள் எழுதப்படுவது தான்.

பார்க்கப் போனால், மதிப்புரைகள் எல்லாம் நயம் கூறும் பாராட்டுரைகளாகத் தான் காணப்படுகின்றன. மதிப்புரைகள் விமர்சனங்கள் ஆகமாட்டா.

மதிப்புரை எழுதுகிறவர்கள் விமர்சகர்களாக அங்கீகரிக்கப்படுவதும் இல்லை.

சில சமயம் மதிப்புரை என்பதே காரமாகவும், தாக்குதலாகவும் இருந்து விடவும் கூடும். மதிப்புரை எழுதுகிறவரின் மனோபாவம் இதற்குக் காரணமாகலாம்.

புதுமைப்பித்தன் சொல்வது இது: 'மதிப்புரை பொதுவாக இலக்கிய விசாரமான ஆராய்ச்சி அல்ல. ஒரு புதுப் புத்தகம் வந்திருக்கிறது, இது இன்னமாதிரி எழுதப்பட்டிருக்கிறது என்பது கண்டிருந்தால் போதும். ஆனால் இன்று வெளிவரும் புத்தகங்கள் எல்லாம், தம்மை ஒரு இலக்கிய மைல்கல் என மார்தட்டிக் கொண்டு வருகின்றன. இப்படிப்பட்டதொரு மயக்க நிலையைப் போக்கச் சற்றுக் காரமான கருத்துக்கள் வெளியிடப்படுவது குற்றமல்ல.'

'மதிப்புரை எழுதுகிறவனிடம் எதிர்பார்க்க வேண்டிய ஒன்று' என்று புதுமைப் பித்தன் ஒரு தன்மையைக் குறிப்பிட்டிருக்கிறார். அதாவது—

'நல்ல இலக்கியத்தைக் காணும் பொழுது அதைத் தெரிந்து கொள்ளவும் பரிச்சியம் செய்து வைக்கவும் அவனிடம் திராணி வேண்டும். அப்படியே போலியைக் காணும் போது, யார் வந்து நெற்றிக்கண்ணைத் திறந்தாலும் அது போலி என்று சொல்லுவதற்கு நெஞ்சு அழுத்தம் கொண்டிருக்க வேண்டும்.'

விமர்சகனிடம் காணப்பட வேண்டிய குணமும் இது தான்.

மதிப்புரை என்பது மேம்போக்காகச் சொல்லப் படுகிற அபிப்பிராயமேயாகும். விமர்சனம் ஆழ்ந்து கவனித்து, ஒரு படைப்பின் அல்லது புத்தகத்தின் தன்மைகளையும் தவறுகளையும் - குணங்களையும் - குறைகளையும் நயங்களையும் சத்தற்ற தன்மைகளையும்- சுட்டிக்காட்டுவது. இது இப்போது 'திறனாய்வு' என்றுகூறப்படுகிறது.

குறைகளை மட்டுமே கூறுவதும், கடுமையாகத் தாக்குவதும் தான் விமர்சனம் என்று பலர் கருதுகிறார்கள். அது சரியல்ல.

'நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' என்று சிவனாரிடமே எதிர்த்து வாதாடிய நக்கீரன் தான் சரியான விமர்சகன் என்று போற்றி, அவ் வழியைப் பின்பற்ற வேண்டும் எனக் கூறுவோரும் உளர்.

ஆனாலும், தமிழில் விமர்சனக்கலை போதிய வளர்ச்சி பெற்றதில்லை. ஆரோக்கியமான முறையில் விமர்சனம் வளர்க்கப்படவுமில்லை.

இரண்டாயிரம் வருடச் சிறப்பு உடையது தமிழ் இலக்கியம் என்று பண்டிதர்களும் தமிழாசிரியர்களும் அறிஞர்களும் காலம் காலமாகப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவ்வப்போது நேரிய முறையில், குறைகளையும் நலன்களையும் அளவிட்டுச் சொல்லும் விமர்சனம் தமிழில் இல்லை. அதனாலேயே காலத்துக்கு ஏற்ற வளர்ச்சியைத் தமிழ் மொழி பெற்று வளம் அடையாது இருந்து வருகிறது.

பழம் தமிழ் இலக்கியங்களுக்கு விரிவுரையும் பொருளும் எழுதி வைத்த உரையாசிரியர்கள் இடை இடையே சிற்சில நயங்களைச் சுட்டியிருக்கிறார்கள். அவை விமர்சனங்கள் தான்; தமிழில் விமர்சனமே இல்லை என்று சொல்வது தவறு என்று கூறுகிறவர்களும் உண்டு.

உரையாசிரியர்கள் எழுதி வைத்திருப்பதை விமர்சனம் என்று கொள்வது சரியாகாது, அவை எல்லாம் பொருள் கூறி நயம் எடுத்துரைத்த செயலே தவிர, ஆய்ந்து குறைகளையும் சிறப்புகளையும் சுட்டிக் காட்டும் விமர்சனம் ஆகா.

கால ஓட்டத்தில், திருக்குறள் பற்றியும், கம்ப ராமாயணம் பற்றியும், மற்றும் சங்க கால இலக்கியங்கள் பழம் பாடல்கள் பற்றியும் அதிகம் அதிகமாகவே விரிவுரைகள், விளக்க உரைகள், கட்டுரைகள் எழுதப் பட்டிருக்கின்றன. இப்பவும் எழுதப்படுகின்றன. இவை எல்லாம் வியந்து போற்றும் பாராட்டுரைகள் தானே தவிர நேரிய விமர்சனங்கள் இல்லை.

இடைக்காலத்தில், ஆங்கிலக் கல்வி முறையும் உலக இலக்கியப் பயிற்சியும் ஏற்பட்ட பிறகு, அபூர்வமாக ஒரு சில இலக்கிய விமர்சன முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டது உண்டு. ஆனால், அவை போதிய கவனிப்பைப் பெறவில்லை.

தமிழ் இலக்கிய ஈடுபாடும், உலக இலக்கியங்களின் பரிச்சயமும் கொண்ட ஒரு சிலர், தமிழ் காவியங்களை உலகப் பெரும் காவியங்களுடன் ஒப்பிட்டு, தமிழ் காவியங்களின் சிறப்பையும் பெருமையையும் உணர்ந்து ரசிக்க முடிந்தது. அவர்களில் ஒன்றிருவர் தாங்கள் ரசித்து வியந்தவற்றைக் கட்டுரைகளாக எழுதவும் துணிந்தார்கள்.

கம்பனின் ராமகாவியம் உலகப் பேரிலக்கியங்கள் பலவற்றினும் மிகச் சிறந்தது ஆகும் என உணர்ந்தார் வ. வே. சுப்பிரமணிய அய்யர். அந்த உண்மையை உலகுக்கு உணர்த்துவதற்காக விமர்சன ரீதியில் விரிவாக ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதினார் அவர். இது நிகழ்ந்தது 1920 களில்.

வ. வே, சு. அய்யர் வேறு சில விமர்சனக் கட்டுரைகளும் எழுதினார். அவை அனைத்தும் ரசனை அடிப்படையில் எழுதப்பட்டவை. எனவே, அவருடைய விமர்சன முறை ரசனா பூர்வ இலக்கிய விமர்சனம் என அறியப்படலாயிற்று.

தற்கால இலக்கியத்தில், தமிழ் சிறுகதைக்கு இலக்கிய வடிவம் தந்து, சோதனை ரீதியில் நவீனமான

சிறுகதைகளை எழுதித் தனிச் சிறப்பு பெற்றுள்ள வ. வே. சு. அய்யரே, தமிழ் இலக்கிய விமர்சனத்தின் முன்னோடியாகவும் மதிக்கப்படுகிறார்.

அவருக்குப் பிறகு, அவர் காட்டிய வழியில், இலக்கிய விமர்சனம் வேகமாகவோ வளமாகவோ வளர்ந்து விடவில்லை.

1930 களிலும் 1940 களிலும் மறுமலர்ச்சி இலக்கியம் உரம் பெற்றுச் செழுமை அடைந்தது. சிறுகதை புதுமையாகவும், சோதனை ரீதியிலும், ஆழமாகவும அகண்டதாகவும் வளர்ச்சி பெற்றது. ஆர்வமும் ஆற்றலும் உடைய எழுத்தாளர்கள் அத்துறையில் சீரிய சாதனைகள் புரிந்தனர்.

அவர்கள் உலக இலக்கியங்களில் பயிற்சியும் தேர்ச்சியும் உடையவர்களும் கூட. ஆயினும் அவர்கள் விமர்சனத்தில் அக்கறை காட்டவில்லை.

விமர்சனம் எழுதுவதற்குப் போதுமான அளவு படைப்பு இலக்கியம் தமிழில் தோன்றவில்லை என்று அவர்கள் கருதினார்கள். அவர்களில் பலரும் எழுதி வந்த இலக்கியப் பத்திரிகைகளும் விமர்சனத்தில் நாட்டம் கொண்டதில்லை.

மறுமலர்ச்சி இலக்கியப் பத்திரிகையான 'மணிக்கொடி' யில் அக்காலத்திய எழுத்தாளர்கள் தீவிர சர்ச்சையில் ஈடுபட்டது உண்டு. புத்தக மதிப்புரைப் பகுதியில் ஒன்றிருவர் காரமான அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

எனினும், 'மணிக்கொடி' யும் 'மணிக்கொடி' எழுத்தாளர்களும் விமர்சனத்தை வளர்த்ததில்லை.

பாரதி சாதாரணக் கவியா அல்லது மகாகவியா என்றொரு விவாதம் அந்நாட்களில் கடுமையாக நடந்தது. வ. ரா. என்று குறிப்பிடப்படும் வ. ராமஸ்வாமி, பாரதி மகாகவி என வாதிட்டார். பாரதி சாதாரணக் கவிஞர் தான் என்று கட்சி கட்டினார் 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி.

வ. ரா. வுக்கு ஆதரவாக, கு. ப. ராஜகோபாலனும், 'சிட்டி' பெ. கோ. சுந்தரராஜனும் பாரதியார் கவிதைகள் பற்றிக் கட்டுரைகள் எழுதினார்கள். இவை பின்னர் 'கண்ணன் என் கவி' என்ற புத்தகமாகப் பிரசுரம் பெற்றன. இக் கட்டுரைகள், பெரும்பாலும், பாரதியாரை வியந்து அவரது கவிதைகளை ரசித்துப் பாராட்டும் உரைகளாகவே அமைந்திருந்தன.

ஆயினும், அவற்றை குறிப்பிடத்தகுந்த விமர்சன முயற்சிகள் என்று கருதலாம்.

கு. ப. ராஜகோபாலனும், பெ. கோ. சுந்தரராஜனும் விமர்சனத் திறன் பெற்றவர்கள் என்பதை அக்கட்டுரைகள் எடுத்துக் காட்டின. அவர்கள் முயன்று ஈடுபட்டிருந்தால், நல்ல விமர்சகர்களாகவும் விளங்கியிருக்கக் கூடும்.

ஆனால், ஏனோ அவர்கள் அத்திசையில் கருத்து செலுத்தவில்லை. விமர்சனம் எழுதிக் கொண்டிருப்பது வீண் வேலை என்றும், விமர்சனம் எழுதுவதன் மூலம் நண்பர்களையும் பகைவர்களாக்கிக் கொள்ளவே நேரிடும்

என்றும் கு. ப. ரா. கருதினார். இதை 'என்ன எழுதுவது? என்ற கட்டுரையில் அவர் குறித்திருக்கிறார்.

பிற மொழிகளிலிருந்து கதைகளைத் தமிழில் தருகிற பொழுது, நேரடி மொழி பெயர்ப்பு நல்லதா; மூலக் கதையைத் தழுவித் தமிழில் சொந்தக் கதை போல் எழுதுவது உகந்ததா என்றொரு சர்ச்சையும் 1930 களில் படைப்பாளிகள் மத்தியில் நடைபெற்றது.

,மணிக்கொடி' பத்திரிகையில் வெளிவந்த இந்த விவாதத்தில் முக்கிய எழுத்தாளர்கள் பலரும் கலந்து கொண்டார்கள். இவ் இலக்கிய விவாதம் படிப்பதற்கு ரசமாக அமைந்திருந்தது. சூடாகவும் சுவையாகவும் வளர்ந்த அது விமர்சன ரீதியில் வளர்க்கப்படவில்லை.

மேலே குறிப்பிட்ட விவாதங்களில் புதுமைப் பித்தனும் உற்சாகத்துடன் கலந்து கொண்டார். 'மணிக்கொடி' யில் அவர் புத்தக மதிப்புரைகளும் எழுதினார். அவற்றில் எல்லாம் நேரிய விமர்சகராக அவர் தன்னைக் காட்டிக் கொள்வதை விட, பல சமயங்களில் கிண்டலாகவும் முரட்டடியாகவும் கருத்துக் களை உதிர்ப்பதில் தான் ஆர்வம் கொண்டிருந்தார் என்றே சொல்ல வேண்டும்.

விமர்சனம் என்று பின்னர் அவர் எழுதிய-வற்றிலும் தாக்குதலும் தடலடித்தனமுமே தூக்கலாகத் தெரிந்தன. 'கல்கி' யின் கதைகளை விமர்சிக்க முனைந்த அவர், கல்கியின் கதைகளில் எதுவும் உருப்படியானது அல்ல. சொந்தமாக எழுதப்பட்டவையும் இல்லை;

எல்லாமே பிற மொழிக் கதைகளின் தழுவல்கள் என்று கூறிவிட்டு முடிவுரையாக இந்த ரீதியில் எழுதி வைத்தார்:

கல்கியின் கதைகள் எல்லாம் வெந்நீர் அடுப்பில் போட்டு எரிக்கத் தான் லாயக்கு. அப்படி எரித்து வெந்நீர் போட்டு அவர் குளித்தால், மனசாறச் செய்த பாபங்கள் போகாவிட்டாலும், அவர் உடம்பில் உள்ள அழுக்காவது போகும்.

பிறகு, ஏ. எஸ். ஏ. சாமி எழுதிய 'பில்கணன்' நாடக நூலுக்கு விமர்சனம் எழுதிய புதுமைப் பித்தன் அதை 'இரவல் விசிறி மடிப்பு' என உருவகப்படுத்தினார். சொந்தச் சரக்கு இல்லாது, பெருமைக்காக 'விசிறி மடிப்பு' அங்கவஸ்திரத்தை இரவலாகப் பெற்றுப் பகட்டுகிறவர்களைப் போலவே தான், அந்த நாடக ஆசிரியரும் இரவல் விஷயங்களை வைத்து சொந்தச் சரக்கென்று பெயர் பண்ணுகிறார் என்று விரிவாக எழுதினார்.

இதெல்லாம் படைப்பை ஒதுக்கி விட்டு படைப்பாளியைத் தாக்குகிற தடலடித்தனமே தவிர, ஆரோக்கியமான விமர்சனம் ஆகாது. இப்படி எழுதுகிறவரின் துணிச்சலை வாசகர்கள் வியந்து ரசிக்கக் கூடும்.

இந்தப் போக்கு தமிழில் அவ்வப்போது தலை காட்டி வருகிறது.

1960 - 70 களில் விமர்சனத்தில் ஈடுபட்டிருந்த

வெங்கட்சாமிநாதனிடமும் இந்தத் தன்மை காணப்பட்டது. ஆராய்ச்சி அறிஞர் நா. வானமாமலை பற்றி, 'இவர் பாளையங்கோட்டை சிறை அருகில் உள்ள பனை மரத்திலேறி நுங்கு பறிக்கத் தான் லாயக்கு. இவருக்கும் ஆராய்ச்சிக்கும் வெகு தூரம்' என்றும், 'இந்தக் கவிதைப் புத்தகம் கையால் தொடக்கூட அருகதையற்றது இரண்டு விரல்களால் தூக்கி எடுத்து அப்படியே ஜன்னலுக்கு வெளியே வீசி எறியப்பட வேண்டும்' என்ற ரீதியிலும் அவர் விமர்சித்த போக்கை நினைவு கூரலாம்.

1944 - வாக்கில் மு. அருணாசலம் எம். ஏ. ஒரு விமர்சன நூல் எழுதினார். 'இன்றைய தமிழ் வசன நடை' என்பது அதன் பெயர். இலக்கிய மறுமலர்ச்சியையும், மறுமலர்ச்சி எழுத்தாளர்களையும் அவருக்குப் பிடிக்கவில்லை. அவர் மறுமலர்ச்சிச் சிறுகதைகளையும், மறுமலர்ச்சி எழுத்தாளர்களின் தமிழ் நடையையும் விமர்சனம் என்ற பெயரில் ஏகமாகப் பரிகசித்தும் குறை கூறியும் எழுதியிருந்தார் அந்தப் புத்தகத்தில். அவருடைய அபிப்பிராயத்தின்படி, ஐந்தே ஐந்து பேர்கள் தான் தமிழ் நாட்டில் அழகான வசன நடை எழுதியவர்கள். திரு. வி. கலியாண சுந்தர முதலியார், டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், டி. கே. சிதம்பரநாத முதலியார், சக்கிரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரே அவர்கள்.

இந்தப் புத்தகத்துக்கு பலத்த எதிர்ப்பு உண்டாயிற்று தமிழ் நாட்டில். விரிவான கட்டுரைகளும், தாக்குதல்களும், வசைக் கவிதைகளும் எழுதப்பட்டன.

அப்படி ஒரு பரபரப்பை ஏற்படுத்துவதற்காகவே மு. அருணாசலம் அது மாதிரி ஒரு புத்தகத்தை எழுதியிருந்திருக்கலாம். அது நேர்மையான ஆய்வோ, நடுநிலை விமர்சனமோ இல்லை.

அதே போல, அந்தப் புத்தகத்தை விமர்சித்தவர்களும் உணர்ச்சி வசப்பட்டும் ஆத்திரத்தோடும் கண்டனங்கள், தாக்குதல்கள், வசைபுராணங்களில் ஈடுபட்டார்களே தவிர, மு. அருணாசலத்தின் ஆராய்ச்சியின் குணங்களையும் குறைகளையும் நிதானமாக எடுத்துக் காட்டி, நேர்மையான முறையில் விமர்சிக்கவுமில்லை.

பண்டிதர்களும் பண்டித மனோபாவம் பெற்றவர்களும் மறுமலர்ச்சி எழுத்தாளர்களைக் குறை கூறுவதும், தாக்குவதும், மறுமலர்ச்சி எழுத்தாளர்கள், தமிழ் வளர்ச்சி குன்றி வளம் குறைந்து போனதற்குப் பண்டிதர்களும் அவர்களுடைய போக்குமே காரணம் என்று குற்றஞ்சாட்டித் தாக்குவதும் நெடுங்காலமாக வளர்ந்து வரும் ஒரு நடைமுறை ஆகிவிட்டது.

தமிழ் மொழிக்குப் பெருமை சேர்ப்பவை, தமிழை வாழ வைப்பவை கம்பராமாயணமும் திருக்குறளும் தான்; அவையே தமிழின் கதி என்று பண்டிதர்கள் திரும்பத் திரும்பச் சொல்வதும், பழம் பெருமை பேசிக் காலம் கழிப்பதுமே தமிழ்ப் பணியாகக் கருதப்பட்டு வந்தது. புதுமையைப் பழித்தார்கள் அவர்கள்.

ரா. பி. சேதுப்பிள்ளை போன்ற பண்டிதர் அல்லாத தமிழ் அறிஞர்கள் கூட நவீன எழுத்தையும்

எழுத்தாளர்களையும் கரித்துப் பேசுவதில் இன்பம் கண்டார்கள்.

'மறுமலர்ச்சி என்பதே சரியல்ல. மறுமலர்ச்சியே கிடையாது. ஒரு முறை மலர்ந்தது வாடும், கருகும், மாளும். வாடியது, மாண்டது மீண்டும் மலர்வதில்லை. மறுமலர்ச்சி என்பது இல்லாத ஒன்றைக் கற்பித்துக் கூறுவதேயாகும். ஆகாயத் தாமரை என்பது போல, மறுமலர்ச்சி இல்லை; மாள்ச்சி தான் உண்டு. மறுமலர்ச்சி என்று சொல்லிக் கொண்டு எழுதுகிறவர்கள் மொழிக்கு மாள்ச்சி உண்டு பண்ணுகிறார்கள். மொழியைச் சாகடிக்கிறார்கள்' என்று ரா. பி. சேதுப்பிள்ளை ஆவேசமாகப் பேசுவது வழக்கம்.

வ. ரா. வும் அவர் வழி வந்தவர்களும் பண்டிதர்களையும் பண்டிதப் போக்கையும் குறை கூறிப் பேசுவதும் எழுதுவதும் சகஜமாக இருந்தது. அவர்கள், 'திருக்குறள் இலக்கியம் இல்லை'; தமிழில் புதிதாகப் படைத்து மொழியை வளம் செய்வதற்கு சங்க கால இலக்கியங்களையும் பிறவற்றையும் படிக்க வேண்டும் என்கிற அவசியம் எதுவும் இல்லை என்று சொன்னார்கள்.

இருசாராரும் விமர்சன ரீதியில் ஆய்ந்து கூறுவதில் முனைப்பு கொண்டாரில்லை.

பண்டிதர்களைக் காய்வதிலும் பரிகசிப்பதிலும் முன்னணியில் இருந்தவர்களில் 'ரசிகமணி' டி. கே. சிதம்பரநாத முதலியாரும் ஒருவர்.

பள்ளிக்கூடங்களும், பள்ளிப் படிப்பும், பண்டிதர்களும், தற்காலக் கல்வி முறையும் தமிழர்களின் ரசனை உணர்வை மழுங்கடித்து விட்டதாக - உண்மையான கவிதையை உணர்ந்து ரசிக்கக் கூடிய மக்களின் திறமையை சீர்குலைத்து விட்டதாக - அவர் குறை கூறினார்.

நல்ல கவிதைகளைத் தேடி எடுத்து ரசித்து மகிழ்ந்த டி. கே. சி. அவற்றின் நயங்களை மக்களுக்கு சுவையாக எடுத்துக் கூறுவதில் இன்பம் கண்டு வந்தார். கம்பன் பாடல்களை நன்கு சுவைத்து இன்புற்ற அவர் கம்பராமாயணத்தில், கம்பன் பாடாத பாடல்கள் எண்ணற்றவை இடைச்செருகலாகப் புகுந்து விட்டன என்று கூறிப் பெரும் அளவில் அவற்றைக் கழித்துக் கட்டினார். கம்பன் பாடிய உண்மையான பாடல்கள் என அவர் உணர்ந்த பாட்டுகளில் கூட அநேக இடங்களில் வருகிற சொற்கள் பொருத்தமற்றவை, கம்பன் எழுதிய சொற்கள் அல்ல அவை என்று கூறி, பொருத்தமான சொற்கள் என அவர் கருதிய வார்த்தைகளைச் சேர்த்து கம்பராமாயணத்தை திருத்தி அமைத்தார். டி. கே. சி. யின் திருத்தங்களுடன் புதிய பதிப்பு 'கம்பர் தரும் ராமாயணம்' என்ற பெயருடன் வெளிவந்தது.

டி. கே. சி. யின் இச்செயலுக்கு எதிர்ப்பும் அதிகமாக இருந்தது.

கம்பர் இந்தச் சொல்லைத் தான் இந்த இடத்தில் உபயோகித்திருப்பார் என்று டி. கே. சி. எப்படி கண்டு பிடித்தார்? நாணயங்களைச் சுண்டிப் பார்த்து, இது

நல்ல நாணயம் - இது கள்ள நாணயம் என்று கண்டு உணரும் திறமைசாலிகளைப் போல, தாமும் கவிதைகளைச் சுண்டிப் பார்த்து, தமது ரசனைத் திறத்தால் — நல்ல கவிதையை உணர்ந்து ரசிக்கக் கூடிய தம் உள்ளப் பண்பினால் — உண்மையான கவிதை எது, போலியானது எது என்று கண்டுபிடிப்பதாக அவர் சொன்னார்.

டி. கே. சி. தமது இஷ்டம் போல் ராமாயணப் பாடல்களைத் திருத்தி வேறு சொற்களை இணைத்ததும் ஒரு விதத்தில் 'இடைச்செருகல்' தான். வெவ்வேறு காலங்களில் 'இடைச்செருகலாக' க் கவிதைகளைத் திருத்தியவர்களும், சொந்தப் பாடல்களைச் சேர்த்து எழுதியவர்களும் கூட இப்படி ஏதாவது காரணங்கள் சொல்லித்தான் செயலாற்றியிருந்திருப்பார்கள்.

இருந்தபோதிலும், டி. கே. சி. - கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒரு இலக்கிய விமர்சகராகவும், அவருடைய விமர்சன முறை ரசனை அடிப்படையில் அமைந்தது என்றும் மதிக்கப்படுகிறார். அவர் கவிதையின் ஜீவனைக் கண்டு உணர்ந்தார்; உண்மையான கவிதையை எப்படி ரசிக்க வேண்டும் என்று இலக்கிய நண்பர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்; அவரை அணுகியவர்க்கெல்லாம்- அவர்கள் சாதாரணர்களாயினும் சரி, அதிகம் படித்தவர்களானாலும் சரியே — கவிதை நயங்களை எடுத்துக்கூறி, நயங்களை எளிதில் புரிந்து கொள்ளும்படி விளக்கி, இலக்கிய விருந்து அளித்தார்.

டி. கே. சி. செய்து வந்த இத்தமிழ்ப் பணி - இலக்கியப் பணி - போற்றுதலுக்கு உரியது தான்.

அவரைப் போல் பல ரசிகமணிகள் தேவை, தமிழ மக்களுக்கு உண்மையான படைப்புகளைச் சுட்டிக் காட்டவும், அவற்றின் பெருமைகளை எடுத்துச் சொல்லவும், அதன் மூலம் இலக்கிய உணர்வைப் பரப்பு வதற்கும் தான்.

1940 களில் தொ. மு. சி. ரகுநாதன் 'இலக்கிய விமர்சனம்' என்றொரு புத்தகம் எழுதி, வெளியிட்டார். பொதுவாக விமர்சனம் குறித்த கருத்துக்களும், தமிழில் அப்போது எழுதிக் கொண்டிருந்த எழுத்தாளர்கள் சிலரது கதைகள் பற்றிய அபிப்பிராயங்களும் அந்த விமர்சன நூலில் இடம் பெற்றிருந்தன. ஒரு இளைய எழுத்தாளரின் விமர்சன எண்ணங்களை வெளிப்படையாக கூறும் புத்தகமாக அது அமைந்திருந்தது.

சுப. நாராயணன் என்ற எழுத்தாளர் (இவர் சிறிது காலம் 'சக்தி' பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றினார்) 'கலை, கவிதை, விமர்சனம்' என்ற புத்தகத்தை வெளியிட்டார். கலை, கவிதை, விமர்சனம் குறித்த பொதுப்படையான, ஆனால் ஆழ்ந்த, கருத்துக் களைக் கூறும் கட்டுரைகள் அதில் இருந்தனவே தவிர, அதுவரை தமிழில் வெளி வந்திருந்த படைப்புக்களைப் பற்றிய விமர்சனம் எதுவும் எழுதப்பட்டிருக்கவில்லை.

1950 களில் 'சுதேசமித்திரன் வாரப் பதிப்பு' இலக்கிய விமர்சனத்துக்கு வழி அமைத்துக் கொடுத்தது.

சிறிது காலம் அந்த வாரப் பத்திரிகை ஆழ்ந்த இலக்கியத்தில் அக்கறை காட்டியது. தரமான

சிறுகதைகள், கவிதைகள், இலக்கியப் பிரச்னைகள் சம்பந்தமான கட்டுரைகளைப் பிரசுரித்தது, வருடம் தோறும் தீபாவளி மலர் என்று இலக்கியத் தரமான மலர் ஒன்றைத் தயாரித்து வெளியிட்டது.

அம்மலர்களில் க. நா. சுப்ரமண்யம் 'இலக்கிய விசாரம்' என்று இலக்கியம் சம்பந்தமாய் தனது கருத்துக் களை எழுதி வந்தார். புத்தகங்கள் பற்றியும் வாரப் பத்திரிகையில் அவர் கட்டுரைகள் எழுதினார்.

சிறுகதை பற்றிய சர்ச்சைக்கு உரிய கட்டுரை களை சுதேசமித்திரன் வாரப்பதிப்பு பிரசுரம் செய்தது. க. நா. சுப்ரமண்யமும், சி. சு. செல்லப்பாவும் சிறுகதை சம்பந்தமாகக் கூறிய கருத்துக்கள் கண்டனங்களையும் விவாதங்களையும் கிளப்பின.

தமிழ் சிறுகதை 1940 களுக்கு பிறகு வளரவில்லை; மணிக்கொடி எழுத்தாளர்கள் இலக்கியத் தரமான கதை களை எழுதினார்கள். அவர்களுக்குப் பிறகு சிறுகதை ஒரு தேக்க நிலையை அடைந்து விட்டது; பின்வந்த எழுத்தாளர்களில் எவரும் சிறுகதை இலக்கியம் வளர்வதற்கு உதவவில்லை என்று அவர்கள் இருவரும் கருத்து தெரிவித்திருந்தார்கள்.

அது சரியான விமர்சனம் இல்லை ; குறுகிய நோக்கு தான் என்று வேறு சிலர் மறுப்புக் கட்டுரை எழுதினார்கள்.

பிறகு, 'நல்ல சிறுகதை எழுதுவது எப்படி?' என்று சி. சு. செல்லப்பாவும், இன்னும் ஒன்றிரண்டு பேரும்

கட்டுரைகள் எழுதினார்கள். சு.மி. வாரப் பதிப்பின் விமர்சனப் பணி அத்துடன் நின்று விட்டது,

ஆனால், விமர்சனக் குரல்கள் அங்கங்கே எழத் தொடங்கின. சிறுகதையின் தேக்கம் பற்றி க. நா. சு. வும் சி. சு. செல்லப்பாவும், சந்தர்ப்பம் கிடைக்கிற போதெல்லாம், திரும்பத் திரும்பச் சொல்லி வந்தார்கள். அகிலன் போன்றவர்கள் அவர்களை எதிர்த்து மறுப்புக் குரல் கொடுத்தார்கள்.

என்றாலும், தமிழ் சிறுகதையின் வளர்ச்சி பற்றிய முறையான விமர்சனம் - பெயர் பெற்றிருந்த (சாதனைகள் புரிந்ததாகக் கருதப்பட்ட) சிறுகதை எழுத்தாளர்களின் படைப்புகளை விமர்சன ரீதியில் ஆய்வு செய்யும் முயற்சி எதுவும், எவராலும் மேற்கொள்ளப்பட்டதில்லை.

புதுமைப் பித்தன் தலைசிறந்த சிறுகதைப் படைப்பாளி; புதுமைப் பித்தன் கதைகள் மாபெரும் இலக்கிய சிருஷ்டிகள் என்றொரு கருத்தும் நிலவி வந்தது.

புதுமைப்பித்தன், க, நா. சுப்ரமண்யம், சி. சு. செல்லப்பா, மற்றும் 'மணிக்கொடி' எழுத்தாளர்கள் பலரும் 'சுத்த இலக்கிய வாதிகள்'. அதாவது, இலக்கியம் படித்து ரசித்து மகிழ்வதற்காகத் தான்; படைப்பாளிகளின் ஆற்றலை எடுத்துக் காட்டுவதற்காகத் தான் எழுத்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது தவிர இலக்கியத்துக்கு வேறு நோக்கம் - உள்ள

உயர்வுக்காக எழுதுவது, பண்பாட்டு உயர்வுக்காகவும் சமூக மேம்பாட்டுக்காகவும் படைப்புகளை உருவாக்குவது; சீர்திருத்த நோக்கத்தைப் புகுத்துவது போன்ற எதுவும்-கிடையாது; இருக்கவும் கூடாது. இது 'சுத்த இலக்கிய வாதிகள்' (அல்லது, தனி இலக்கிய வாதிகள்) கொள்கை ஆகும்.

1930 களிலும் 40 களிலும் இவர்கள் 'மறுமலர்ச்சி எழுத்தாளர்கள்' என்று பெயர் பெற்றிருந்தனர்.

இந்த 'சுத்த' அல்லது 'தனி' இலக்கிய (Pure Literature) போக்கிற்கு முற்றிலும் நேர்மாறானது 'முற்போக்கு இலக்கிய நோக்கு'.

வாழ்க்கை உண்மைகளை, – மனித மேன்மைகளை மட்டுமல்லாது மனித பலவீனங்களையும் குரூரங்களையும் கோளாறுகளையும் குறைபாடுகளையும், மனித உள்ளத்தின் பல்வேறு இயல்புகளையும் – எழுத்தில் பிரதிபலிக்க வேண்டும்; எதையும் எழுதலாம், எப்படியும் எழுதலாம்; ஆனால் எழுதுவதை கலை அழகுடன் எடுத்துக் கூற வேண்டும். இது மறுமலர்ச்சி எழுத்தாளர்களின் கருத்து ஆகும்.

அப்படி வாழ்க்கையை உள்ளபடி பிரதிபலிப்பது மட்டும் இலக்கியத்தின் வேலை இல்லை. வாழ்க்கையில் இன்றைய மனிதர்களில் பெரும்பாலோர் அனுபவிக்கிற கொடுமைகள், துயரங்களை மட்டும் பிரதிபலிப்பது போதாது; இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். உழைப்பவர்கள் உயர முடியாமல் வாழ்க்கை வசதிகள் வஞ்சிக்கப்

பட்டுள்ளதற்கான நிலைமைகளை, சமூக - பொருளாதாரச் சீர்கேடுகளை எல்லாம் யதார்த்தமாகச் சித்திரிப்பதோடு, வஞ்சிக்கப்பட்டிருப்பவர்களும் சுரண்டப்படுவோரும் வாழ்க்கையில் எதிர்த்துப் போராடுவதற்கான நம்பிக்கையையும் இலக்கியம் அவர்களுக்கு அளித்தாக வேண்டும். இது முற்போக்கு இலக்கிய நோக்கு ஆகும்.

இந்த நம்பிக்கையும் போராட்ட உணர்வும் அரசியல் தத்துவச் சார்போடு தான் ஏற்பட முடியும்; மார்க்சீய தத்துவமும், அதன் வழியில் செயலாற்றுகிற பொது உடைமைக் கட்சியும் தான் மக்களுக்கு வெற்றி பெற்றுத் தர இயலும் என்பதை வலியுறுத்துவதும் முற்போக்கு இலக்கியக் கொள்கை ஆகும்.

இந்தியாவில் வங்காளம், ஆந்திரம், கேரளம் ஆகிய பிரதேசங்களில் 1930 களிலேயே இந்த இலக்கியக் கொள்கை பலத்த செல்வாக்கு பெற்று விட்டது. தமிழ் நாட்டில் 1940 களில் தான் அடி எடுத்து வைத்து, மெதுமெதுவாக வளரத் தொடங்கியது.

1947 க்குப் பிறகு – அதாவது, இந்தியா அரசியல் விடுதலை பெற்ற பின்னர் - தமிழ் நாட்டிலும் முற்போக்கு இலக்கிய நோக்கு வேகமாக ஆதரவு பெறலாயிற்று. இந்த இலக்கியப் போக்கை ஆதரிப்பதற்கென்றே அவ்வப்போது பத்திரிகைகளும் தோன்றின.

அவற்றில், வ. விஜயபாஸ்கரன் ஆசிரியராக இருந்து நடத்திய 'சரஸ்வதி' யும் ஒன்று. அவர் ஒரு கம்யூனிஸ்டாக இருந்த போதிலும், அவருடைய

பத்திரிகையை நடுநிலை இலக்கிய ஏடு ஆகவே வெளியிட்டு வந்தார். முற்போக்கு இலக்கியவாதிகளின் எழுத்துக்களோடு, மறுமலர்ச்சி இலக்கியவாதிகளின் எழுத்துக்களையும் ஏற்றுப் பிரசுரித்தார்.

அதே காலத்தில், தொ. மு. சி. ரகுநாதன் திருநெல்வேலியிலிருந்து 'சாந்தி' பத்திரிகையை வெளியிட்டு வந்தார். அதில் தி. க. சிவசங்கரன், முற்போக்கு இலக்கியப் பார்வையோடு, புத்தகங்களுக்கு மதிப்புரை எழுதிக் கொண்டிருந்தார்.

இலக்கியவாதிகள் புதுமைப் பித்தனை ஒரே அடியாகப் புகழ்ந்து வந்தது தி. க. சி.க்குப் பிடிக்கவில்லை. அது முறையல்ல; புதுமைப் பித்தன் படைப்புகள் நியாயமான விமர்சனத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும்; பு. பி. கதைகளில் உயர்ந்த படைப்புகளும் உண்டு, சாதாரணமானவையும் உண்டு, மனிதாபிமானத்தோடும், சமூக நோக்குடனும், முற்போக்காகச் சில கதைகளைப் படைத்துள்ள அவரே பிற்போக்குத்தனமாகவும் நசிவுத் தன்மையோடும் பல கதைகளை எழுதியிருக்கிறார். அவர் எழுத்தில் புதுமையும் உண்டு, பித்தமும் உண்டு. அவரை தனிப் பெரும் சிறுகதை எழுத்தாளராகப் புகழ்ந்து கொண்டிருப்பதும், அவரது சமகாலச் சிறந்த படைப்பாளிகளான இதர 'மணிக்கொடி' எழுத்தாளர்களின் திறமையை இருட்டடிப்பு செய்வதும் சரியல்ல; எல்லோரது எழுத்துக்களையும் முறையாக விமர்சனம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி, 'வீர வணக்கம் வேண்டாம்' என்ற கட்டுரையை தி. க. சி. 'சரஸ்வதி' யில் எழுதினார்.

சர்ச்சைக்கு உள்ளான இவ்விமர்சனக் கட்டுரை தி. க. சி. க்கு நல்ல கவனிப்பு பெற்றுத் தந்தது. (இப்பவும் அந்தக் கட்டுரையைக் குறிப்பிட்டு, தி. க. சி யின் விமர்சன திறமையையும் நேர்மையையும் இலக்கியவாதிகள் பாராட்டுவது உண்டு.)

பின்னர் 'மணிக்கொடி எழுத்தாளர்கள்' கதைகளை ஆய்வு செய்யும் விமர்சனக் கட்டுரைகளை தி. க. சிவசங்கரன் 'தாமரை' மாத இதழில் எழுதினார்.

இலக்கிய விமர்சனத்தை வளர்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, சி. சு. செல்லப்பா 'எழுத்து' என்ற மாத இதழை ஆரம்பித்தார்-1960 களில். தமிழில் இலக்கிய விமர்சனத்துக்கு என்று ஆரம்பிக்கப்பட்ட முதல் பத்திரிகை இது தான். அது மட்டுமல்ல. பெருவாரியான வாசகர்கள் தேவை என்று எதிர்பார்க்காது, விற்பனைக்கு ஏஜண்டுகளையும் கடைகளையும் நம்பாது, குறைந்த அளவில் குறிப்பிட்ட எண்ணிக்கை சந்தாதார்கள் மட்டும் போதும் என வரையறுத்துக் கொண்டு, திட்டமிட்ட குறிக்கோளுடன் 'சிறு பத்திரிகை' ('லிட்டில் மேகசின்') என்று சொல்லியவாறு தமிழில் வெளிவந்த முதலாவது பத்திரிகையும் இது தான்.

'எழுத்து' இலக்கிய விமர்சனத்துக்கே முதலிடம் அளித்து முக்கியத்துவம் தந்தது. ஆரம்ப காலத்தில் சில மாதங்கள் க. நா. சு. விமர்சனக் கட்டுரைகளும் 'மயன்' என்ற பெயரில் கவிதைகளும் அதில் எழுதினார். பின்னர் 'எழுத்து'வில் எழுதுவதை நிறுத்திக் கொண்டார்.

'இலக்கிய வட்டம்' என்றொரு பத்திரிகையை க. நா. சு. சிறிது காலம் நடத்தினார். இதற்குள் அவர் விமர்சகர் என்ற முறையில் கண்டனங்களுக்கும் குறை கூறல்களுக்கும், ஓரளவு பாராட்டுதலுக்கும் ஆளாகி விட்டார்.

அதற்கு அவருடைய விமர்சன முறையே காரணம் ஆகும். க. நா. சு. படைப்பாளி என்ற தன்மையில் சில நல்ல நாவல்களை எழுதியுள்ளார். 'பொய்த்தேவு', 'ஒரு நாள்' என்ற இரண்டு நாவல்களும் குறிப்பிடத் தக்கவை. அவர் பல சிறுகதைகளும் எழுதியிருக்கிறார். அவை சிலரால் மட்டுமே பாராட்டப்படும் தன்மையில் உள்ளன.

இலக்கிய விமர்சனத்தில், பத்திரிகை எழுத்துக்கும் தரமான எழுத்துக்குமிடையே காணப்படுகிற பெரும் வித்தியாசத்தை க. நா. சு. சுட்டிக் காட்டினார். சிறுகதை எழுதுகிறவர்களில் நன்றாக, தரமாக எழுதியிருப்பவர்கள்- எழுதக்கூடியவர்கள் - ஒரு சிலர் தான் என்று பட்டியல் போட்டுக் காட்டினார். மற்றவர்களின் எழுத்துக்கள் எல்லாம் பிரயோசனமில்லாதவை என்று சொன்னார்.

க. நா. சு. நிறையப் படித்தவர். உலக இலக்கியப் பரிச்சயம் அதிகம் உடையவர். இலக்கிய ரசிகர் என்ற முறையில், தனது ரசனையையே உரைகல்லாகக் கொண்டு தமிழில் வெளிவந்திருப்பவற்றை எல்லாம் விமர்சிப்பதாக அவர் சொன்னார். புத்தகங்களையோ, பிறர் எழுத்துக்களையோ, மதிப்பீடு செய்து சொன்ன

போது, 'இது நல்ல எழுத்து' 'இது பயனற்றது' என்று மொத்தமாகக் குறிப்பிட்டாரே தவிர, விமர்சன ஆதாரத்தோடு, குறை நிறைகளை எடுத்துக் காட்டி அவர் விமர்சித்ததில்லை.

அவருக்கு விருப்பு வெறுப்புக்கள் மிகுதியாக இருந்தன, கதை ஆசிரியர்களின் பட்டியலில் வரும் பெயர்களை அவ்வப்போது அவர் மாற்றினார். ஒரு பட்டியலில் அவரே சேர்த்த சில பெயர்களை அடுத்த பட்டியலில் அவரே ஏன் நீக்கினார் என்பதற்குக் காரணமும் விளக்கமும் அவர் கொடுத்ததில்லை. விமர்சனம் என்பதே அவரவர் விருப்பு வெறுப்புகளைக் காட்டுவது தான் என்று அவர் சொல்வார்.

க. நா. சு. ஆங்கிலத்திலும் தமிழ் எழுத்துக்கள் பற்றி கட்டுரைகள் எழுதினார். ஒன்றிரு சமயங்களில், ஒரே புத்தகம் பற்றி தமிழில் ஒரு அபிப்பிராயமும், ஆங்கிலப் பத்திரிகையில் வேறுவித அபிப்பிராயமும் எழுதினார். அதைச் சுட்டிக் காட்டியவர்களிடம், 'ஒருவருக்கே இரண்டு அபிப்பிராயங்கள் இருக்கக் கூடாதா என்ன?' என்று கேட்டார்.

தமிழில் வெளிவருகிற அனைத்தையும், புதிதாக எழுதுகிறவர்களின் எழுத்துக்களைக்கூடப் படிப்பதாகக் க. நா. சு. சொல்வது வழக்கம். அவர் நிறையப் படிக்கிறார் என்பது உண்மை. ஆனால், விருப்பு வெறுப்பு இல்லாமல் 'புதிய புத்தகங்கள் - பல வருடங்களாக எழுதிக் கொண்டிருப்பவர்கள், புதிதாக எழுதுகிறவர்கள்,

இவர்களில் திறமையாளர்கள் எழுதியவற்றை — அவர் படித்ததில்லை; படிக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்த தில்லை. படித்த புத்தகங்களில் கூட, அவருக்கு வேண்டியவர்கள், அவரை ஆதரிப்பவர்கள், அவரை அனுசரித்துப் போகிறவர்கள் எழுத்துக்களை மட்டுமே பாராட்டிப் பேசினார்; எழுதினார்.

ஆகவே, க. நா. சு. .வின் விமர்சனங்களில் நேர்மையும் நாணயமும் இல்லை என்பதை இலக்கிய வாசகர்கள் விரைவில் புரிந்து கொண்டார்கள். 1960 களின் மத்தியில், அவர் 'இனி நான் தமிழில் எழுதப் போவதில்லை; இங்கிலீஷில் மட்டுமே எழுதுவேன்' என்று அறிவித்து விட்டு புது டில்லி போய் சேர்ந்தார்.

1950 களில் க. நா. சு. 'மௌனி' கதைகளை உயர்வு படுத்திப் பேசலானார். 'மௌனி' இருபத்திரண்டு அல்லது இருபத்து நான்கு கதைகளே எழுதியிருப்பினும், அவை அத்தனையும் சிறந்த சிறு கதைகள்; உயர்ந்த இலக்கிய சிருஷ்டி என்று புகழ்ந்து எழுதி வந்தார். தமிழில் மௌனி வழிபாட்டுக்கு வழி செய்தார் என்று சொல்லலாம்.

'மௌனி' என்ற புனைபெயரில் எழுதிய எழுத்தாளர் நல்ல சிறுகதைகள் எழுதியுள்ளார் என்பது சரி தான். அதே போல அவர் எழுதிய கதைகளில் சாதாரணமானவையும் அநேகம் இருக்கின்றன. அவர் காதல் தோல்வியால் விரக்தி அடைந்த ஒருவனின் மன உளைச்சலை வைத்தே பல கதைகள் எழுதியுள்ளார். சிக்கல் நிறைந்த தனிரக நடையை அவர் எழுத்தில்

கையாண்டார். அவருக்கு அளவுக்கு மீறிய புகழ்ச்சியை இலக்கியவாதிகள் சிலர் கொடுக்கிறார்கள்.

எனவே 'மௌனி வழிபா'ட்டை விமர்சித்து 'எழுத்து' பத்திரிகையில் சிலர் கட்டுரையும் கடிதங்களும் எழுதினார்கள்.

'எழுத்து' விமர்சனத்துக்காக ஆரம்பிக்கப்பட்ட போதிலும், எதிர்பாராத விதத்தில் அது புதுக்கவிதை வளர்ந்து வளம் பெறுவதற்கான அரங்கமாகச் செயல்பட நேரிட்டது வரலாறு ஆகும். எனினும், விமர்சனத் துறையிலும் 'எழுத்து' வின் சாதனைகள் பெருமைக்கு உரியன என்பதில் சந்தேகமில்லை.

க. நா. சுப்ரமண்யத்தின் விமர்சன முறை மேம்போக்கானது; வெறுமனே அபிப்பிராயங்களை உதிர்த்துச் செல்வது; சொந்த ரசனையின் அடிப்படையில் சொல்லப்படுவது.

ஆனால், சி. சு. செல்லப்பாவின் விமர்சன முறை ஆழமானது; ஆய்வு ரீதியானது; காரண காரியங்களுடன் விரிவாக விளக்கிச் சொல்லி முடிவுக்கு வருவது. 'அனலிட்டிக்கல் கிரிட்டிஸிசம்' என்ற வகையைச் சேர்ந்தது.

இவ்வகையில் அவர் 'மௌனியின் மனக்கோலம்' என்று, மௌனி கதைகளை ஆராய்ந்தும், 'புதுமைப் பித்தன் கதைக்கரு' 'ராமாமிர்தத்தின் கதைக் கலை' என்றும் எழுதிய நீண்ட கட்டுரைகள் முக்கியமானவை. புதுக்கவிதை பற்றியும் பல பயனுள்ள விமர்சனக்

கட்டுரைகளை 'எழுத்து' வெளியிட்டது. அவற்றில் பல்வற்றை சி. கனகசபாபதி எழுதினார்,

'எழுத்து' மூலம் வெங்கட்சாமிநாதனும் தருமுசிவராமுவும் நம்பிக்கைக்குரிய விமர்சகர்களாக அறிமுகமானார்கள்.

இக்காலகட்டத்தில் 'தாமரை'யும் இலக்கிய விமர்சனத்தைத் தீவிரமாக ஆதரித்தது. புதுக்கவிதையின் உள்ளடக்கத்தை ஆராய்ந்து பேராசிரியர் நா.வானமாமலை எழுதிய கட்டுரைகள் முக்கியமானவை.

அவரைத் தொடர்ந்து வேறு சிலரும் விமர்சனக் கருத்துக்களை அறிவித்தார்கள். அவற்றுக்கு மறுப்பாக சி. கனகசபாபதி போன்றவர்களிடமிருந்தும் கட்டுரைகளை வாங்கி 'தாமரை' பிரசுரித்தது.

முற்போக்கு இலக்கியம், மற்றும் பிற்போக்கு நசிவு இலக்கியங்கள் குறித்த விமர்சனங்களையும், நல்ல நாவல்கள், கவிதை நூல்கள் பற்றிய விமர்சனங்களையும் மதிப்புரைகளையும் 'தாமரை' வெளியிட்டுள்ளது. இவை எல்லாம் எழுத்துத் துறையில் புதிதாகப் பிரவேசிக்கும் இளையவர்களுக்கும், வாசகர்களுக்கும் இலக்கிய உணர்வு ஏற்படுத்தின.

சுத்த அல்லது தனி இலக்கியவாதிகள் செய்யாத-செய்யத் தவறிவிட்ட . சில முக்கியமான காரியங்களை, சமூகக் கண்ணோட்டத்துடன் (மார்க்சீயப் பார்வையோடு) அனைத்தையும் ஆராய்ச்சிக்கு உட்படுத்திய முற்போக்கு இலக்கியவாதிகள் செய்தார்கள். சிறுகதைகளை,

முக்கியமான தமிழ் நாவல்களை, குறிப்பிட்ட சில எழுத்தாளர்களின் படைப்புகளை, தங்கள் பார்வையில், விரிவான விமர்சனத்துக்கு உட்படுத்தி கட்டுரைகள் எழுதினார்கள்.

நா. வானமாமலையின் 'ஆராய்ச்சி' பத்திரிகை இவ்வகையில் நல்ல பணி புரிந்திருக்கிறது. நா. வா வழிகாட்டலில் ஆய்வில் ஈடுபட்ட சிலர், கவனிக்கப்பட வேண்டிய இலக்கிய விமர்சனங்கள் எழுதியுள்ளனர். நாவல்களை விமர்சிப்பதற்காக ஆய்வரங்கங்கள் ஏற்பாடு செய்து இலக்கிய உணர்வை வளர்த்தார்கள்.

இலங்கையில் மார்க்சீய விமர்சகர்களாகப் பெயர் பெற்ற டாக்டர் கைலாசபதி, டாக்டர் சிவத்தம்பி ஆகியோர் முறையான விமர்சனத்தை வளர்த்தவர்களில் முக்கியமானவர்களாவர்.

தமிழ் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ் நாவல்கள் பற்றி எல்லாம் இவர்கள் ஆய்வு நூல்கள் எழுதினார்கள். ஒப்பியல் ஆய்விலும் ஓரளவுக்கு ஈடுபட்டார்கள்.

'எழுத்து' பத்திரிகையின் தாக்கத்தினால், பின்னர் தோன்றிய சிறுபத்திரிகைகள் இலக்கிய விமர்சனத்தில் கவனம் செலுத்துவதையும் நடைமுறையாகக் கொண்டன. நடை, கசடதபற, பிரக்ஞை, கொல்லிப்பாவை போன்ற சிற்றேடுகள் இலக்கியத்துடன் நின்றுவிடாது, நாடகக் கலை, ஓவியம், தெருக்கூத்து முதலியவற்றிலும் அக்கறை காட்டி, அவை சம்பந்தமான விமர்சனக் கட்டுரை களையும் பிரசுரித்தன.

ஆயினும், இலக்கிய விமர்சனம் ஆரோக்கியமான தடத்தில் இட்டுச் செல்லப்படவில்லை. படைப்புகளை ஒதுக்கி விட்டு படைப்பாளிகளைப் பரிகசித்துத் தாக்குவது, தனிப்பட்ட காழ்ப்பு உணர்ச்சியால் குறித்த சில எழுத்தாளர்களைப் பழித்துக் கொண்டே இருப்பது; தங்களைத் தாங்களே புகழ்ந்து கொண்டே, தங்களுக்குப் பிடிக்காதவர்களையும், வேண்டாதவர்களையும், முரட்டடியாகத் தாக்குவது; எதுவுமே உருப்படியாக இல்லை, எல்லாமே மட்டம் தான் என்று திரும்பத் திரும்பக் கூறி, பக்கம் பக்கமாக, கட்டுரை கட்டுரையாக எழுதி பத்திரிகையின் பக்கங்களை வீணடிப்பது – இவை போன்ற காரியங்கள் 1960 களின் பிற்பகுதியிலும் 1970 களிலும் சிறு பத்திரிகைச் சூழலில் வெகு அதிகமாக நடைபெற்றன.

'எழுத்து' காலத்தில், விமர்சனத் துறையில் நல்ல வளர்ச்சி பெறக்கூடும் என நம்பிக்கை காட்டிய வெங்கட்சாமிநாதனும், தருமு சிவராமுவும் இப்போக்கின் தீவிர ஆதரவாளர்களாகச் செயல்பட்டார்கள். ஆரம்ப கட்டத்தில் பரஸ்பரம் புகழ்ந்து கொண்டு, மற்றவர்களைக் கடுமையாக விமர்சித்து வந்த இவ்விருவரும் விரைவிலேயே எதிர் எதிர் முகாம் அமைத்து, ஒருவரை ஒருவர் பழித்தும் பரிகசித்தும் தாக்கியும் நீளநீளக் கட்டுரைகள் எழுதுவதில் மகிழ்ச்சி காணலானார்கள்.

'யாத்ரா' என்ற காலாண்டு ஏடு வெ. சாமிநாதன் எழுத்துக்களை அதிகம் தாங்கி வந்தது.

மகாகவி பாரதியின் நூற்றாண்டு விழாவின் போது மிக நிறையவே பாரதியைப் பற்றிய புத்தகங்கள் வெளிவந்தன. அவற்றில் ஒரு சிலவே பாராட்டத் தகுந்த விமர்சன நூல்களாக அமைந்திருந்தன.

அவற்றில் குறிப்பிடத்தகுந்த தொ. மு. சி. ரகுநாதன் எழுதிய 'பாரதி - காலமும் கருத்தும்' என்பது. ரகுநாதன் ஏற்கனவே பாரதி பற்றி சில ஆய்வு நூல்கள் எழுதியுள்ளார். பாரதியையும் தாகூரையும் ஒப்பீடு செய்த ஆய்வும், பாரதியையும் ஷெல்லியையும் ஒப்பிட்டு எழுதியுள்ள ஆய்வும் முக்கியமானவையாகும்.

தமிழ் இலக்கிய விமர்சனத்துக்குப் பங்காற்றியவர்கள் என்று சென்னை கிறித்துவ இலக்கியச் சங்கம் (கிறிஸ்டியன் லிட்டரேச்சர் சொஸைட்டி - CLS) 'நண்பர் வட்டம்' குழுவினரைச் சொல்ல வேண்டும்.

திரு. டி. பாக்கியமுத்து இயக்குவிப்பில் இந்த அமைப்பு, பல வருடங்கள், ஆண்டுதோறும் பொங்கல் சமயத்தில், இலக்கியக் கருத்தரங்கு நிகழ்த்தியது. முக்கியமான தமிழ் எழுத்தாளர்களையும், ரசிகர்களையும், வாசகர்களையும் கருத்தரங்கு நிகழ்வுகளில் பங்கு பெறச் செய்தது. கருத்தரங்கு நாட்களில், ஒவ்வொரு நாளும் பல 'அமர்வுகள்' ஏற்பாடு செய்து, தமிழ் நாவல்களை விமர்சனம் செய்யும் கட்டுரைகளை வாசிக்க வகை செய்தது. பின்னர், அவ்ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து புத்தகமாகப் பிரசுரித்தது.

இக்கருத்தரங்குகள் இலக்கிய உணர்வு வளர்ந்து பரவுவதற்குத் துணை புரிந்தன. வெளியிடப்பட்ட நூல்கள் ஆய்வாளர்களுக்கும் இலக்கிய மாணவர்களுக்கும் பெரிதும் உதவக்கூடியவையாக அமைந்திருந்தன.

எனினும், இக்கருத்தரங்குகள் மேற்கொண்ட நாவல் ஆய்வுகள் பூரணமான விமர்சனம் ஆக மாட்டா. காரணம், ஒவ்வொரு வருடமும் குறித்த சில படைப்பாளிகளின் நாவல்கள் தான் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அந்நாவல்கள் கூட இலக்கிய அடிப்படையில் முழுமையான விமர்சனத்துக்கு உட்படுத்தப் பட்டதில்லை, 'தமிழ் நாவல்களில் மனித விமோசனம்' 'தமிழ் நாவல்களில் சாதி, சமூகப் பிரச்னைகள்' 'தமிழ் நாவல்களில் முற்போக்குக் கருத்துக்கள்' என்ற தன்மையில், ஏதேனும் ஒரு கோணத்தில் தான் ஆராயப்பட்டன. இந்நோக்கிலேயே விமர்சனக் கட்டுரைகள் தயாரித்து அளிக்கப்பட்டன.

இருந்த போதிலும், தமிழ் இலக்கிய உணர்வு வாசகர்களிடையே பெருகுவதற்கும், ரசிகர்களிடம், நாவல்கள் பற்றிய அறிமுகம் ஆழ்ந்து பரவுவதற்கும் திரு. பாக்கியமுத்து அளித்த ஊக்கமும் உற்சாகமும் பாராட்டப்பட வேண்டியவை. ஒவ்வொரு வருடமும், கருத்தரங்கின் கடைசி அமர்வாக, அக்காலகட்டத்திய சிறப்பான புதுநாவலை விரிவாக அறிமுகப்படுத்த அவர் திட்டமிட்டுச் செய்த பணி உயர்வானது தான்.

இந்த விதத்தில் ஐசக் அருமைராசனின் 'கீறல்கள்', ஆதவன் 'காகித மலர்கள்', நாஞ்சில் நாடனின்

'தலைகீழ் விகிதங்கள்', டானியல் எழுதிய 'பஞ்சமர்கள்' முதலிய நல்ல நாவல்கள் பரவலாக அறியப்படுவதற்கு பாக்கியமுத்து உதவியது நினைவுகூரத் தக்கதாகும்.

'நண்பர் வட்டம்' கருத்தரங்கு போன்ற இலக்கியக் கருத்தரங்குகள் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் ஏற்பாடு செய்யப்பட்டு, தமிழ் நாவல்கள் மட்டுமல்லாது, சிறுகதைகளும், கவிதைகளும் - தனித்த ஒரு கோணப் பார்வையில் மட்டுமின்றி, முழுமையாக – ஆய்வு செய்யப் பட்டு, விமர்சனக் கட்டுரைகள் படிக்கப்பட வேண்டும்.

அப்படிப்பட்ட வாய்ப்புகளும் வசதிகளும் சித்திக்கு மானால், தமிழ் நாட்டின் வாசகர்களிடையே புதிய விழிப்புப் இலக்கிய உணர்வும் பரவுவதற்கு வழி பிறக்கக் கூடும்.

இவ்வகையில், வேடந்தாங்கல் – விநாயக நல்லூர் இனியவன், 'இலக்கிய வீதி' என்ற அமைப்பு மூலம், பாராட்டப்பட வேண்டிய தன்மையில், இலக்கியப் பணி புரிந்து வருவதைக் குறிப்பிடாமல் தீராது.

பல வருடங்களாகச் செயலாற்றி வருகிற 'இலக்கிய வீதி' மாதம் தோறும் விமர்சனக் கூட்டம் நடத்துகிறது. புதிய புத்தகங்களும், எழுத்தாளர் படைப்புகளும், தக்கவர்களால், அங்கு விமர்சிக்கப்படுகின்றன. சில சமயங்களில், உரிய படைப்பாளியும் அழைக்கப்பட்டு, படிக்கப்பட்ட விமர்சனக் கருத்துக்களுக்கு அவர் பதில் அளிக்கவும் வகை செய்யப்படுகிறது.

இனியவன் 'இலக்கிய வீதி' நிகழ்ச்சியை ஒரே ஊரில் நடத்துவதில் திருப்தி கொள்வதில்லை. வெவ்வேறு இடங்களில் கூட்டம் ஏற்பாடு செய்து, வாசகர்களுக்கும் ரசிகர்களுக்கும் உற்சாகம் அளித்து வருகிறார்.

நவீன இலக்கியத்தில் ('மாடர்ன் லிட்டரேச்சர்') பல்கலைக் கழகங்கள் கவனம் செலுத்த முற்பட்ட பிறகு, பேராசிரியர்களில் சிலர் நாவல்கள், சிறுகதைகள், புதுக் கவிதைப் படைப்புகள் பற்றி எல்லாம் ஆய்வு நூல்கள் எழுதுவதில் ஆர்வம் காட்டியிருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்கது.

எனினும், பேராசிரியர்கள் சிலர் எழுதியுள்ள ஆய்வுகள், ஆழ்ந்த விமர்சன அடிப்படையில் அமையவில்லை என்பதும், பெரும்பாலும் பாடத்திட்ட அமைப்பில் கல்லூரிகளுக்குப் பாடநூலாக வைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் இத்தகைய புத்தகங்கள் எழுதப் படுகின்றன என்பதும், குறைபாடுகளுக்குக் காரணங்கள் ஆகின்றன.

இதே போல, எம். பில். பட்டப் படிப்புக்கு என்றும், பி. எச்டி. பட்டம் பெறுவதற்காகவும், எம். ஏ. படித்தவர்களும் கல்லூரி ஆசிரியர்கள் பலரும் தற்கால இலக்கியங்களை தனித்தனிப் படைப்புகளாகவும் குறிப்பிட்ட சில படைப்பாளிகளின் படைப்புகள் என மொத்தமாகவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறார்கள். இவற்றில் அநேக ஆய்வுகள் பின்னர் புத்தக வடிவம் பெறவும் செய்கின்றன.

இத்தகைய ஆய்வுகள் முழுமையான இலக்கிய ஈடுபாட்டுடன் செய்யப்படுவதில்லை, பட்டம் பெற வேண்டும் என்ற துடிப்புடையவர்களால், பட்ட ஆய்வுக் கென்று வரையறுக்கப்பட்ட விதி முறைகளுக்கு உட்பட்ட முறையில், சில 'ஃபார்முலா' க்களுக்குத் தக்கபடி தயாரிக்கப்படுகின்றன.

எனவே, இவற்றில் பெரும்பாலானவை மேலோட்டமானவையாக அமைந்து காணப்படுகின்றன. ஆழ்ந்த விமர்சனங்களாக இவை எழுதப்படுவதில்லை.

எம். ஏ. படித்தவர்களும், பேராசிரியர்களும், தரமான இலக்கியத்தில் உண்மையான அக்கறை கொண்டு, தற்காலப் படைப்புகளைப் படிப்பதிலும், அவற்றை சிரத்தையோடு ஆய்வு செய்வதிலும் முனைப்பு கொண்டால், விமர்சனத் துறை வளம் பெற முடியும்.

மொத்தமாகப் பார்க்கிற போது, தமிழில் விமர்சனக் கலை வளரவில்லை என்பது எளிதில் விளங்கும். இதற்குக் காரணம் என்ன?

இதற்கும் பத்திரிகைகளையும் புத்தகப் பிரசுரகர் களையும் தான் குற்றஞ்சாட்ட வேண்டியிருக்கிறது.

வெகுகாலமாகவே, பத்திரிகைகள் சிறுகதை களையும், தொடர்கதைகளையுமே விரும்பிப் பிரசுரிக் கின்றன. வாசகர்கள் இவற்றைத் தான் படிக்கிறார்கள்; கட்டுரைகளை அவர்கள் விருப்பத்தோடு படிப்பதில்லை; விமர்சனக் கட்டுரைகளை அவர்கள் தொடவே மாட்டார்கள்

என்பது பத்திரிகைகள், புத்தகங்கள் பிரசுரிப்பவர்களின் கருத்து. அதனால், அவர்கள் விமர்சனங்களை வரவேற்பதில்லை.

எழுதுகிறவர்களில் பெருமபாலோர் பத்திரிகைகளின், புத்தக வெளியீட்டாளர்களின், தேவையையும் விருப்பத்தையும் அனுசரித்தே எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி எழுதுகிறவர்களுக்குக் கதை எழுதுவது சுலபமான காரியமாக இருக்கிறது.

விமர்சனம் எழுதுவது என்றால், வெளி வருகிறவற்றை எல்லாம் படிக்க வேண்டும். அனைத்தையும் படிக்க இயலாது போனாலும், முக்கியமானவற்றையாவது வாசித்தாக வேண்டும். படிப்பதையே தேவையற்றது என்றும், 'போர்' (BORE) என்றும் கருதுகிற எழுத்தாளர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள். அப்புறம் அவர்கள் எப்படி விமர்சனத்தில் ஈடுபட இயலும்?

கேரளம் போன்ற அண்டை மாநிலங்களில் நிலைமை இவ்வளவு மோசமில்லை என்று தான் சொல்ல வேண்டும்.

மலையாளம் வாரப் பத்திரிகைகள் விமர்சனத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. விமர்சனக் கட்டுரைகளைப் பிரசுரித்து, வாசகர்களை சிந்திக்கத் தூண்டுகின்றன. தினசரிப் பத்திரிகைகள் கூட, வார அனுபந்தங்களில் இலக்கிய விஷயங்கள், எழுத்தாளர் பிரச்னைகள், புத்தக விமர்சனங்களை அதிகமாக

வெளியிடுகின்றன. இதனால் மலையாளத்தில் விமர்சகர்கள் பலர் வளர வாய்ப்பு கிட்டியுள்ளது.

''நம்முடைய மொழியின் மீது நமக்கு ஆழ்ந்த பற்று இல்லையென்று சொன்னால் தமிழ்ச் சகோதரர்கள் நம் மீது கோபித்துக் கொள்ளக் கூடாது. சாதாரணக் கதைகளைப் படித்துப் பொழுதைப் போக்குகின்றோம். நம்முடைய வாழ்க்கைக்கு வழிகாட்டக் கூடிய விஷயங்களைப் பற்றி சிந்திப்பது கூட இல்லை. நம்முடைய அறிவு பிரகாசிப்பதற்கானதைச் செய்கின்றோமில்லை. அதை நசுக்குகின்றோம். நம்முடைய இதயத்தை அழுக வைத்து விடுகிறோம். புழுக்கள் நுழைவதற்குக் கேட்பானேன்?'

அறிவு வளர்ச்சிக்கு உதவக்கூடிய தரமான நூல்களை எழுதியுள்ள அறிஞர் சாமிநாதசர்மா 1940 களில் இப்படி எழுதினார். அதன் பிறகு நிலைமை மோசமாகத் தான்போயிருக்கிறது என்பதை நம்நாட்டின் சகல நிலைமைகளையும் கவனித்து வந்திருப்பவர்கள் – கவனிப்பவர்கள்- உணர்வார்கள்.

வாசகர்களின் அறிவுத் தரம் உயர்ந்து விடாதபடி அவர்கள் ரசனையைக் கெடுத்து, நல்லுணர்வுகளை மழுங்கடிக்கும் நச்சு எழுத்துக்களையும் நசிவுப் படைப்புகளையும் மேலும் மேலும் உற்பத்தி செய்து, நாட்டு மக்கள் மீது திணிப்பதில் கருத்தாக இருக்கிறார்கள் பத்திரிகைகளை வணிகத் தொழில் முறையில் நடத்துகிற பண அதிபர்கள்.

பத்திரிகைகளின் தரம் குறைந்த தன்மைகளை விடாது எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கும்

விமர்சகர்களில் க. நா. சுப்ரமண்யமும் ஒருவர். எழுத்தின் தரம் உயர வேண்டும் என்றும் கூறி வருகிறார் அவர்.

க. நா. சு. வின் விமர்சனக் குரல் 1980 களில் மீண்டும் தமிழ்ப் பத்திரிகைகளில் ஒலித்து வருகிறது. எதிர்ப்புகளையும் குறைகூறல்களையும், கண்டனங்களையும் தாக்குதல்களையும் ஏற்றுக் கொண்டு அவர் ஓயாது தனது விமர்சகக் கருத்துக்களை, சமயம் கிடைக்கும் போதெல்லாம், கிடைக்கிற இடத்தில் எல்லாம், துணிந்து கூறிக் கொண்டிருக்கிறார்.

அவருடைய இந்தக் குணத்தைப் பாராட்டலாம். ஆயினும், முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களையும், தனது அபிப்பிராயங்களையே மறுக்கின்ற கூற்றுக் களையும், குழப்பமயமான சிந்தனைகளையும் க. நா. சு. தனது விமர்சனக் கட்டுரைகளில் அள்ளித் தெளித்துக் கொண்டிருக்கிறார். இது அவருடைய விமர்சனத் திறனைக் களங்கப்படுத்தும் குறையேயாகும்.

நம்பிக்கை தரும், நேர்மையான, திறமையும் இலக்கிய நோக்கும் கொண்ட விமர்சகராக என். ஆர். தாசன் 1980 களில் தெரிய வந்திருக்கிறார். 1920 முதல் 1940 வரையிலான சிறுகதை எழுத்தாளர்களின் படைப்புகளை ஆய்வு செய்யும் 'மூன்று பார்வைகள்' என்ற நூலில் அவர் எழுதியுள்ள விமர்சனக் கருத்துக் களும், 'கு. அழகிரிசாமியின் படைப்புகள்' என்ற விமர்சன நூலும் தாசனின் திறமைக்கும், நேர்மைக்கும், உண்மை உழைப்புக்கும் சரியான எடுத்துக்காட்டுகள் ஆகும்.

இந்த விதமான விமர்சன முயற்சிகள் தமிழில் அதிகம் தோன்ற வேண்டும்.

---



வல்லிக்கண்ணன் (ராஜவல்லிபுரம் கிருஷ்ண சுவாமி) ஐம்பது வருடங்களுக்கும் மேலாகவே பத்திரிகைகள், புத்தகங்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள் உலகத்தை ஒரு ஆய்வு மாணவனின் அக்கறையோடு கவனித்து வரும் இலக்கிய வாதி ஆவார். கதை, நாவல், கட்டுரை, கவிதை, நாடகம் ஆகிய பல துறைகளிலும் அவரது திறமை வெளிப்பட்டிருக்கிறது, எனினும், வரலாற்று ரீதியில் ஓரளவு திறனாய்வும் கலந்து அவர் எழுதியுள்ள 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' 'சரஸ்வதி காலம்' 'பாரதிக்குப் பின் தமிழ் உரைநடை' 'தமிழில் சிறுபத்திரிகைகள்' 'எழுத்தாளர்கள் பத்திரிகைகள் – அன்றும் இன்றும்' ஆகியவையே அவரை அதிகம் கவனிப்புக்கு உரியவராக்கின என்று சொல்லலாம். நேர்மையான முறையில், எந்தப் பக்கமும் சாயாது, நடுநிலை நோக்குடன் தனது மனப்பதிவுகளை எழுத்தாக்கும் வ. க. வின் ஆற்றலை இந்த நூலும் வெளிப்படுத்துகிறது. தமிழில் இது ஒரு வித்தியாசமான புத்தகம்.

— சோலைத் தேனீ